# கலைமுகம்

காலாண்டு கலைஇலக்கிய இதழ்



மூலதன ஆசனத்தில்
மூர்க்கமாய் அமர்ந்துகொண்டு
பெண்கள் உரிமைகளை
பறிந்தெடுத்த பாண்டியரே!
வரலாற்றுச் சிலம்புடனே
வருகிறோம் வழக்குரைக்க!
-செங்கனல்



புரட்டாதி - மார்கழி

# தாய்மை



பெண்மையின் உயர்வு தாய்மை
தாய்மை இன்றேல் நாமும் இல்லை
தன்னலமற்றது தாய்மை
தாயின் உருவம் தூய்மை
தூய்மையின் வடிவம் தியாகம்
உன்னை உயர வைக்கும்
தாய்மையின் உன்னத சிந்தை

கருவிலே உண்டான மகவை
உயிருடன் தந்தவள் தாய்
எத்திசை யோகினும் நற்புகழ் சேர
நானிலம் நின்றவள் தாய்
உலகம் உய்ய துணை அவள்
பொறுமை காக்கும் கரம் அவள்
உருகி நிற்கும் மெழுகு அவள்

இறைவன் தந்த நன்னையே பெண்மை
பெண்மை இன்றேல் நன்மை இல்லை
தவத்தின் மேன்மை தாயின் பாசம்
பிள்ளையன் கவசம் தாயின் பந்தம்
தரணியில் சிறந்தது தாயின் அன்பு
தாலாட்டில் மகிழ்வமு சேயின் இதயம்
தாய்மை இன்றேல் நாமும் இல்லை.

ஆக்கம்
டார்வின்.

காலாண்டுச் சஞ்சிகை

# கலைமுகம்

கலை இலக்கிய சமூக இதழ்

**கலை: 15 முகம் : 03/04**

**பிரதம ஆசிரியர்**
நீ. மரியசேவியர் அடிகள்

**பொறுப்பாசிரியர்**
செல்வி ஜெ. தாரிணி

**கணணி அச்சு**
செல்வி அ. குயின் ஜான்சி


**அட்டைப்பட வடிவமைப்பு**
**பக்க வடிவமைப்பு, அச்சுப்பதிவு**
Lanka Publishing House
No. 340-1/6, Trust Complex, Sea Street,
Colombo-13. Sri Lanka.
Tel : 0094 71 488 083

**தொடர்புகளுக்கு**
Centre for Performing Arts
19-5/6 Milagiriya Avenue,
Colombo-04, Sri Lanka.
Tel : 2597245 Fax : 2556712
E-mail : saveri@dynanet.lk
web site: www.cpartsteam.org

**திருமறைக் கலாமன்றம்**
**238, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை**
**தொலைபேசி : 021-2222393**
E-mail: cpajaffna@sltnet.lk



# உள்ளே...



## கட்டுரைகள்


80க்கு முன்னரும் பின்னரும் யாழ்ப்பாண நாடகங்கள்


காப்பியத்தில் விதவைகள் கண்ணகி, மாதவி

அம்பைகள் சிகண்டிகளாக வேண்டும் பீஷ்மர்களை வீழ்த்த அல்ல

தேசிய பிரச்சனையும் குறியீடும்


## ஆய்வுக் கட்டுரை


போரின் வன்முறையால் பாதிக்கப்பட்ட தனிப்பெண்கிள் வாழ்வும் தனிப்பெரும் துயரங்களும்

## கவிதைகள்


வாழ்க்கை

வந்தேன் பார்த்தேன் தோற்றேன்

தாய்மை

போரில்லா வாழ்வுக்காக...

லயம்

மனிதம் வாழ...

போரும் வாழ்வும்


முன்னுணர்ந்து சொல்லும் உறுதி

புது வருடம்




## நேர்காணல்


பத்மலோஜினி குணராசசிங்கம்

## சிறுகதைகள்


முகத்தைத் தொலைத்தவன்

ஒரு தலையும் ஒன்பது முகங்களும்

தோம்புத்துரை

# வணக்கம்

“ எனது ஒரு கையில் ஒலிவ இலை, மறு கையில் துப்பாக்கி, துப்பாக்கியை விட்டாலும் கூட ஒலிவ இலையை விடமாட்டேன்” என்று ஐ.நா சபையில் கூறிய அந்த மா மனிதன் ஜசீர் அரபாத் மறைந்து போனாலும் அந்த நிகழ்வும் அந்தக் கருத்தும் காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பது திண்ணம்

இன்று எங்கும் எப்பொழுதும் சமாதானம் பற்றியே உலகம் பேசுகின்றது. காரணம் அதன் வெற்றிடத்தில் ஏற்பட்ட கோர விளைவுகள், துன்பங்கள், சோகநிகழ்வுகள் சொல்லில்- அடங்கா. அநாதையான சிறுவர்கள், விதவையான தாய்மார்கள், முடமான இளைஞர்கள், வீடிழந்த குடும்பங்கள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

உண்மையான, உறுதியான, நிரந்தரமான சமாதானத்தை அடைந்தாலன்றி இத்துன்ப விளைவுகளுக்கு முடிவே இருக்காது. இதனை அடைவதற்கு ஒரே வழி அனைத்து மாந்தரும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்கான ஒரு வழியை வகுப்பதே ஆகும். வகுப்பது மாத்திரமல்ல அந்த இலட்சியத்தோடு வாழ ஒவ்வொரு மாந்தரும் முனைதலவும் வேண்டும். ஒடுக்குமுறை, ஏற்றத்தாழ்வு, இனபேதம், சுரண்டல், வன்முறை, சர்வாதிகாரம், அற்ற ஒரு உலகை காணவேண்டும் என்ற இலட்சியத்தை முன்வைத்து இன்றைய இளைஞர் சமுதாயம் உழைக்க வேண்டும். இதற்கான விழிப்புணர்வை இங்கு மட்டுமல்ல அகில உலகமும் முன்னெடுத்துச் செல்வதே எமது மன்றக் கலைஞர்களின் மகத்தான பணியாக அமையப்போகின்றது. இனி வரும் எமது ஒவ்வொரு நகர்வும் புதுயுகம் நோக்கிய ஒரு புறப்பாடாக இருக்கவேண்டும் என்பதே எமது இலட்சியம்.


உலகக் கலைஞர்கள் அனைவரும் ஒரணியில் திரண்டு புதியதோர் விடியலுக்காய் பூபாளம் இசைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

பி.மரிய சேவியர் அடிகள்



# காப்பியத்தில் விதவைகள்

## கண்ணகி, மாதவி



### ஒரு மீள்பார்வை

சிலப்பதிகாரம் தமிழில் எழுதப்பட்ட முதல் காப்பியம். கிபி 04ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வணிகவர்க்கம், அரசவர்க்கத்திலும் சிறப்பும் பலமும் வாய்ந்த வர்க்கமாக வளர்ச்சியடைந்து வந்தது. இளங்கோ வணிகவர்க்கத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு துறவியும் அல்ல. சமணத்தமிழ் மகன். வணிக சமுதாயத்தின் நலன்களுக்கு சமணமதம் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. எனவேதான் இளங்கோ அடிகள் சமணமதத்தின் மேன்மையையும், வணிகவர்க்கத்தின் வளர்ச்சியையும்,உயர்ச்சியையும் சிலப்பதிகாரம் என்ற காவியத்தில் பாடியுள்ளார்.

இளங்கோ அடிகள் யார்? என்ற சிலப்பதிகாரம் பற்றிய ஒரு சமூகவியல் ஆராய்ச்சி நூலில் மேற்குறிப்பிட்ட விடயங்களை நிறுவியுள்ளார் ரகுநாதன். இதை ஒரு தகவல்களுக்காகவே இங்கு குறிப்பிடுகிறேன்.

இந்தக் காப்பியத்தில் இரு பெண்கள் முதன்மை பெறுகிறார்கள். ஒருத்தி உயர்வணிக குலத்தைச் சார்ந்தவர்கள். பெயர் கண்ணகி. மற்றவள் ஒடுக்கப்பட்ட, இழிவு படுத்தப்பட்ட கணிகையர் குலத்தில் பிறந்தவள். பெயர் மாதவி. இவர்கள் இருவருக்கும் கணவன் ஒருவனே. அவன் பெயர் கோவலன்.

எதிரும் புதிருமான வர்க்கத்தைச் சேர்ந்த கண்ணகியும் மாதவியும் கோவலன் பாண்டிய மன்னனால் கொல்லப்பட்ட பின் விதவைகள் ஆனார்கள். கண்ணகிக்குப் பிள்ளை இல்லை. மாதவிக்குக் கோவலன் மூலம் "மணிமேகலை" என்ற ஒரு மகள் பிறந்தாள்.

அன்றைய நிலவுடைமைச் சமுதாயத்தில் அவர்கள் இருவரும் என்னவாக இருந்தார்கள்? அவர்களுடைய சமூகபாத்திரம் என்னவாக இருந்தது என்பதை ஆராய்ந்து பார்ப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

சிலப்பதிகாரம் அன்றைய நிலவுடைமைச் சமூதாயத்திற்கும், அச்சமூகத்திற்கு முன்பின்பாகக் கருவாகி, உருவாகி உயர்ந்தோங்கி வந்த புதிய வர்க்கமான வணிகவர்க்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட போட்டி, முரண்பாடு, மோதல் முதலியனவற்றையும், வணிகவர்க்கத்தின் சிறப்பையும், விளக்க எழுந்ததே சிலப்பதிகார காப்பியம்.

கி.மு 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளுக்குமுன் கண அமைப்பைக் கொண்ட சமுதாய அமைப்பு முறை நிலவியது. கூட்டு உழைப்பு, கூட்டுப்பகிர்வு, கூட்டுஉறவு என்ற அடிப்படையில் வாழ்க்கை நடைபெற்றது. தனிச் சொத்துடைமை இருக்கவில்லை. உழைப்புக்கருவிகள் கூட அந்தக் கூட்டமைப்புக்கே சொந்தமாக இருந்தது. இச்சமூகத்தில் போட்டி, வன்மப்பகை அதன் வழி போரும் இடம் பெறவில்லை.

ஆனால், காலப்போக்கில் உற்பத்தி கருவிகளில் ஏற்பட்ட வளர்ச்சி, உற்பத்திப்பொருள்களில் ஏற்பட்ட பெருக்கம், தொழில் பிரிவினைகள் தனிச்சொத்துடைமையை நோக்கி வளர்ச்சிடைந்ததால், அந்தக் கூட்டமைப்புத் தகர்ந்தது. பிரதான உற்பத்திச்சக்தியாகிய நிலம் ஒரு சிலருடைய கையில் வந்து சேர்ந்தது. அவர்கள் நிலப்பிரபுக்கள் அல்லது நிலக்கிழார்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இது நிலவுடைமைச் சமுதாயம் எனப்பட்டது. நிலவுடைமையாளர்களின் காவலர்களாக மன்னர் ஆட்சி அதாவது முடியாட்சி உருவானது.

இதன் காரணமாக, கூட்டமைப்புச் சமுதாயம் சிதைவடைந்து அதில் நிலவிய அமைதி, பரஸ்பர உறவு மகிழ்ச்சி அனைத்தும் குலைந்தது. தனிச் சொத்துடைமையின் காரணமாக சமுதாயத்தில் போட்டியும், பொறாமையும், சுரண்டலும், அடிமைத்தனமும், ஒடுக்குமுறையும், பகைமையும், கொலையும், கொள்ளையும், வதையும், ஓயாத போரும் தலைவிரித்துத் தாண்டவமாடியது. தொழில் பிரிவுகளின் காரணமாக சாதிவேறுபாடுகளும், சாதிக்கொடுமைகளும், மனிதனைக் கண்டு மனிதன் அஞ்சும் அன்னியமான நிலைமையும் உருவானது. பசியும், பிணியும், பகையும், போரும், பட்டினிச்சாவும் இச்சமுகத்தின் வாழ்நிலை ஆகின. அரசர்கள் தமது சுகபோகவாழ்விற்காக கேளிக்கை விளையாட்டுக்காக, ஒடுக்கப்படும் வர்க்கத்தினரைக் கசக்கிப்பிழிந்தனர்.

நிலவுடைமைச் சமுதாய அமைப்பும், அதன் உற்பத்தி முறைகளினாலும் ஒரு புதிய வர்க்கம் உருவானது. அதுதான் வணிகவர்க்கம். இந்த வர்க்கம் எப்படி உருவானது என்பதை உணர்ந்து கொண்டால்தான், அது சமுதாயத்தில் வகிக்கும் பங்கையும் உணர்ந்து கொள்ளமுடியும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் ஐந்திணைகளில் ஒன்றான நெய்தல்நிலமே இந்த வணிகவர்க்கத்தின் கருவறையும் தொட்டிலுமாகும். கடலும், கடல்சார்ந்த மணல்பாங்கான நிலப்பரப்பையே நெய்தல் என்பர். இந்த மக்கள் கடலை நம்பியே வாழ்ந்தனர். சிறிய கட்டு மரம், திமில் என்பவற்றில் கடலில் சென்று சிறிய வலைகள், உளி, குத்து ஈட்டிகள் முதலிய கருவிகளைக் கொண்டு மீன்பிடித்தனர். கூட்டாகவே உழைத்தனர். கிடைத்த மீன்களைக் கூட்டாகவே பகிர்ந்து உண்டனர். இரத்த உறவுமுறையுடன் கட்டுண்டு கிடந்தனர். இவர்கள் மீன்பிடித்தலோடு கழியில் கடல்நீரைத்தேக்கி வெயிலில் உலர்த்தி கருவாடாக்கினர். இவர்கள் 'பரதவர்' என்று அழைக்கப்பட்டனர். இந்த கூட்டமைப்புக்கு ஒருவன் தலைவனாக இருந்தான். பழந்தமிழ் இலக்கியங்கள் அவனைத் 'துறைவன்' எனச் சொல்கின்றன. அவர்கள் குடியிருக்கும் பகுதி 'பாக்கம்' என்று அழைக்கப்பட்டது.

கால ஓட்டத்தில் மீன்பிடி, உப்பு உற்பத்தி, கருவாடு உற்பத்தியில் அபிவிருத்தி ஏற்பட்டது. இதனால் தங்கள் தேவைக்கு மிஞ்சிய, மீன், கருவாடு, உப்பு இவைகளைப் பண்டமாற்றுச் செய்யத்தொடங்கினர். மருதநிலத்தில் விளைந்த நெல், அரிசி, பயறு போன்ற தானியங்களுக்காகப் பண்ட மாற்றுச் செய்தனர். தொடர்ந்து உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு ஆள்கள் தேவைப்பட்டனர். மீன்பிடியும் உப்பு உற்பத்தியும் இருவேறு தொழில் பிரிவாக, வேலைப்பிரிவினையாக மாறியது. உப்பு, கருவாடு முதலிய பொருள்களைச் சுமந்தோ, கழுதைமீதோ, வண்டிமீதோ, கடலில் கட்டு மரங்கள் மீதோ கொண்டு சென்று விற்பனை செய்யும் ஒரு தொழில் பிரிவினர் உருவாயினர். இவர்கள் 'உமணர்' என அழைக்கப்பட்டனர்.

இந்த உமணர்களே பிற்காலத்தில் வணிகர் என்ற புதிய வர்க்கமாக, சாதியாகப் பரிணமித்தனர். வணிகத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, வெளிநாடுகளுடனும் பண்டமாற்று மற்றும் பரிவர்த்தனைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் உற்பத்தியாளர்கள் அல்ல. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்க்கும் இடையில் இடைநிலையாளர்களாகச்செயற்பட்டு உற்பத்தியாளர்களை விடவும் பெரும் இலாபம் ஈட்டினர்.

இந்த வணிகக் குழுமத்தினர் தங்கள் விற்பனைப் பொருட்களைத் தரைவழி, மற்றும் கடல்வழிக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக, வாள், ஈட்டி, கத்தி போன்ற ஆயுதங்களைக் கொண்ட சிறு படைப்பிரிவையும் வைத்திருந்தனர். குழுக்களாகச் செயற்பட்டனர். இந்தக் குழு 'சாத்து' எனப்பட்டது. இந்தக் குழுவின் தலைவன் சாத்தன் எனப்பட்டான். கோவலனின் தந்தை மாசத்துவன் என்று அழைக்கப்பட்டது இதன் பின்னணியில்தான், வணிகர்கள் தங்களுக்கென சிறுபடைப்பிரிவை வைத்திருந்தனர் என்பதற்கு ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய "சிந்து முதல் கங்கைவரை" என்ற நூலில் சான்றுகள் உள்ளன.

இளங்கோ அடிகள் இந்த வணிகவர்க்கத்தின் உயர்நிலையையும், சமணத்தின் சிறப்பையும் பாடுபொருளாகக் கொண்டு, சிலப்பதிகாரம் என்ற கோவலன் கண்ணகி கதையை எழுதினார். கோவலன் கண்ணகி கதை இளங்கோ அடிகளின் சொந்தக் கற்பனை அல்ல, ஏற்கனவே பழைய நாட்டார் கதைகளிலும் புராணங்களிலும் பல்வேறு கோவலன் கண்ணகி கதைகள் கூறப்பட்டுள்ளன. அந்தக்கதைகளில் ஒன்றைத்தான் இளங்கோ தனது காப்பியத்தில் கையாண்டுள்ளார். பழைய கோவலன் கண்ணகி கதைகளுக்கும் இளங்கோவின் கதைக்கும் மிகுந்த வேறுபாடுள்ளது.

*மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு கண்ணகி, மாதவி பற்றிய விடயத்திற்கு வருவோம்.*

கண்ணகி, தனது கணவன் கோவலன் பாண்டியனால் கள்வன் என்று பழிசுமத்தப்பட்டுக் கொலை செய்யப் பட்டதற்குப் பழிவாங்கும் மனோபாவத்துடன் மதுரைமாநகர் சென்றாள். கணவனை இழந்த உயர் வணிககுலத்து விதவையாகிய கண்ணகி, வழக்காடச் சென்ற நெஞ்சத்துணிவின் பின்னணியில் அவளது உயர்வர்க்க ஆளுமை வெளிப்படுகிறது. பாண்டியனைப் பழிக்குப் பழிவாங்கவேண்டும் என்ற அவளுடைய பழவாங்கும் உணர்விற்கு உந்து சக்தியாக இருந்தது அவளது வர்க்க உணர்வுதான். தன்னைப்போன்ற பெண்களுக்கு ஆணதிகாரவர்க்கத்தினால் இளைக்கப்படும் கொடுமைகளுக்கு ஒரு தீர்வுகாணவேண்டும் என்ற எண்ணம் அவளிடம் எழவில்லை, அந்தச் சமுகச்சூழலை பொறுத்தவரை, அப்படி ஓர் எண்ணம் அவளுக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை.

மதுரையில் பாண்டியனைக்கொன்றதோடு அவள் பழிவாங்கும் உணர்வு ஒழிந்து விடவில்லை. கோவலனைப்பிரிந்து துன்பத்தைஅனுபவித்த அவள், கோவலன் தன்னிடம் திரும்பி வந்தபோது வாழ்க்கை பற்றிய அவளது இன்பக்கனவுகள் மீண்டும் பூத்துக்குலுங்கின. ஆனால் மதுரையில் கோவலன் கொல்லப்பட்டபோது அவளுடைய இன்பக்கனவுகள் சிதறடிக்கப்பட்டன. அதை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அது அவளுக்கு கோபக்கனலை மூட்டியது. அதனால் மதுரை நகரத்தையே எரித்துச் சாம்பலாக்கி நெஞ்சுதணித்தாள். இது அவளுடைய உயர் வர்க்க மனோபாவம். தனிமனிதர்களைப் பழவாங்குவதன் மூலம் சமூகஅநீதியை ஒழித்து விடலாம் என்ற தப்பறையான எண்ணமே அவளிடம் மிஞ்சி நின்றது. அத்தோடு தான்

பாண்டியனுக்குச் சளைத்தவள் அல்ல என்ற எண்ணப் பாங்கும் அவளிடம் இருந்தது.

ஆனால், மாதவியை பொறுத்தவரை, அவளது நிலைமை வேறு விதமாக இருந்தது. அவள் கணிகையர் குலத்தைச் சேர்ந்தவள். ஆடல் பாடல் கலைகளில் வல்லவள். தனது கணவன் கோவலன் கொல்லபட்டதும், பழிக்குப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணம் அவளிடம் எழவில்லை. அவளிடம் பழிவாங்கும் மனோபாவம் இல்லை. அவளைப் பொறுத்தவரையில் அன்றைய சமூக சூழலில் அவளுக்குப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் எழவாய்ப்பு இருக்கவில்லை. தான் தனிமரமாகிப்போன உணர்வே மேலோங்கியிருந்தது. கணிகையர் குலத்திற்கும் தனக்கும் ஏற்பட்ட, அடிமைத் தனமான அவமானகரமான வாழ்கையிலிருந்து விடுபடும் ஒரு மார்க்கத்தையே அவள் தேடினாள். அவளுடைய அந்தத் தேடல் பௌத்தமதத்தில் அளவளைக் கொண்டுபோய் நிறுத்தியது.

புத்தருக்குமுற்பட்ட காலத்தில் அன்றைய சமுதாயத்தில் நிலவிய கணஅமைப்பு அதாவது கூட்டமைப்புத் தகரத் தொடங்கியது. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்புமுறை தலைதூக்கியதோடு கூடவே முடியாட்சிமுறையும் தோற்றம் பெற்றது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் அன்று நடைமுறையிலிருந்த கண அமைப்புகளின் எச்சசொச்சங்களின்மேல் தனிச்சொத்துடைமை வர்க்கம் கொடுமையான ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அதைநிர்மூலமாக்கியது. இதுவரை சமூகம் கண்டறியாத துன்பகரமானநிகழ்வுகள் வாழ்வியலாது. அடிமைத்தனம், ஒடுக்குமுறை, சாதிப்பாகுபாட்டுக்கொடுமை, வறுமை, பசிபிணி, பட்டினிச்சாவு, வதை, கொலை, ஈவிரக்கமற்ற முடியாட்சிப் போர்கள் தலைவிரித்துத் தாண்டவமாடின.

அந்தக் காலகட்டத்தில்தான் சாங்கிய குலத்தில் குறுநில மன்னர் பரம்பரையில் வந்த புத்தர் இந்தக் கொடுமைகளைக் கண்டு மனம் நொந்தார். தனது அரச பதவியைத் துறந்து துறவியாகி "சங்கம்" என்ற ஒரு புதிய அமைப்பை நிறுவினார். பழைய கணஅமைப்பின் அல்லது கூட்டமைப்பின் தார்மீக நிழலாக இச்சங்கம் அமைந்தது. அன்றையகாலகட்டத்தில் நிகழ்ந்த கொடுமைகளுக்கும், துன்பங்களுக்கும் தீர்வுகாணும், ஒரு மாற்றீடாகப் புத்தர் தன் சங்கத்தை நிறுவினார். இந்தச் சங்கத்தில் உயர்வில்லை, தாழ்வில்லை, சாதிக்கொடுமை இல்லை, வர்க்கப்பேதம் பால்பேதம் இருக்கவில்லை. புத்தரின் போதனைகளை ஏற்றுக் கொண்ட எவரும் சங்கத்தில் சேரலாம். இந்தச் சங்கத்தில் தாழ்ந்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் சேர்ந்து கொண்டார்கள். இதனால் அவர்கள் சாதிக்கொடுமைகள், இழிவுகளிலிருந்து விடுபட்டு ஒரு கௌரவம்மிக்க சமூக அந்தஸ்தைப் பெறக் கூடியதாக இருந்தது.

வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, பிணி ஒழிப்பு, போர்ஒழிப்பு, சாதிஒழிப்பு, மது ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு, சிறைஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, உயிர்கொலை ஒழிப்பு முதலிய பல்வேறு சீர்திருத்தங்களில் சங்கம் மும்முரமாகச் செயற்பட்டது. விதவைகளுக்குக்கூட சங்கத்தில் இடமிருந்து, துன்பங்களிலிருந்து விடுதலை பெற, "நிர்வாணம்" அடையப் புத்தரின் சங்கம் ஊக்கமளித்தது. பெண்களின், விதவைகளின் துறவத்தை அங்கிகரித்தமை, அன்றைய நிலவுடைமைச் சமூதாயத்தில் நிகழ்ந்த பெரும்புரட்சியாகும்.

விதவையான மாதவி புத்தருண்டைய சங்கத்தில் சேர்ந்து கொண்டதற்கும் துறவறம் பூண்டதற்கும் கோவலன் கொல்லப்பட்டமை ஓர் உடனடிக்காரணமேயன்றி, அது ஓர் அடிப்படைக் காரணமாக இருக்கவில்லை. அவளுடைய கணிகையர்குலத்து வாழ்க்கை முறையும் அடிமைத்தனமும், அரசவர்க்கத்தின் ஒடுக்குமுறையும், அது மனித குலத்தின்மேல் கட்டவிழ்த்து விட்ட சீரழிவுகளும் பிரதானகாரணிகளாக அமைந்தன. தனது மகள் மணிமேகலையையும் சங்கத்தில் சேர்த்துத் துறவியாக்கியதையும் இந்தப்பின்னணியில்தான் நோக்கவேண்டும்.

ஆனால் விதவை கண்ணகிக்கு இது அவசியப்படவில்லை. அவளைப் பொறுத்தவரை ஓர் உயர் வர்க்கத்தில் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட பண்பாட்டு படிமங்களால், குடும்ப எல்லைக்குள் முடக்கப்பட்டவள். தானுண்டு, தன்குடும்பம் உண்டு என்று கட்டுண்டு கிடந்தவள். அவளைப்பொறுத்த வரையில் கணவன் எத்தகையவனாயினும், அவனே அவளுக்கு எல்லாம். உலகமும் அவனே, தெய்வமும் அவனே. அவளுக்கு ஏனைய ஒடுக்கப்பட்ட வர்கங்களின் பெண்களைப் பற்றிக் கவலையில்லை. அவள் என்னதான் பத்தினி என்று போற்றப் பட்டாலும், அவளது வாழ்க்கை எல்லை குறுகியதுதான். அந்தக் குறுகியஎல்லை, பாண்டியனின் மரணத்தோடும், மதுரையின் அழிவோடும் கட்டி தட்டிப்போனது.

ஆனால், மாதவியைப் பொறுத்தமட்டில் சமூகக் கொடுமைகளுக்கு எதிரான, ஒரு திசையில், மார்க்கத்தில் அந்த மார்க்கத்தின் தத்துவம் மற்றும் செயற்பாடுகளில் பங்குகொள்வதன் மூலம், சமூகத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் தளைத்தோங்கும் அவசியத்தைத் தெரிந்தேற்றுக்கொண்டாள்.

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகப்பர்ணாமித்து உச்சநிலை அடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில், உலகில் என்றுமே இல்லாதவகையில் கொடுமைகள் மேலோங்கியுள்ளன. கண்மூடித்தனமான வன்முறை, இடையறாதபோர், சுரண்டல், ஒடுக்குமுறை, பால்ஏற்றத்தாழ்வும் கொடுமையும், பசிபட்டினியும், அச்சுறுத்தும்பிணிகளும், பட்டினிச்சாவுகளும், சூழல் மாசடைந்தலும் அன்றாட வாழ்வாகி விட்டது, போரின்

கெடுபிடிகளுக்குள் பெண்கள் அவலங்களைச் சுமக்கிறார்கள், துன்பங்களை அனுபவிக்கிறார்கள், ஆயிரக்கணக்கில் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்த விதவைகள் கிழடுதட்டிப் போனவர்கள் அல்ல. இளம் வயதினரே. இந்த விதவைகள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள்.

இவர்கள் தங்களது பிரச்சனைகளுக்காக பல்வேறு அமைப்புகளாகச் சேர்ந்து போராடவேண்டும். புதிய சிந்தனைப் பண்பாடு இவர்கள் மத்தியில் பரிணமிக்க வேண்டும். கிழடுதட்டிப்போன பண்பாட்டுச் செட்டைகளை உரிந்து உதறி எறிந்துவிட்டு, காலத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்ப புதிய சிந்தனை, நடைமுறைகளை வகிக்கும். சமுதாயமாற்றத்திற்கான முன்னணிப்படையாகச் செயற்படவேண்டும். அறிவியல் பூர்வமான ஓர் அரசியல் மாற்றமே பெண்களுக்கான விடுதலைமார்க்கம். பெண்கள் அரசியலிலிருந்து தூரவிலகிநிற்கமுடியாது.

கண்ணகி போன்ற உயர்வர்க்கப் பெண்கள், விதவைகள் பெண்களின் ஒடுக்குமுறைகள் துன்பங்கள் பற்றிப் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். சட்டம் சார்ந்து அகிம்சை வழியில் போராடுகிறார்கள். உரிமைகளுக்காக, விடுதலைக்காக குரல் கொடுக்கிறார்கள். சீர்திருத்தங்களுக்காக, பாடுபடுகிறார்கள். இவைகள் வரவேற்கப்படவேண்டியவைதாம். ஆனால், அவர்கள் முதலாளித்துவ வாழ்க்கை முறைக்குள் சிக்குண்டு கிடக்கிறார்கள். தங்களது முதலாளித்துவ வாழக்கைமுறைக்குள் இருந்து கொண்டே, அவர்கள் செயற்படுகிறார்கள். அவர்கள் முதலாளித்துவ வாழ்கையின் படிதாண்டாப் பத்தினிகளாகவே இருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் நடுத்தரமற்றும் அடிமட்டப்பெண்கள் மத்தியில், அவர்களின் அன்றாட வாழ்கையுடன் இணைந்து, அவர்களை அணிதிரட்டி எழுச்சிகொள்ளச் செய்ய முன்வருவார்களா என்பது கேள்விக்கும் விவாதத்திற்குமான விடயமே. சமுதாயத்தின் மற்றும் இயற்கையின் நலன்களுக்காகத் தங்களை உண்மையாகவே அர்ப்பணித்துவாழும் பெண்மணிகளும் அங்காங்கே இருக்கவே செய்கிறார்கள். ஆனால், நம்முன்னே எழுந்து நிற்கும் முதலாளித்துவ மாயையைத்தகர்ப்பதே இப்போதுள்ள பிரச்சனை. இதில் பெண்கள், விதவைகளின் பங்கு முதன்மைபெறவேண்டும்

மூலதன ஆசனத்தில்
மூர்க்கமாய் அமர்ந்துகொண்டு
பெண்கள் உரிமைகளை
பறித்தெடுத்த பாண்டியரே
வரலாற்றுச் சிலம்புடனே
வருகிறோம் வழக்குரைக்க.

— செங்கனல்
இன்னாசி ஞானதீபன்

---

# முன்னுணர்ந்து சொல்லும் உறுதி

என்னுயிர் ரணப்படச் சொருகிய சாட்டையை
இன்னமும் நீ
வைத்திருக்கிறாய் பேணி.
என் மார்பில்
உன் ஆவணம் பதித்து மிதித்த
சப்பாத்தும் இருக்கிறது உன்னிடம்.
என் உறவுகள் சுடுகாட்டில் சாம்பலாவது கண்டும்
பதையாமல் கிறங்கியபடி
நீ குடித்து முடித்த
சிகரெட் சாம்பலில்
மூச்சு முட்டிய 'ஆஷ்ரே' கூட
அப்படியே உள்ளது
உன் வரவேற்பறைக் கண்ணாடி அலுமாரியில்
இப்படியே,
நண்பன் நெற்றியில் பொட்டிட்டு
அவன் மனைவி பொட்டழித்த துப்பாக்கியும்
அதன் தொழில் ஒத்த
கத்தி, வாள், கோடரியும்
இன்னமும் பேணப்படுகின்றன உன்னால்.
ஒருநாள்
இவையனைத்தையும்
உன் பேரர்
பேரின் பேரர்
அவர் பேரர்
உலகின் சந்தைக்குத் தருவர்
பரம்பரை வீரத்தைப் பறைசாற்றியபடி
ஏலமிடவென.
அப்போதைக்கு இப்போதே
சொல்லி வைக்கிறேன்
கேள் நன்கு
ஏலமிடப்படும்
உன் அனைத்துப்பொருள்களை விடவும்
அதிகம் விலை கொடுத்து வாங்கப்படும்
எனது இந்தக் கவிதை.

# போரின் வன்முறையால் பாதிக்கப்பட்ட தனிப்பெண்களின் வாழ்வும் தனிப்பெரும் துயரங்களும்



இவ்வாய்வு
அம்பாறை,
திருகோணமலை
ஆகிய இடங்களை
மையமாகக் கொள்கிறது.

சமூகவியலாளர்கள் குடும்பமென்னும் வரையறைக்குட்பட்ட செயற்பாடுகளில் பிள்ளைகளைச் சமூக மயப்படுத்தல் ஒன்றென இனங்கண்டுள்ளார்கள். இந்த செயற்பாட்டின் முதற்படியாக இன விருத்தியும் குடும்பத்திடம் ஒப்படைக் கப்பட்டது. பாலுணர்ச்சியின் இறுதி இலக்கான சந்தான விருத்தியை வரைமுறைப்படுத்தும் நடைமுறை குடும்பத்தைச் சார்ந்ததாகிறது. ஒருதார மணவினை அமைப்பு அரசு, சமயம் இரண்டினாலும் நெறிப்படுத்தப்பட்டது. ஆண் என்பவன் திருமணபந்தத்தின் வாயிலாகப் பெண்ணின் பாலுணர்ச்சிக்கு உரித்துடையவனாகி அவளின் உடம்புக்குச் சொந்தம் பாராட்டும் ஒருவனாகிறான் என்று எல்லாச் சமயசடங்குகளும் வலியுறுத்தின. இதனை எவ்வகையிலேனும் மீறும்போது சமுதாயமும் சட்டங்களும் தண்டிக் கின்றன. பெண்ணின் உரிமையாளனாகிய ஆண் வன்முறையால் பெண் அபலை யாகிவிடுகிறாள். அவளின் பாலுணர்ச்சி பொதுவிவகாரமாகிறது. அவள் பாது காப்பற்றிருக்கிறாள் என்னும் செய்தி ஊரின் மூலை முடுக்கெல்லாம் பரவுகிறது. அவள் ஒற்றை மரமாகிவிட்டாள் என்பதை தெருவோரத்து தென்னை மரமெனப் பிறர் அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். மறு மணத்திற்கோ தோழமைக்கோ உகந்தவள் என அப்பெண்ணை எவரும் நோக்கு வதில்லை. போகப்பொருளாக அவள் இருக்கிறாள் எனும் செய்தி பரவி விடுகின்றது. சாதாரண நிலைமையில் அல்லது அமைதி நிலவும் காலங்களில் துணையற்ற பெண்கள் சமூகவாரியான கூட்டு குடும்ப அமைப்பு, குடும்ப உறுப்பினர்கள் அல்லது வயோதிப அயலவர்களின் பாதுகாப்பைப் பெறுகின்றனர். இந்தப் பாதுகாப்பானது ஆண்களின் அநாவசிய சேட்டைகளுக்கு வேலியாக விளங்கியது. இன்றைய நிலைமையில் இந்த வேலி விழுந்துவிட்டது. பெண்கள் தங்களை தாங்களே காத்துக் கொள்ளவேண்டியுள்ளது. உறவினர்களும் ஏனையோரும் அவர்களால் தம் நிதிப்பழு அதிகரித்துவிடுமென அஞ்சி விலகிக் கொள்கிறார்கள்

அம்பாறை மாவட்டத்தை ஆராய்ந்தோமானால். அங்குள்ள ஆண் துணையற்ற பெண்களின் நிலைமை சிக்கல் நிறைந்து காணப்பட்டாலும் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் தன்னையை ஒத்ததாகவே ஆராயப்படும். ஆயினும் திருகோணமலையிற் போலன்றி அம்பாறையில் பாதிப்புக்குள்ளான தமிழ் பெண்கள் முஸ்லிம் பெண்கள் ஆகிய இரு சாராரும்

சமமானப் பெருந்தொகையினராய்க் காணப்படுகின்றனர். இதன் விளைவாக ஆய்வுப் பணியை இரண்டு மட்டத்தில் மேற்கொள்ள நேர்ந்தது. ஆண் துணையற்ற பெண்களின் அனுபவங்களும் பொதுபண்புகள் பலவற்றைக் கொண்டிருந்தனவாயினும், அவர்களின் இனம் கலாச்சார வேறுப்பாடுகள் அரசியற் களரியில் அவர்களுக்குரிய இடம் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்பட்டன; உருவம் பெற்றன.

அம்பாறையிலும், பல காரணங்களினால் மரணங்கள் சம்பவித்துள்ளன. இவற்றினால் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள முக்கியமான பாதிப்பு குடும்பத்தை போஷித்த ஆணை இழந்தமையால் உண்டான, பொருளாதார வீழ்ச்சியாயினும் பல சந்தர்ப்பங்களிலே அந்தப் பாதிப்பு பொருளாதார சீரழிவையும் மீறியனவாகக்காணப்பட்டன. இனக்கலவரங்களில் முஸ்லிம்கள் தமிழராலும் தமிழர்கள் முஸ்லிம்களாலும் கொல்லப்பட்டனர்.

செல்வி. திருச்சந்திரன்

பொதுவாகச்சொல்வதானால் திருகோணமலையிலும் இவ்வாறான போக்குகளே காணப்பட்டன. பெண்களை ஆதரிப்பார் எவருமிலர். ஆவர்களின் நிலையும் மிக மோசமாயுள்ளது. ஒரு சில பெண்களே அயலவர்கள் தம்மை ஓரளவிற்குத் தாபரித்தனர் என்றார்கள். மற்றும்படி பெண்களின் துன்பங்களை அயலவர்கள் கண்டும் காணாதவர்களாய் நடந்துகொண்டனர். உறவினர்கள் கதையும் இதுவே. ஒரு சிலர் மட்டும் அவ்வப்போது உதவினர். கணவன்மாரின் பெற்றோர்கள் அவர்களைக் கவனித்தாரிலர். தம் மகன் கொல்லப்பட்டதும் பெற்றோர் தன்னையும் பிள்ளைகளையும் அநாதரவாக விட்டுவிட்டு வேறோர் இடத்துக்குக் குடிபெயர்ந்தனர் என்று ஒரு பெண் முறையிட்டாள். திருகோணமலையிற் போலன்றி இங்கு தாய்வழி உறவினர்கள் கூட நெருக்கடி வேளையில் கைகொடுத்து உதவ முன்வரவில்லை. சில சமயங்களிலே இந்தப் பெண்கள் வயோதிபப் பெற்றோரையும், பிள்ளைகளையும் அநாதரவாக விட்டு விட்டு வேறோர் இடத்திற்குக் குடிபெயர்ந்தனர் என்று ஒரு பெண் முறையிட்டாள். தங்கைமாரையும் பராமரிக்க வேண்டி ஏற்படுகிறது ஏனென்றால் அவர்களும் போர் அல்லது வறுமையின் நிமித்தம் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பர். திருகோணமலைப் பெண்களைப்போலல்லாமல் இவர்கள் உறவினர்களின் உதாசனீனத்தையிட்டுக் கோபமோ விரக்தியோ கொள்ளாமல், இயற்கைச் சம்பவங்களாய் அல்லது சமூக நிதர்சனத்தின் ஓர் அங்கமாய் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனை அவர்கள் திட்டவட்டமாகப் புலப்படுத்தாத போதிலும் பிற சந்தர்ப்பங்களில் தம் துயரத்தையும் சஞ்சலத்தையும் மிக, வன்மையாக வெளிப்படுத்துதற்கு இந்த மனப்போக்கு ஒரு காரணமாய் அமையலாம்.

கணவன் இறந்த பின் அவரின் பெற்றோர் கணவனின் பொருள் பண்டங்களைத் தமக்குத் தருமாறு கேட்ட ஒரு சம்பவம் திருகோணமலைப் பெண் ஒருவரின் அனுபவத்தை ஒத்ததாக விளங்குகிறது. இன்னொரு பெண் தன் கணவன் இறந்த மாதத்தில் அவருக்குச் சேரவேண்டி இருந்த சீட்டுப் பணத்தைத் தருப்படி மாமனார் கேட்டதாகச் சொன்னார்.

தெருவில் என்னைக் கண்டால் அவர்கள் மறு பக்கம் பார்த்துக்கொண்டு போகிறார்கள் (இங்கு அவர்கள் கணவரின் பெற்றோரையும் சகோதரனையும் குறிக்கிறது) இந்த அனுபவங்களைச் சொன்ன வேளையிலே அவள் குரலிலும், சொன்ன முறையிலும் ஏளனம், கசப்புணர்வு என்பன வெளிப்பட்டன.

ஆண்கள் பெண்களைப் பாலியல் இம்சைக்கு உட்படுத்துதல் குறிப்பிட்ட ஒரு வகைப் பெண்களுக்கு மட்டுமே நிகழ்வதில்லை. ஆயினும் இந்த ஆய்வுக்கு உட்பட்ட பெண்களின் அநாதரவான, தனிமரம் போன்ற நிலை அவர்களின் அனுபவங்களுக்கு விசேட அர்த்தங்களைக் கொடுக்கின்றன.

ஆண் துணையற்ற பெண்கள் வீட்டிலும் சரி வேலைத்தலங்களிலும் சரி ஆண்களின் உடல் வாரியான உபத்திரவங்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. இந்த வகையான இம்சைகளை இளைஞர், வயோதிபர், திருமணமானோர் ஆகிய சகல ஆண்களும் புரிகினறனர். நாம் சந்தித்த பெண்கள் இந்த வகையான இன்னல்களைப் பற்றி பேசவே சிரமப்பட்டனர். ஆவற்றைப் பற்றிப் பேசுவதைவிடப் பேசாதிருப்பதேமேல் என்று கருதினர். பேச முற்பட்டால் அத்தகையோருடன் ஒத்துழைத்தவர்கள் என்னும் அவச்சொல்லுக்குப் பலியாக நேருமென்றும் அஞ்சினர். அவ்வாறு துணைபோகும் பெண்களைச் சமுதாயத்தினர் விலக்கி வைப்பர். அவர்களின் சீவனோபாயத்திற்கான வழிவகைகளும் வற்றிவிடும். ஆகவே அத்தகைய தனிப்பட்ட அந்தரங்க விடயங்களைப் பகுத்தறிவின் பாற்பட்ட ஆய்வுகளிற் சேர்த்துக் கொள்வதை அவர்கள் விரும்பவில்லை.

ஐந்து பெண்கள் தம் அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ள முன்வந்தனர். சுமார் 30பேர் மறுப்புத் தெரிவித்தனர். அவை பற்றிப் பேசுதல் வெட்கங்கெட்ட செயல் என்று கருதினர்.

வேறு சில பெண்கள் அவ்வாறான மரியாதை கேடான அனுபவங்களை எதிர் கொண்டதன் பயனாக "கவனமாக நடந்து கொள்ளப் பழகிக் கொண்டனர்.

"எனக்கு எப்போதும் கரைச்சல். வேலைக்குப் போனாலும் கடைக்குப் போனாலும் வீட்டிலே தனிமையான இருந்தாலும் ஒரே கரைச்சல். இப்போதெல்லாம் நான் தனியாக இருப்பதையோ தனியாகப் போவதையோ தவிர்த்துக் கொள்கிறேன். என் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து திருப்பி வரும்போது அவர் வெகுமதிகள் கொடுப்பார். விஸ்கோத்து இனிப்பு எல்லாம் இருக்கும். நான் வேலை முடிந்து வீடு திரும்ப முன்னம் பிள்ளைகள் அவற்றைப் தின்றுவிடுவார்கள். நான் கோபித்து அவர்களைத் திட்டுவேன். காசிருந்தால் எல்லாவற்றையும் அந்தக் கேடுகெட்ட மனிதனிடம் வீசிவிடுவேன். என்னிடமோ காசில்லை. நான் முழுதும் அழுதேன். ஒன்றும் சமைக்கவில்லை. பிள்ளைகளைத் திட்டித் தீர்த்தேன். மறுநாள் அவனுடைய சகோதரியிடம் போய் அழுது முறையிட்டேன், பிள்ளைகளைக் கொன்றுவிட்டு நானும் தற்கொலை செய்து கொள்வேன் என்று பயமுறுத்தினேன். அதனால் பயன் கிடைத்தது. எனக்குக் கரைச்சல் கொடுப்பதை நிறுத்திக் கொண்டான். ஆனாலும் விஷயம் அவ்வளவோடு முடிந்துவிடவில்லை என்று எனக்குத் தெரியும். வேறு ஆண்கள் வருவார்கள். பாழ்பட்ட நாங்கள் இந்தக் காவாலி களிசடைகளுடைய சேட்டைகளைச் சகிக்க வேண்டி இருக்கு."

"எனக்கு எந்த நாளும் கரைச்சல். நான் இப்போ வேறு வீடுகளில்

படுக்கின்றேன். அந்த மனிசன் குடிகாரன். வெறிவந்தால் அவனுக்குப் பெண் வேணும். இரவில் மட்டும் வருவான். ராத்திரி வீட்டிலே தங்காமல் விடுவதால் அவனிடமிருந்து தப்பி வருகிறேன்.

"ஒரு பெண் ஆண் துணையற்று தனித்து வாழ்ந்தால் அவளை எளிதில் அடைந்து விடலாம் எனப் பலரும் எண்ணுகிறார்கள். ஆண்கள் இரவில் குடித்துவிட்டு வந்து என்னைக் கூப்பிடுவார்கள். நான் காமவெறி பிடித்து அலைகிறேன் என்றும் அவர்களை வரவேற்கக் காத்திருக்கிறேன் என்றும் நினைக்கிறார்கள். நான் சத்தம் போட்டு அவர்களைத் துரத்துவேன். ஆனாலும் அவர்கள் திரும்பவும் வருவார்கள். நான் கசிப்பு நிலையத்துக்குக் கிட்டச் சீவிக்கிறேன். ஆகவே இந்தப் படலையைச் செய்து வைத்திருக்கிறேன்."

இந்தப் பெண்ணும் தன் அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளத் தயங்கினார். ஆனால் நாங்கள் விசித்திரமான ஒரு படலையைத் திறந்து கொண்டு அவர் வீட்டில் நுழைந்தோம். நான் அந்தப் படலையைப் பற்றி விசாரித்தேன். அவள் பதில் சொல்லாமல் புன்னகை செய்தாள். மரத்தாற் செய்யப்பட்ட அந்தப் படலையில் முட்கம்பி துருத்திக் கொண்டு நின்றது. வழக்கத்திற்கு மாறான படலை அது. அவர் பின்னர் அதைப்பற்றி விபரமாகச் சொன்னார்.

"குடிகாரருக்கும் காவாலிகளுக்கும் புத்தி வரச் செய்வதற்காகத்தான் படலைக்கு முள்ளுக்கம்பி அடித்திருக் கிறேன். அவர்கள் குடித்துவிட்டு படலையைத் திறந்து உள்ளே வர எத்தனிக்கும்போது முள்ளுக்கம்பி முகத்தில் காயமுண்டாக்கும். முகத்திலே இரத்தம் ஓடும். அதனால் அவர்கள் கத்துவார்கள். அப்போது நான் உஷாராகி விடுவேன். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் உஷாராகி விடுவார்கள்."

மற்றொரு பெண்ணின் அனுபவம் வேறோரு பரிமாணத்தைப் புலப்படுத்தியது.

"நான் வேலைக்கோ கடைக்கோ போகும்போது அவன் என் பின்னால் வந்து என்னொடு கதைக்க முயற்சி செய்வான். நான் அவனைக் காணாதவள் போலப் போவேன். ஏனென்றால் எனக்கு எரிச்சல் வரும். அவன் ஏதும் சொன்னால் நான் பேசாமல் போய்விடுவேன். ஒரு நாள் ஆத்திரத்தில் அவனைத் திட்டினேன். அதை அடுத்து, ஒரு நாள் இரவில் அவன் என் வீட்டில் நுழைந்தான். நான் எழும்பிச் சத்தம் போட்டேன். அயல் அட்டத்தில் உள்ளவர்களும் எழும்பிக் கொண்டனர். அவர்களுக்கு அவன் யார் என்பதைச் சொல்லவில்லை. முன் பின் தெரியாத ஒருவன் என்றே சொன்னேன். யாராக இருக்கலாம் என்று அவர்கள் ஊகிக்க முடியவில்லை. இருட்டாக இருந்தபடியால் அவன் ஓடித்தப்பித்துக் கொண்டான். ஊர்வாய்க்குப் பயந்து நான் பேசாமல் இருந்துவிட்டேன். ஆல்லாவிட்டால் நான்தான் அவனை வரச் சொன்னதாக அவர்கள் கதை கட்டி விடுவார்கள்."

இந்தச் சம்பவங்கள் ஆணாதிக்கம் எவ்வாறு செயற்படுகிற தென்பதற்கு உதாரணங்களாய் விளங்குகின்றன. மனித உரிமைகள் மீறப்படும் வேளைகளிற்கூட அதிகாரம் ஆண் வர்க்கத்துக்குச் சார்பாகப் பிரயோகமாகிறது. நீதி நியாயம் என்பன பண்ணுக்குச் சார்புடையனவாய் இருப்பினும் கூட, பெண் பணிந்தும் குனிந்தும் நடக்க வேண்டி ஏற்படுகிறது. லீலாவின் விடயத்தில் (இது கற்பனைப் பெயரே) இது வித்தியாசமாயுள்ளது. அவளின் துணையற்ற நிலையை பழி பாவத்திற்கு அஞ்சாத ஒருவன் பயன்படுத்தி அந்த அபலையை ஏமாற்றினான். அந்தப் பெண் தனக்கு சேர்ந்த கதியை வரிசைக் கிரமமாக எமக்குச் சொல்லவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவள் தெரிவித்த விவரங்களை வைத்து இந்தக் கதையை நாம் புனைந்துள்ளோம்.

அவளுடைய கணவன் காணாமற் போனபோது, லீலா அதிர்ச்சி அடைந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள். ஒன்று இரண்டரை வயத்துக் குழந்தை. மற்றொன்றின் வயது ஒன்றரை. அவளின் பெற்றோரும் 1990ஆம் ஆண்டுப் படுகொலைகளின்போது இடம் பெயர்ந்து இராணுவத்தினருக்கு அஞ்சிப் படகில் இந்தியா சென்றிருந்தனர்.

அவளின் அக்காவும் வெளிநாட்டில் வசித்து வந்தாள். அவளின் கணவரின் நண்பன் நல்ல சமாரித்தனாக நடிக்க முயன்று, எல்லாப் பொலிஸ்காரரையும் தெரிந்தவனென்று வேறோர் ஆணை அறிமுகம் செய்து வைத்தான். அந்த ஆள் காணாமற்போன கணவனைக் கண்டுபிடித்துக் கொடுக்க இசைந்தான். ஆனால் ஒரு நிபந்தனை. கணவனை அடையாளம் காட்டும் பொருட்டு அந்தப் பெண் தன்னோடு கொழும்புக்கு வர வேண்டும் என்றான். அந்தப் பெண் தன் பிள்ளைகளோடு கொழும்புக்குப் பயணமானார். அவன் அவர்களை ஒரு லொட்ஜில் தங்க வைத்தான். உண்மையில் அங்கு அவர்கள் சிறைக்கைதிகள் போலவே நடாத்தப்பட்டனர். அவன் வெளியெ போகும்போதெல்லாம் அவர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்து விட்டுச் செல்வான். உடல் வாரியாகவும் மனவாரியாகவும் பல இம்சைகளை அப்பெண் அனுபவிக்க நேர்ந்தது. இரண்டு முறை தற்கொலை செய்ய முயன்றாள். தன் பரிதாப நிலையை அயலவரிடம் சொன்னாள். அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. நிலைமை மோசமடைந்தபோது பாராளுமன்ற உறுப்பினரையோ கிராம சேவகரையோ நாடினார். (இது பற்றி அவர் தெளிவாகச் சொல்லவில்லை) விடயம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. வெல்வாக்குடைய அரசியல்வாதி ஒருவர் அந்தப் பெண்ணின் அக்கா வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து திருகோணமலையில் வசிப்பதாக அறிந்தார்.

அக்கா அவளைக் காப்பாற்றினார். அதன் பின் இந்தியாவில் வசித்து வந்த பெற்றோருக்குக் கடிதம் எழுதினார். அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவளுடைய கதையில் சில இடைவெளிகள் காணப்பட்டன. அந்தப் பெண் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். எதையும் விளக்கமாகச் சொல்ல அவருக்கு இயலவில்லை. அவர் சொல்ல விரும்பாத விடயங்களைத் துருவித் கேட்டறிய நாம் முற்படவில்லை. சில விடயங்களைச் சொல்ல விருப்பினார். வேறு சில விடயங்களை மறைக்க விரும்பினார். தன்னை ஏமாற்றி மோசஞ் செய்தார்கள் என்பதை மட்டும் வலியுத்திச் சொன்னார்.

எம் கருத்தின்படி லீலாவுக்கு உளவியல் வாரியான சிகிச்சை ஆலோசனை அவசியம். அப்பெண் புத்தியில்லாமல் அவசரப்பட்டுக் காரியத்தில் இறங்கிவிட்டாள் என்று சமூகம் அவளுக்குத் தீர்ப்பளித்தது. உதவி செய்வதாகச் சொன்னவனை நம்பியது அசட்டுத்தனம் என்றார்கள்.

இந்தக் கதை சொல்லும் படிப்பினை அதுவாக இருக்கலாம். பெண் என்பதாலேயே இவ்வளவும் நடந்ததென்பதையும் இங்கு நாம் மனங்கொள்ளல்வேண்டும். தன் கணவன் இன்னமும் உயிரோடிருக்கிறான் என லீலா நம்புகிறாள் என்பதும் முக்கியமான ஓர் அம்சம். அவனைத் திருப்பவும் அடையவேண்டும் என்ற ஆர்வமே அப்பெண்ணை இவ்வளவு துன்பத்துக்கும் ஆளாக்கிற்று.

பாலியல் இம்சை தொடர்பான வேறு சிறு சிறு சம்பவங்களும் உள. ஆயினும் இவற்றிற் பெரும்பாலானவை எம்மிடமிருந்து மறைக்கப்பட்டன. அவர்களின் அந்தரங்கத்தை நாம் துருவி ஆராயவிரும்பவில்லை. எமக்கென வகுத்துக்கொண்ட அறநெறிக்கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்லவும் நாம் பிரியப்படவில்லை. அகதிமுகாமிலிருந்து பெண்கள் அங்கு ஒரு சம்பவம் நடைபெற்றதாகச் சொன்னார்கள். ஆனாலும் சம்பந்தப்பட்ட பெண்ணின் நம்பிக்கைக்குத் துரோகமிழைக்க விரும்பாத காரணத்தால் நாமும் அவரின் அந்தரங்கத்தைமதித்து வாளாவிருந்தோம். இத்தகைய சம்பவங்கள் தனிப்பட்ட பிரத்தியேக நிகழ்ச்சிகளாக நிலைபெற்று விடுகின்றன. சமுதாயப்பாங்கான ஆய்வு, இவ்வாறான நிலைமையைக் கவனத்திற் கொள்வதுடன் அமைந்து விடுகிறது. நுட்ப நுணுக்கமான விவரங்களை விலக்கிவிடுகிறது.

அம்பாறையிலும் முஸ்லிம் பெண்கள், தமிழ்ப்பெண்கள் ஆகிய இரு சாராரும் பாலியல் இம்சைகளை அனுபவித்தனர். ஆயினும் இங்கு தமிழ்ப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும். இந்தச் சம்பவங்கள் பெண்களின் மனதில் அச்ச உணர்வை ஊட்டியுள்ளன. தெருவில் தனியாகச் செல்வதற்கோ வீட்டிலே இரவில் தனியாகத் தூங்குவதற்கோ அவர்கள் அஞ்சுகிறார்கள். அவற்றை இங்கு நாம் விவரிக்கவில்லை. ஆண்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தம்மை அடைய முற்பட்ட வேளைகளில் பெண்கள் எச்சரிக்கையுடன் விவேகமான முறைகளில் தம்மைக்காத்துக்கொண்ட பல சம்பவங்களும் உள. பெண்கள் கடை கண்ணிகளுக்குச் செல்லும்போது, இந்த ஆண்கள் அவர்களைத் தொடர்ந்து செல்வார்கள். வாய் வார்த்தையால் எச்சரித்தால் அல்லது அவர்களைப்பற்றி முறைப்பாடு செய்தால் பிரச்சனை தீர்ந்து விடுவதுண்டு. என்றாலும் சில ஆண்கள் ஓயாத தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பர். கணவன்மாருடன் வாழும் பெண்களுக்குக் கிராமப் பகுதிகளில் இவ்வாறான இம்சைகள் ஏற்படுவதில்லை என்பதை எல்லாப் பெண்களும் ஒப்புக்கொண்டனர். அவ்வாறு நடத்தால் கணவன்மார் தலையிட்டுத் தட்டிக் கேட்பார்கள் என்னும் அச்சம் அத்து மீறுவோரைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால் ஆண் துணையற்ற பெண்கள், கேட்க ஆள் இல்லை என்ற நிலையில் இம்சைகளுக்கு உள்ளாகிறார்கள்.

ஒரு முஸ்லிம் தாய் கன்னிப் பருவமடைந்த தன் மகளை அயல் விட்டுப் பையன் கெடுத்து விட்டதாக முறைப்பாடு செய்தார். தான் வேலைக்குச் சென்ற சமயங்களில் வீட்டிலே தன் மகள் தனியாக இருந்தால் அந்தப் பையன் நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான் என்றார். அந்த இளம் பெண் கர்ப்பிணியானாள். பையன் குழந்தையைப் பொறுப்பேற்க மறுத்தான். "வீட்டிலே ஆண்பிள்ளை இல்லாத காரணத் தாலேதான்" இவ்வாறு நடந்ததென்றும், அந்தப் பையன்தான் தன் குழந்தைக்குத் தகப்பன் என்று ஒப்புக்கொள்ள மறுத்தான் என்றும் அந்தக் தாய் மூன்று தடைவ திரும்பத் திரும்பச் சொன்னார்.

திருமணமாகாமலே தாயாகிவிட்ட அவமானம் ஒருபுறம், பதினாறு வயதிலேயே ஒரு குழந்தையை வளர்க்க வேண்டிய பொறுப்பு மறுபுறம் என்னும் நிலையில், அந்த மகளையும் தாயையும் சமூகம் ஒதுக்கிவிலக்கி வைத்துள்ளது. "நாங்கள் பாவபட்ட சென்மங்கள்" என்று அந்தத் தாய் தன் நிலைமையை வர்ணித்தார். இத்தகைய சம்பவம் இடம் பெற்றால் தகப்பன்மார், சகோதரர்கள் அல்லது மாமன்மார் சம்மந்தப்பட்ட இளைஞனையும் அவன் பெற்றோரையும் கண்டித்து, குழந்தைக்குத் தானே தகப்பன் என்பதை அவன் ஏற்றுக்கொள்ளச்செய்து இருவருக்கும் மணஞ்செய்து வைப்பார்கள். இது வழக்கம். அத்துடன் ஊர் வம்புக்கு இடமில்லாது போய்விடும். இவ்வாறு நடைபெறவில்லை என்பதுதான் அந்தத் தாயின் பரிதாபம். மகளும் தன்னைப்போல ஆண்துணையற்றவளாகி விட்டாள். போதாக் குறைக்கு "வம்பிலே பிறந்த பிள்ளையை" வளர்க்கிறாள் என்னும் அவச்சொல்லுடன் வாழ்கிறாள். கடைசியாகப் பார்த்தால் சமூகம் தன்னையே பழி சொல்கிறது என்று அந்தத் தாய் கண்ணீர் மல்கப் புலம்பினாள். மகளின் நடத்தைக்குக் காரணம், கைம்பெண் பிள்ளையைச் சரியான

முறையில் வளர்க்காமையே என்று கற்பித்தனர். புருசன் இல்லாதவளின் வளர்ப்பினாலேதான் மகளுக்கு அந்தக் கதி தேர்ந்ததென்று மக்கள் பேசிக் கொண்டார்கள். இதன் பொருள் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுடன் வளர்ப்பதற்கு ஓர் ஆண், அதாவது தகப்பன் அவசியம் என்பதாகும். ஒரு பெண் அதாவது புருசன் இல்லாதவளின் வாழ்கை பூரணமடைவதில்லை என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

தாய் என்ற முறையில் தன் மகளுக்குப் பாதுகாப்பளிக்கத் தான் தவறி விட்டதாக அந்தப் பெண் நம்பினார். அதனால் தன் மகள் திருமணம் செய்யும் வாய்ப்பு அற்றுப்போய் விட்டதாகவும் வருந்தினார். "அவளை இனி ஆர் கலியாணம் செய்வார்கள்" என்று பரிதாபமாக என்னைக் கேட்டார். ஓர் இளம் பெண்ணுக்குத் திருமணமே இறுதி இலட்சியம். அந்த இலட்சியம் நிறைவேற இனி வாய்ப்பில்லாமல் போய்விட்டதென்பதே அந்தத் தாயின் கவலை.

சீருடை அணிந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்யும் இம்சைகள் இந்தப் பிரச்சனையின் மற்றொரு பரிமாணத்தைப் புலப்படுத்துகிறது. சேவை செய்யும் நல்ல மனிதனாகவே அவர் தோன்றுவார். கணவனின் மரணச் சான்றிதழ் பெறுவதற்கு அந்தக் கைம்பெண்ணுக்கு அவர் உதவினார். இந்தத் தொடர்பு படிப்படியாக குடும்பத்தவர்களுடன் நட்புக்கொள்ள உதவியது. அவர் அடிக்கடி அந்த வீட்டுக்குவரத் தொடங்கினார். கைம்பெண்ணின் தாயாருக்கு, ஆபத்து வரப்போகிறது என்ற உணர்வு ஏற்பட்டதும் அவரை அங்கு வரவேண்டாம் என்றார். அந்தச் சந்தர்பத்திலேதான் அவர் அப்பெண்ணை மணம் செய்யத் தயார் என்று சொன்னார். ஆனால் மகளுக்கு அதில் நாட்டமில்லை. அது தவிரவும் அவர் ஏற்கனவே மணமாகி பிள்ளை குட்டிகளுடன் வாழ்ந்து வந்தார். அவரால் செய்யக்கூடிய தெல்லாம் அம்பாறையில் சேவையாற்றும் காலம்வரை அந்தப் பெண்ணை தன் வைப்பாட்டியாக வைத்திருப்பதே. அவர் தொடர்ந்து அவர்களுக்குக் கரைச்சல் கொடுத்து வந்தார். மேலிடத்திற்கு முறைப்பாடு செய்தும் ஒரு பயனும் கிட்டவில்லை. அரச சார்பற்ற அமைப்பொன்று தலையிட்டு அவரை அம்பாறைக்கு வெளியே இடமாற்றம் செய்வித்தது. ஆயினும் அவர் தொடர்ந்தும் வந்து கொண்டே இருந்தார். அதனால் அப்பெண்ணின் தாயார் மகளைத் தன் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

மற்றுமோர் இளம் கைம்பெண், பெற்றோர் இறந்த பின் தன் சகோதரியையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கவேண்டியதாயிற்று.

"என் சகோதரியை இராணுவத்தினர் ஒரு ஜீப்பிலே அழைத்துச் சென்றார்கள். அவள் இந்தச் சம்பவத்தால் வெட்கமடைந்து பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டாள். அதன் பின் மனத்தளர்ச்சியும் ஏக்கமும் அவளைப் பீடித்துக் கொண்டன. அதிகம் பேசமாட்டாள். அந்தச் சம்பவத்தையிட்டு எதுவும் சொல்லாள். என்ன நடந்ததென்று எங்களுக்குத் தெரியாது. அதைப்பற்றிச் சொல்லும்படி அவளை வற்புறுத்தவும் நாங்கள் விரும்பவில்லை. ஆனால் இன்று அவள் தன் கணிப்பின் படியும் பொதுமக்களின் கணிப்பின் படியும் வேண்டாத பொருளாகி விட்டாள். எம் சமுதாயம் பெண்ணினத்தை இப்படித்தான் மதிக்கிறது. இந்த மலையளவு ஊர் வாய்க்கு எதிராக நாம் என்ன செய்யலாம்?

அரசாங்கத்தை எதிர்க்கும் வல்லமை அவர்களுக்கு இல்லை. வெவ்வேறு மட்டங்களிலே செயற்படுவதான அதிகாரக் கட்டுக்கோப்பிலே அவர்களின் இனம், வர்க்கம், பால் ஆகியவற்றிற்குப் பல்வேறு பரிமாணங்கள் உள. இவற்றைச் சாடவோ தட்டிக் கேட்கவோ வலுஇல்லாமையால் அவர்கள் தம் மனச்சாட்சியை மௌனிக்கச் செய்துள்ளனர். மேல்குறித்த இளம் பெண் தன் சகோதரியின் சார்பில் பேசினார். பாதிக்கப்பட்ட மங்கை மௌனமாக நின்றார். அக்கா சொல்வதற்கு அவ்வப்போது தலையாட்டி தன் ஒப்புதலைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஒரு கேள்விக்கு நாம் விடை காணவேண்டியுள்ளது. அதாவது இந்த அபலைப் பெண்கள் ஆண்களின் அடாவடித்தனத்தையும் குடிப்பழங்கத்தையும் பெரிதுபடுத்தி அநாவசியமாக அவர்களைச் சந்தேகித்தமையால் தமக்குத் துணைவர்களாகவும் வாழ்வளிப்போராயும் விளங்கக்கூடிய நல்லவர்களையும் விரட்டித் துரத்தி விட்டார்களா?

பெண்கள், குறிப்பாக ஆண் துணையற்ற பெண்கள், பாலுணர்ச்சியைப் பொறுத்த மட்டில் குரூரமான முறையில் சமுதாயத்தினால் நோக்கப்படுகிறார்கள். பாலுணர்ச்சி அவர்களிடமிருந்து விலக்கப்பட்டதொன்றாக அவர்கள் விரும்பத்தகாததாகக் கருதப்படுகின்றது. உடலுறவு மூலம் இன்பம் பெறுவதென்பது அவர்களின் அன்றாட உரையாடல்களில் இடம் பெறுவதில்லை. இரகசியமாகத் தமக்குள் பேசிக்கொள்ளும் விடயமாகக் கருதப்படுகிறது.

பாலுணர்ச்சி என்பது பாவச் செயல் என்னும் எண்ணம் இந்தப் பெண்களுக்குச் சிறு பிராயமுதலே ஊட்டப்படுகிறது. ஆனால் விவாகபந்தத்தில் நெறிப்படுத்தப்படும்போது அதே பாலுணர்ச்சி ஏற்புடையதாகிறது. இந்த கருத்துக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள. ஒன்று விலக்கப்பட்ட செயல். மற்றொன்றோ மனைவி கணவனுக்கு ஆற்றும் பணியாகிறது. கணவன் இல்லாதவிடத்து அது பாவச் செயலாகிறது.

பின்னர் கணவனாக மாறக்கூடிய ஒருவனுடன் உடலுறவு கொள்வதும் பாவச்செயல் எனப் பெரும்பாலான பெண்கள் நினைக்கிறார்கள். மறுமணம் தொடர்பாக தொடர்பாக நம் சமுதாயத்தில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவை பெண்களை விசித்திரமான முறைகளில் பாதிக்கின்றன. இந்த ஆய்வுக்குட்பட்ட கைம்பெண்களில் பெரும்பான்மையானோர் 40 வயதினராயினும் 18 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களைச் சேர்த்துள்ளோம். மிகக் குறைந்த வயதினர் பதினெட்டு பத்தொன்பது வயதுடையவர்கள். முப்பது வயதுக்குக் குறைந்தவர்கள் இருப்பத்தியாறு பேராவர்.

இந்தப் பெண்கள் முறையாக உணவு கொள்ளாதவர்களாய் போசாக்குக் குன்றியவர்களாய் தம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தோற்றத்திலும் சிரத்தையற்றவர்களாய்க் காணப்பட்டனர். துறவு நிலைக்கு ஒப்பான விதத்தில் தமது சந்தோசம், திருப்தி, சுயபராமரிப்பு ஆகியவற்றை ஒதுக்கி விட்டு வாழ்வது போன்ற தோற்றத்தை நாம் கண்டோம். சில சமயங்களில் அவர்களை அறியாமலே வெளிப்பட்ட தோற்றமாகவும் எமக்குப் புலப்பட்டது. ஐந்தே ஐந்து பேரைத் தவிர ஏனைய பெண்கள் அனைவரும் மறுமணத்தை வன்மையாக எதிர்த்தனர். பதினைந்து பெண்களின் கணவன்மார் மனைவியைக் கைவிட்டோ தற்கொலை புரிந்தோ மறைந்தனர். இந்தப் பெண்கள் தாம் மீண்டும் மணம் செய்து கொள்ளாதிருப்பதற்கு தகுந்த காரணங்கள் உள. சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது என்றபடி ஒரு முறை பட்டபாடு போதும் என்று அச்சம் தெரிவித்தார்கள். தம்மைத் துன்புறுத்தித் தொல்லைப்படுத்தி கடைசியில் விட்டுப்பிரிந்த கணவன்மாரினால் மணவாழ்க்கையையே இப்பெண்கள் வெறுத்தார்கள். ஆனால் எஞ்சியவர்கள் தமக்கென வகுத்துள்ள கலாச்சார மரபுக்கு அமைய வாழ்வதென முடிவு செய்துள்ளனர். இலங்கைத் தமிழரின் கலாசார மரபில் மறுமணம் விலக்கப்படவில்லை. சமூக வாரியாகவோ சட்ட வாரியாகவோ கைம்பெண்கள் மறுமணஞ் செய்தலென்ற வரையறை ஏதும் இல்லை. ஆயினும் மறுமணம் புரியக்கூடிய வயதினராகிய 18 — 40 வயதுப்பெண்கள் தாம் கைம்பெண்களாகவே இருக்கப் போவதாகத் தெரிவித்தனர் இந்த மறுப்புகன்கு முதல் தாரத்துப் பிள்ளைகளை ஏற்கமாட்டார் எனவும் தமக்குப் புதிதாகப் பிள்ளைகள் பிறந்தால் முன்னைய பிள்ளைகள் மீது பாகுபாடு காட்ட நேரலாம் எனவும் குறிப்பிட்டார்கள். அவர்களின் பகுத்தறிவு அவ்வாறு சொல்ல வைத்தது. ஆயினும் சமுதாய நியதி இதனை ஏற்றுக்கொள்ளுமென நம்பவியலாது.

மேற்சொன்ன காரணம் இரண்டாம் பட்சமானதாகக் காணப்பட்ட போதிலும், இப் பெண்கள் மீண்டும் ஓர் ஆணைத் தம் வாழ்க்கையில் இணைத்துக் கொள்ளாதிருப்பதற்கு மற்றுமொரு முக்கிய காரணம் உண்டு "இன்னுமொரு கணவனைப்பற்றி நினைக்கவோ வேறோரு மனிதனோடு வாழவோ மனம் இடம் கொடுக்கவில்லை. என் வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கே இடமுண்டு. அவரோடு வாழ்ந்தது போதும்" என வாதாடுகிறார்கள்.

இந்தப் பெண்கள் தமிழர்களின் கற்பு நெறிக்கு அமைய, ஒருத்திக்கு ஒருவனே என்னும் கோட்பாட்டினைப் பின்பற்றுகிறார்கள். இன்னொரு மனிதனை மணம் புரிதல் கற்பு நெறிக்கு மாறானதென எண்ணுகிறார்கள். இலங்கைத் தமிழர் மத்தியிலே கற்பு, மறுமணத்தைத் தடைசெய்வதில்லை. ஆனால் திருமண அமைப்பினுள் பெண் உடலாலும் உள்ளத்தாலும் ஒருவனுக்கு விசுவாசமாயிருத்தல் வேண்டும். எனினும் இங்குள்ள பெண்கள் இந்திய பிராமணிய கற்பு நெறியைக் கடைப்பிடிக்கிறார்கள். கற்பு எனப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாயிருத்தல் வேண்டுமென நேரடியாகவும் மறைமுகமாகவும் இப்போது வாதாடப்படுகிறது. இந்தக் கருத்தை அவர்கள் எமக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்தினருக்கும் பரப்பி வருகிறார்கள். கற்புத் தொடர்பாக இலட்சிய பூர்வமான கோட்பாட்டுக்கும் நிதர்சன வாழ்க்கைக்கும் இடையே மறுமணம் விலக்கப்படாத சந்தர்ப்பங்களிலே இப் பெண்கள் இலட்சிய வாழ்க்கையைத் தேர்ந்து கொள்கிறார்கள்.

தமிழர்கள் மத்தியிலே இல்லறம் என்பது இல்லத்தை விட அறத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இந்த அறமானது ஆணைப் பார்க்கிலும் பெண்ணுக்கே முதன்மைப்படுத்தப் படுகிறது. ஆண்கள் இல்லற விதி முறைகளை மீறினால் பெண்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கிறார்கள். பொதுபடுத்தாது மன்னித்து விடுகிறார்கள். ஆனால் பெண்கள் விடயத்தில் அவ்வாறு நிகழ்வதில்லை. அவர்கள் கண்ணும் கருத்துமாய் கண்காணிக்கப்படுகிறார்கள். தள்ளி வைக்கப்படுகிறார்கள். நிந்தனைக் குள்ளாகிறார்கள். தண்டிக்கப்படுவதும் உண்டு.

பெண்கள் அறநெறிக்கமைய வாழுதல் அவசியம் எனக் கருதுகிறார்கள். சுய திருப்தியை விட மானம் பிரதானமென வாழ்கிறார்கள். எனினும் ஐந்து பெண்கள் மறுமணம் செய்யமாறு எவரும் தம்மைக் கேட்கவில்லை என்றனர். மறுமணம் பற்றி பேச்செடுக்க எவரும் முன்வரவில்லை. இதனை அவர்கள் ஒரு முறைப்பாடு போன்ற தொனியில் தெரிவித்தார்கள். தம் கருத்தினை வெளியிடுவதற்கு இப்பெண்கள் இடக்கடரக்காரன சொற்களை பயன்படுத்தினர்.

பெரும்பாலான பெண்கள் வாழ்க்கையில் கிட்டும் வாய்ப்புகளைப் புறக்கணித்து மகிழ்ச்சியை ஒறுத்து ஒரு வகையான துறவு வாழ்க்கையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இலங்கையின் சமூக அமைப்பிலே வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி பெண்மை தொடர்பான பிராமணிய துறவுநிலை சார்ந்த வர்ணாஸ்வரம

முறைமை அந்நியமானதாயினும் சில அம்சங்களிலே அதன் சாயலைக் காணமுடிகிறது.

துறவு வாழ்க்கையைப் பின் பற்றுவோர், வாழ்க்கையின் இன்பங்களைப் புறக்கணிக்கும் நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் வீட்டிலும் கூட மனைவியானவள் தனக்கு மகிழ்ச்சியூட்டும் சில செயல்களை விலக்கி துறவு ஒத்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளன. இவ்வாறாக பெண்கள் தம் இல்லத்துள் துறவு வாழ்க்கையை நடத்துகின்றனர். கைம்பெண்களும் தம் உரையாடல்களில் கூட இந்த நடைமுறையைக் கைக்கொள்ளவேண்டுமென நம்புகின்றனர். கற்பைப் பேணிக்காத்தல் பெண்களின் அறம் எனப் போற்றப்படுகிறது. எமது உரையாடல்களில் இந்த உண்மை புலனாயிற்று. கற்பு நெறி தவறும் பெண்களால் குடும்ப வாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. பெண்கள் சில கலாசாரப் பாரம்பரியங்கள் தமக்கு மட்டுமே உரியன என அனுமானித்து நிஜவாழ்கையில் அவற்றைக் கடைப் பிடிக்க முயல்கின்றனர். அங்க அசைவுகள், பேசும் முறை, கருத்துக் களை வெளிப்படுத்தும் பான்மை இவையாவும் பெண்களின் பணிவைத் தெளிவாகப் புலப்படுத்தின. கலாசார அழுத்தங்கள் அவர்களின் சிந்தனை வளர்ச்சியை மழுங்கச் செய்துள்ளன.

பெண்கள் மறுமணம் என்றால் பாலுணர்ச்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தம் வாழ்க்கைப் போக்கினை மறுபடியும் அமைத்துக் கொள்ள வேண்டுமென எண்ணுகிறார்கள். தாம் அநாதரவான நிலையில் தனித்து வாழும்போது ஒரு துணையாக ஆண் விளங்குவார் என்னும் எண்ணம் அவர்களுக்குத் தோன்றுவதில்லை. எனவே மறுதாரம் என்னும்போது புலனுணர்ச்சியைப் பூர்த்தி செய்யும் ஏற்பாடாகவே அதனை நோக்குகின்றனர். அத்துடன் பாலுணர்ச்சியை நிறைவேற்றும் செயல்பாவமாகக் கருதப்படுகிறது. பாலுணர்ச்சி தொடர்பான வரையறைகளும் விவாக பந்தத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரமும் மறுமணத்தைப் பாலுணர்ச்சியுடன் தொடர்புறுத்தும் மரபை தோற்றுவித்துள்ளன. பாலுணர்ச்சியை விளக்குதலும் அங்கீகரிப்பதும் உறவுநிலையில் ஏற்படும் அதிகார பலத்தில் தங்கியுள்ளன. இங்கு அந்த அதிகாரம் ஆணுக்குச் சார்புடையதாக விளங்குகின்றது. இத்தகைய சூழலில் பெண்களின் பாலுணர்ச்சி மறைக்கப்படுவதுடன் அமையாது விலக்கவும்படுகின்றது. பாவச்செயலாக நோக்கப்படுகின்றது. சமுதாயத்தின் இந்த வரையறைகளின் பகைப்புலத்தில் கைம்பெண்களின் மறுமணம் முக்கியமற்ற பிரச்சினை எனக் கருதப்படுகின்றது.

கிராமப்பகுதிகளிலே சூது, வாதற்றபிரமாணியச் செல்வாக்கற்ற சமுதாயத்திலே வாழும் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளவும், பாலுணர்ச்சியை நிறைவேற்றவும் சுதந்திரமுடையவளாகவும் தம் மனதிற்குப் பிடித்த துணைவர்களைத் தெரிவு செய்யவும் உரிமை உடையவர்களெனவும் எதிர்பார்த்தோம். ஆனால் இந்த ஆய்வில் நாம் கண்ட உண்மைகள், அப்பெண்கள் அடங்கியும் ஒடுங்கியும் வாழ்கிறார்கள். என்பதைப் புலப்படுத்தின. "என் வாழ்வில் இன்னொரு மனிதனுக்கு இடமில்லை. மறுபடியும் இன்னொரு மனிதனை நினைத்துப் பார்க்க முடியாது" என்பது தென்னிந்திய தமிழ்ப் படங்களில் கதாநாயகிகள் தெரிவிக்கும் கருத்து. இந்தக் கருத்தே திருகோணமலைக் கிராமப் பகுதிகளில் பெண்கள் மத்தியில் வேரூன்றியிருக்கக் கண்டோம்.

மக்டொனோ, அபுரிசன் ஆகியோரின் கருத்தின்படி, தந்தை வழி ஆதிக்கம் இரண்டு வகையான வரையறையைக் கொண்டுள்ளது. முதலாவது வரையறையின்படி, ஒரே இணை துணையான மணவாழ்க்கை மூலம், பெண்களின் கருவளமும் பாலுணர்ச்சியும் கட்டுப்பாட்டுக்குள்ளாகின்றன. பால் அடிப்படையில் உழைப்பாற்றலைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், பெண்களைப் பொருளாதார அடிமைகளாக்குதல் இரண்டாவது வரையறையாகும். ஆயினும் ஒரு தார மணவினையில் ஆண் துணை மறைந்த பின்னரும் பெண்கள் அதே கட்டுக்கோப்பினுள் அடங்கி வாழ்கிறார்கள். அதனால் அவர்கள் ஆணாதிக்க நடைமுறைக்குத் தம் பாலுணர்ச்சியைப் பலியிடுகிறார்கள். அதாவது பெண்கள் ஆண்களின் பாலியல் மகிழ்வுக்குரிய சொத்தென்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். கற்பு நெறி வழுவாத பெண்மை போற்றிப் புகழப்படுகிறது. தந்தை வழி ஆதிக்கத்தில் பெண்மையை இவ்வாறு அடிமைப்படுத்தல், பெண்ணியல் கோட்பாட்டிற்கு மேலும் சிக்கலை உண்டாக்குகிறது. பாட்டாளி வர்க்கத்தினரிடையே இந்த நிலைமை வேறுபட்டதாகக் காணப்படுகிறதென்று எங்கெல்ஸ் வாதிட்டுள்ளார். சொத்துரிமை பாட்டாளி வர்க்கத்தினரிடம் காணப்படாமையால், ஒடுக்கு முறையான ஒரு தார மணவினை சார்ந்த கருத்து மறைந்து விட்டதாகவும், கணவன் மனைவியரிடையே தந்தை வழி ஆதிக்கத்துக்குப் புறம்பான சமத்துவநிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்தும் சர்ச்சைக்குரியதே.

சகல வர்க்கத்துப் பெண்களும் தந்தை வழி ஆதிக்கக் கோட்பாட்டுக்குள் இணங்குவோராகவே காணப்படுகின்றனர். இதனை விளங்கிக் கொள்வதற்கு ஒரு வழி, சமஸ்கிருத மயமாதல் என்னும் கருத்தியலைப் பிரயோகித்தலாகும். இந்தக் கருத்தியலானது சமஸ்கிருதக் கலாச்சார விழுமியங்களை உள்வாங்கும் நடைமுறை மூலமாக, பெண்கள் உயர்சாதியினர், சொத்துச் சுகமுடைய உயர்வர்க்கத்தினர் என்னும் பிரமையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கருத்தாடல் கலாச்சாரத்தினை அடியொற்றிய சிந்தனை வழியாகக் பின்பற்றப்படும் ஒடுக்கு முறைக்கு எம்மை அழைத்துச் செல்கிறது. அதிகார பலமுடையவர்களின் செயற்பாடுகளுடன் பாலுணர்ச்சிக்கும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கும் தொடர்புண்டென ஃபோகோல் வாதாடுகிறார். அதுவும் எம் கவனத்துக்குரியதே. ஒருத்திக்கு ஒருவனே எனவும் தாய்மை புனிதமானதெனவும் கற்பெனும் கோட்பாட்டை வலியுறுத்திப் பெண்கள் முன்வைக்கும் காரணங்கள் யாவும், சீதை, கண்ணகி போன்ற இதிகாசக் கற்பரசிகள் மூலம் வரலாற்று அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட காரணங்களே!

இவை தவிர, வேறு காரணங்களும் உள. தந்தை வழிச்சமுதாய அமைப்பிலே பெண்ணானவள் புலனடக்கமுடையவளாய் இருக்க வேண்டும். அவளின் பாலுணர்ச்சியும் வேட்கையும் செயலடங்கியன வெனக் கருதப்படுகின்றன. அவை கட்டுப்படுத்தப்பட வேண்டியவை. இதிலிருந்து பெறப்படுவதென்னவெனில், திருப்பி காணும் தேவை பெண்ணுக்கு இல்லை என்பதாகும்.

இவ்வாறு சமுதாயம் வரலாறும் கட்டிக்காத்து வந்த அர்த்தங்கள் மக்களை ஆட்கொள்ளும் வல்லமையுடைடையன. அவை இலட்சிய பூர்வமாயும், பண்பாட்டு அடிப்படையிலும் சட்டநெறியாகும் போது, மக்கள் அவற்றின் வழி நின்று ஒழுகுகின்றனர். இவ்விதமாகவே பெண்ணின் ஒழுக்க நெறி உருவாக்கப்பட்டது. பாலுணர்ச்சியை ஒறுத்தல், மறுமணஞ் செய்யாது இருத்தல், தாய்மையே பாலுணர்ச்சியின் ஊற்று மூலமென வலியுறுத்துதல் போன்ற ஒழுக்க சீலங்கள் பெண் மீது சுமத்தப்பட்டன.

இதன் விளைவு பெண்கள் அடங்கி ஒடுங்கி வாழ்தலாகும். ஆனால் இந்த வாழ்க்கை அவர்களின் சமூகத்திலோ தனிப்பட்ட முறையிலோ குறிப்பிடப்படுவதில்லை. தம் பாலுணர்ச்சி பற்றி இந்தப் பெண்கள் மௌனம் சாதித்தமை உண்மை நிலையைப் பறை சாற்றுவதாக அமைந்தது. அதைப்பற்றிப் பேசுவதே குற்றச்செயலாக அவர்களுக்குத் தோன்றியது.

பெண்கள் தாமாகவே முன்வந்து தம் திருமணத்தைப் பற்றி ஏற்பாடு செய்தலும் சமூக கலாசாரக் கட்டுக்கோப்பில் விபரீதமாக நோக்கப்படுகிறது. எம் ஆய்வுக்குட்பட்டவர்களில் நால்வர் மட்டுமே தம் துணைவரைத் தாமாகத் தேடிக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். ஏனையோரின் திருமணத்தில் பெரியோர்கள், தரகர்கள், சோதிடர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்களே இப்பெண்களின் எதிர்கால வாழ்வை ஏற்பாடு செய்தனர். இந்த விதமான ஏற்பாட்டைப் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்புடைய கைம்பெண் விடயத்தில் மேற்கொள்ளுதல் சாத்தியமன்று. இப்பெண்கள் தாமாகவே எதனையும் முடிவு செய்ய எத்தனித்தால், அம்முயற்சி பாலுணர்ச்சி மிக்க பெண்ணின் வெட்க்கேடான செயலாகக் கருதப்படும்.

ஆயினும், வேறு சில பெண்கள் மறைமுகமாகத் தம் அனுபவற்களை வெளியிட்டனர். இவர்கள் வேறுபல ஆய்வாளரிடம் அந்தரங்கத்தை வெளியிடவில்லை. நேரில் அவர்களைச் சந்தித்த என்னிடம் சொன்னார்கள். பதினெட்டு வயதான ஒரு கைமம்பெண் , தான் மறுமணம் செய்ய விரும்பினாலும் பல இடையூறுகள் உண்டென்றார். அவற்றில் முக்கியமானது இப்போது நடைபெற்று வரும் யுத்தம் என்றார்.

"எனக்குப் பயம். என் இரண்டாவது கணவரும் இராணுவத்தினரால் கொல்லப்படலாம் என அஞ்சுகிறேன். ஏனென்றால் அவர்கள் இளம் ஆண்களைத் தானே தேடித் திரிகிறார்கள்."

மற்றோர் இளம் விதவை தனக்கு மீண்டும் மணஞ்செய்ய விருப்பமிருந்தாலும் ஒருவரும் முன்வந்து கேட்கவில்லை என்றார். மேலும், ஒரு பெண் என்ற முறையிலே அதுவும் கைம்பெண்ணாக இருந்துக் கொண்டு தன் ஆசையை வெளியே சொன்னால் மற்றவர்கள் அதனை வெட்கக்கேடான செயல் எனத் தூற்றுவார்கள் என்றார்.

ஒரு விதவை மட்டுமே, தன் தாயார் தனக்கு மறுமணம் செய்து வைக்க விரும்புகிறார் என்றும், ஆனால் தனக்கு அதில் நாட்டமில்லை என்றும் சொன்னார். எட்டுப் பெண்களை ஆண்கள் நேரடியாக அணுகி, தம்மை மணந்து கொள்ளுபடி கேட்டார்கள். ஆனால் அந்தப் பெண்கள். ஊரார் சொல்லுக்கு அஞ்சியும் தம் குடும்பத்தினர் தம்மைத் தாபரிக்க மாட்டார்கள் என்பதாலும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை என்றார்கள். வயது, அந்தஸ்து, குலம், குடும்பப் பின்னணி, குணம் ஆகிய விடயங்களில் பொருத்தமற்றவர்கள் என்ற அடிப் படையில் அந்த ஆண்கள் நிராகரிக்கப் பட்டனர்.

மறுமணம் தொடர்பான கருத்து நிலை இரு வகைப்பட்டதாய்க் காணப்படுகிறது. ஒரு புறத்தில் பகுத்தறிவின்பாற்பட்ட விவேகமும், மறு புறத்தில் கலாசாரப் பின்னணியில் உருவான இலட்சியக் கோட்பாடும் பெண்களின் நிலைப்பாட்டினை நியாயப்படுத்துவதாக அமைகிறது. இப்பெண்கள் தம் கருத்துக்களை வெளிப்படுத்திய முறையும், உரையாடலின் பாங்கும் அவர்களின் அந்தரங்க சுத்தியைப் புலப்படுத்தின. தம் கலாச்சாரத் திணிவுகளை அவர்கள் விசாரணைக்கு உட்படுத்துவதாகவும் பதில்களைக் கண்டறி விழைவதாகவும் தோன்றியது.

"என் கணவர் நல்லவர். அவர் குடிகாரன்தான். என்னை அடித்தார்தான், என்றாலும் நான் மறுமணஞ் செய்து

கொண்டால் ஊரார் என்ன சொல்வார்கள்? ஊர் வாயை மூடமுடியுமா? ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரிக் கதைப்பர். அது தவிரவும் புதிதாக வரும் கணவர் மூலம் நான் குழந்தைகளைப் பெற்றால் அவர் என் முந்திய தாரத்துக் குழந்தைகளைக் கொடுமைப்படுத்துவார் அல்லவா? அக்குழந்தைகள் "எங்கள் அம்மா இந்த மனிதனைக் கலியாணஞ் செய்தபடியால் நாங்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது" என்று அக் குழந்தைகள் குறை சொல்லக்கூடும். என் எண்ணம் பிழையாக இருக்கலாம். என்றாலும் வாழ்க்கையில் எனக்கும் ஆசாபாசங்கள் இல்லாமற் போகுமா?" என்றார் யோசனையுடன். அவர் பலமாக யோசித்தார்.

வேறோர் இளம் விதவையும் இதே கருத்தை வேறுவிதமாக வெளியிட்டார்.

"புதுக் கணவர் மூலம் நான் பிள்ளைகளைப் பெற்றால் என் முன்னைய பிள்ளைகளை அவர் அடித்துத் துன்புறுத்திப் பாகுபாடு காட்டக் கூடும். எதிர் காலத்தில் என்ன நடக்குமென்று சொல்ல முடியுமா? மேலும் அவர் என்னை வேறொருவன் கடித்த கனியாகக் கருதக் கூடும். வேறொருவன் ஆண்டு அநுபவித்த உடலும் உள்ளமும் கொண்டவள் என்று நினைக்கலாம். கொதிக்கும் எண்ணெய்க்குத் தப்பி, எரியும் அடுப்புக்குள் விழுந்த கதையாகப் போய்விடலாம். இப்படியாக நடக்காது என்று உத்தரவாதம் தந்தால் நான் கலியாணம் செய்து கொள்ளத் தயார்"


திருகோணமலையிற் போலவே அம்பாறையிலும் பெண்ணின் பாலுணர்ச் சியானது சமூகக் கட்டுப்பாடுகளின் நிமித்தம், பொது விடயமாக ஓரளவு மாற்றம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. ஆயினும் திட்டவட்ட மாக நோக்கிய வேளையிலே வேறுபாடுகளைக் கண்டோம். இந்த வேறுபாடுகள் பெரும்பாலும் இனச்சார் புடையனவாய்த் தோன்றன. இங்கு வன்செயல்களுக்கு இலக்கான முஸ்லிம் பெண்களைச் சந்தித்தோம். அத்துடன் திருகோணமலைத் தமிழ்ப் பெண்களுக்கும் இவர்களுக்குமிடையில் கலாச்சார அடிப்படையிலும் வேற்றுமைகளைக் கண்டோம். கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழிப் பெண்கள் தாய்வழிக் கலாச்சார மரபைப் பின்பற்றுவோர் என நம்பப்படுகிறது. இதனை ஆண் துணையற்ற பெண்களின் பேச்சு வார்த்தைகளிலும், போக்கு வாக்குகளிலும் காணலாம். உணர்வார்ந்த எண்ணப் போக்கிலே இந்த வேறுபாடு குறிப்பிடத்தக்கதாய் விளங்குகிறது.

அம்பாறையில் வாழும் பெண்கள் மிகவும் வறியவர்கள். மன அழுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். அதிக விரக்திக்குள்ளானவர்கள். கவலையில் மூழ்கியவர்கள். ஆயினும் குரோதமோ, புரட்சி மனப்பான்மையோ அற்றவர்கள் இப் பெண்கள். ஆண் துணையற்று வாழ விரும்புகிறார்கள் தமிழ் பெண்கள், முஸ்லிம் பெண்கள் இரு சாரரும் இவ்வாறு தனித்து வாழ்வதற்குப் பல காரணங்கள் உள. இப்பெண்களிற் சிலர் மனைவிமாரை யுத்தத்திற்கு பலிக்கொடுத்த தம் மைத்துனர்மாரும் தோழிகளின் நண்பர்கள் சிலரும் மறுமணம் செய்துகொண்டார்கள். என்று தெரிவித்தார்கள் எனினும் மறுமணம் புரிந்துக்கொண்ட இரண்டு பெண்களைப் பற்றியே அவர்கள் நேரடியாக அறிந்திருந்தார்கள். சமுதாயம் தம்மீது பாகுபாடு காட்டகிறதென்பதை அறிந்துள்ள இப்பெண்கள் அந்த பாகுபாட்டுக்குக் காரணங்களாய் அமையும் சமூக கலாச்சார தடைகளை தகர்க்க இயலாதவர்களாய் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ் பெண்களிற் ஒரு சிலர் தாம் மறுமணம் செய்ய விரும்பாமைக்கு கற்பு நெறியை காரணம் காட்டினர். இந்துமதக் கோட்பாட்டின்படி ஒரு பெண் தன் வாழ் நாளில் ஒருவனையே மணந்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறது. இது ஒரு விதவையின் வாதம். மற்றொரு பெண் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஸன்' என்றார் பெரும்பாலான பெண்கள் வேறுவிதமாக வாதிட்டனர்.

"என் மைத்துனர் என் பிள்ளைகளைப் பார்க்க வந்தால் கூட ஊரவர்கள் பல விதமாக கதை கட்டுகிறார்கள். இதைவிட யாரையாவது கலியாணம் செய்துக்கொள்வது மேல். தனியாக வாழ்ந்து இடையறாத அவதூறாக்கு ஆளாவதைப் பார்க்கிலும் அது மேல் ஆனால் வருகிறவர் நல்லவராக இருக்கவேண்டும். என் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாய் பேணி வளர்க்க வேண்டும். குடிகாரனாய் இருக்ககூடாது".

திருமணங்கள் திருப்திகரமாய் அமைவதில்லை



— தொடரும் —

# வாழ்கை..

உலகமரத்தில்
உறவாடப்பூக்கும்
உன்னதப்பூக்கள்
நாங்கள்..

பிறப்பால் அனைவரும்
வானவில்தான்
பிறந்தபின்தான்
இந்த நிறப்பிரிகைகள்.

வாழ்கைப்பாதைக்கு
வழிகாட்டுவோர் யாருமில்லை
ஆனால் சாவுவண்டிக்கு
ரூட் சொல்லவோ
வழிகள் ஆயிரமுண்டு.

நேற்றுப் பூத்த மலர்கள்
இன்று இருப்பதில்லை
இன்று பூத்த மலர்கள்
நாளை இருப்பதில்லை

பிறந்த நாள் முதல்
இருந்து நாள் வரை
எங்கள் வாழ்வே
ஒரு போராட்டந்தான்.

இந்தப்போராட்டம்
வாழ்வதற்கா அல்லது சாவதற்கா
இந்தப்போராட்டத்தின் முடிவை
தீர்த்து வையுங்கள்
இல்லையேல் நீங்கள்
தீர்ந்து போங்கள்
வாழ்கை
ஒரு மௌனவிளையாட்டு.

டெக்லா.



ஒரு
விமர்சனப் பார்வை

# 80க்கு முன்னரும் பின்னரும் யாழ்ப்பாண நாடகங்கள்

50 இன் முற்பகுதியில் இருந்தே நாடகக் கலை இந்த மண்ணின் மக்கள் மிகமிக விரும்பி ரசிக்கும் கலையாக, இணுவில் அளவெட்டி தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, கரவெட்டி, பாசையூர், குருநகர், நாவாய்த்துறை, அரியாலை போன்ற இன்னும் பல இடங்களில் வரவேற்கப்பட்டு வளர்ந்துக்கொண்டு வந்த கலையாக இருந்தது.

நாட்டுக்கூத்து என்றும் இசை நாடகம் என்றும் நாடகம் என்றும் நொண்டி நாடகம் என்றும், அரங்ககலை (Theatre) பல்வேறு வடிவங்களில் இயங்கிக் கொண்டிருந்தது. கிராமங்கள் நகரங்கள் படித்தவர் பாமரர் என்ற பாகுபாடில்லாமல் இயற்கை உந்துதலில் வளர்ந்துக் கொண்டே வந்தது. அந்தக் கலைஞர்கள் சான்றிதழ்களை கையில் ஏந்தியவர்களாய் இல்லாது, பிறவிக் கலைஞர்கள் என்ற அடைமொழியைத் தாங்கிய படைப்பாளிகளாக இருந்தார்கள்.

அது சடங்கு அரங்காக இருக்கலாம், கிராமிய அரங்காக இருக்கலாம், மனோரீதியான அரங்காக இருக்கலாம், ஜனரஞ்சக அரங்காக இருக்கலாம், பாஸ்கா அரங்காக இருக்கலாம். இத்தனை ரசனைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் அரங்கச் செயற்பாடுகள் நடந்து கொண்டேயிருந்தன. அந்த வகையில் அரங்கு வளர்ந்துக் கொண்டேயிருந்தது.

அன்றைய அந்த நாடகங்களில் யதார்த்தம் அபத்தம் குரூரம் மனோரத்தியம் இவையெல்லாம் காணப்படவில்லையா என்பதை முறையான ஆய்வு புலப்படுத்தும். சனசமூக நிலையங்கள், கிராமசபைகள், பாடசாலைகள் என்றவாறு நாடக்கலை தன்னிச்சையாக நடந்தேறிக் கொண்டிருந்த காலமொன்று இருந்தது. இவை அந்த மண்ணின் மக்களின் உணர்வையும் தேவையையும் இரசனையையும் இலட்சியத்தையும் நன்நெறியூட்டலையும் வெளிக்கொணரும் மண்ணின் கலைவடிவமாகத் (Autothonous play) தென்பட்டன. "கந்தன் கருனை" "பொறுத்தது போதும்" "மண் சுமந்த மேனியர்" "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்" போன்ற இன்னும் ஒரு சில நாடகங்களே அந்த வகையின் இறுதிப் பிரசவங்களாக இருந்தன.

இலக்கணத்திற்கு இலக்கியம் படைப்பின் எப்படி ஏற்புடையதாக இருக்காதோ, அதேப்போன்று மேல்நாட்டு கோட்பாட்டுக்கும் நெறிமுறை களுக்குமாக வலிந்து நாடகம் சரிக்கட்டும் (not created but made) நாடக ஆசிரியர்களின் காலம் ஒன்று உருவாகத்தொடங்கியது. புற்றீசல்போல் நாடக ஆசிரியர்கள்; அவர்கள் கையில் சான்றிதழ்கள்; பாடமாக்கியதையே ஒப்படைக்கும் பரிதாபக் கலைஞர்களாக சில பல வேளைகளில் மிகத் தவறான கருத்துக்களை போதிக்கின்றார்கள்.

பழைய நாடகங்கள் எல்லாம் "தமிழ் சினிமாப் பாணி" என்று அறியாமல் கூறுகிறார்கள். உண்மையில் அன்றைய தமிழ் சினிமா சினிமாவே அல்ல் என்பதை இவர்கள் புரியாதிருக்கிறார்கள். அவை அனைத்தும் நாடகங்களே, நாடகம்தான் சினிமாவாக மாற்றப்பட்டதும். பராசக்தி, மனோகரா, திரும்பிப்பார், கட்டப்பொம்மன், காத்தவராயன், அபூர்வசகோதரர்கள்... தமிழ் சினிமாவும். சினிமா, என்ற பண்புக்கு மாறியது 90 களின் பின்னரேதான். எனவே அக்காலத்தில் எமது மண்ணில் நடந்தேறிய நாடகங்கள் நாடகங்களே தவிர சினிமாப் பாணியுடையவையல்ல.

இங்கு இப்பொழுது எமது நாடகஉலகம் நவீனத்துக்குள் புகுந்துவிட்டது என்று பரவலாகப் பேசப்படுகின்றதேயொழிய, ஒரு புதிய சகாப்தமோ அன்றேல் ஒரு புதிய திருப்புமுனையோ எமது நாடக உலகில் இன்னும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. 1956ம் ஆண்டு சிங்கள நாடக உலகு "மனமே" மூலம் ஒரு புதிய சகாப்தத்திற்குள் புகுந்துக் கொண்டது என்பதை நாம் மறக்கமுடியாது. அது தனக்குரிய நாடக வடிவத்தைப் பெற்றுக்கொண்டதாக பரவலாக பேசப்பட்டது. பேராசிரியர் சரச்சந்திரா "கோலம்" நாடக மரபில் ஆடப்பட்டு வந்த ஒரு கலை வடிவத்தினை, சமகால விழுமியங்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் உருவாக்கம்செய்து தன் கலாச்சார மரப்புக்குள்ளும், கலை வடிவத்திற்குள்ளும் நின்றுக் கொண்டே ஒரு முழுமைபெற்ற தேசியவடிவத்தை உருவாக்கினார். அதுதான் "மனமே".

இந்தக் கட்டத்தில் எமது ஈழத்தமிழ் நவீன நாடகப் போக்கினைச் சற்று விமர்சனக் கண்ணுடன் பார்க்கும் பொழுது வேதனையாகவே இருக்கின்றது. இங்கே "நவீனம்" உட்புகுந்திருப்பதாகப் பேசப்படுவது என்னவோ உண்மையேயாயினும் "தேடல்" இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதுதான் வேதனை. பெரும்பாலான இக்கால நாடகங்களில் ஸ்ரனிஸ்லஸ்வெஸ்கியையும், குரட்ட வெஸ்கியையும், பீற்றபுறுக்கையும், பேத்தல் பிரச்சட்டையும், றிச்சாட் செக்னரையும், அகஸ்தாபோலையும் தான் காண்கின்றோமேயொழிய ஒரு நல்ல ஈழத்தமிழ் நவீன நாடக வடிவத்தைக காணமுடியவில்லையே என்பதுதான் ஆதங்கம்.

நாட்டுக்குள் இருந்த நாடக்கலை ஏட்டுக்குள் புகுந்தபடியால், மேல்நாட்டு விதிமுறைகளும் கோட்பாடுகளும் இலக்கணங்களும் அதிவேக மேல்நாட்டு நாடக முறைமைகளின் கண்மூடித்தனமான பின்பற்றல்களும் நாடக ஆர்வலர்களுக்கிடையில், படித்தவர் பாமரர் என்ற பேதத்தை வளர்த்து விட்டதேயொழிய சொந்த மண்ணின் வடிவத்தினூடாக, புதுமையாக்கிப் பார்க்கும் ஒரு தேடலுக்கு வாய்ப்பளிக்கவில்லை என்பது வேதனைக்குரியதே. மிகச் சிறந்த நவின நாடக ஆசிரியர்கள் என்று கருதப்படக கூடியவர்கள்கூட, சில கருத்துக்களை இடித்தும் உடைத்தும் சொல்லவிரும்பாது தப்பிக்கொள்ளும் மனப்பாங்கோடு (Escapism) நாடகத்தை சப்பென்று முடிவுக்குக் கொண்டுவரும் பரிதாப நிலையைத்தான் கண்டோம். இதற்கு உதாரணம் "வேள்வித் தீ", இவர்கள் சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டதன் காரணமோ என்னவோ சமூகவிடுதலை சமுதாய மாற்றம் சுதந்திரம் என்பன பற்றியெல்லாம் உரத்துப் பேசமுடியாதவர்களாக மௌனத்திற்குள்ளேயே முடிவுகளை விழுங்கிக் கொண்டார்கள்

இன்னும் ஒரு சாபக்கேடு இக்காலத்தில் ஏற்பட்ட "கதாநாயக வணக்கம்"(Hero worship) இது காத்திரமான விமர்சனத்திற்குச் சாவுமணியடித்துவிட்டது. ஒரு யதார்த்த நாடகம் அங்கே நடுசாமம் படையினரின் சோதனை வீடுகளில் இடம் பெற இருப்பதான அறிவித்தல். இதன் பின்னரும் கூட ஒரு தமிழ் பெண் வீட்டில் தனியாக இருப்பதாகவும் கற்பழிக்கப்படுவதாகவும் காட்சி. எந்த தமிழப் பெண் இந்த அறிவித்தலின் பின்னர் வீட்டில் தனியாக இருப்பாள்? இதனை யதார்த்ததிற்கு மாறானது வலிந்துப் புகுத்தப்பட்டது, என யார் கூறத்துணிந்தார்கள்? இதேபோன்றே மரணச் சடங்கொன்றில் மரண அறிவித்தலைப் பகிரங்கமாக வாசித்தமை, இவை யதார்த்தத்தை உடைத்து, கதையை ஒட்ட முயன்றத் பகீரத முயற்சிகள், இத்தகைய பல கட்டங்களில் இன்று நம் நாடக ஆர்வலர்கள் எப்பொழுதுதான் தம் மௌனத்தை கலைப்பார்களோ தெரியவில்லை.

இந்த நிலையிலும் சிதம்பரநாதனின் "பொய்காலும்" ரதீதரனின் "மலநீக்கமும்" தேவானந்தனின் "அக்கினிப் பெருமூச்சும்" கெனத்தின் "திசைகள் தெரியாதவைகளும்" ஜோன்சன் ராஜ்குமாரின் "ஜீவ பிரயத்தனமும்" ஜெயரஞ்சனியின் "கூர்" எனும் நாடகமும் இக்காலகட்டத்தில் எம்மை ஒருமுறை உலுக்கிவிட்டு உணர்வை தட்டிச் சென்ற படைப்புகள்தான்.

நாடகம் பல கலைகளின் கூட்டு என்பர் நாடகவியலாளர். அனைத்துக்கலைகளும் மேடையில் சங்கமிக்கும் பொழுதுதான் அது மேன்மையுறும். ஆனால் எமது தமிழ் நாடகங்களில் நாடகப்பிரதியும் அதன் இலக்கிய நயமும் மட்டும்தான் பெரும்பாலும் விமர்சிக்கப்படுகின்றது. நெறியாளர்களும் அதனையே முக்கியத்துவப் படுத்துகிறார்கள். ஏனைய கலைகள் பெரும்பாலும் மேடையில் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நிலையில் எமது மதிப்புக்குரிய பேராசிரியர் சிவத்தம்பி ஐயா அவர்கள் "இண்டைக்குசிங்கள நாடகத்தை நாங்கள் விஞ்சிவிட்டோம்." என்று கூறுவது (கலைமுகம் பேட்டி கலை 14, முகம் 1) எமது நாடக உலகம் இன்னும் தன் நிலையை சரியாக உணரவைப்பதைத் திசை திருப்பிவிடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது தர்மசிரீபண்டாரநாயக்காவின் சிங்கள நாடகமாகிய (ரேஜன் பெண்கள்) என்ற நாடகத்தை பார்த்தவர்கள், இந்தக் கூற்றையிட்டு, சற்றுச் வருந்துவார்கள், இன்றைய நவீன நாடக, கோட்பாடுகளின் அத்தனை அம்சங்களும் ஒன்றினைந்து உள்ளத்தைத் தொட்ட ஒரு படைப்பாக அது அமைந்திருந்தது. இதனைப் பாராட்டாதவர்கள் எவருமேயில்லை, எமது தமிழ் பிரபல நாடகாசிரியர் ஒருவர் "That performance was a symphony of the elements of drama and theatre and a harmonious synthesis of dramatic stayles" என்று பாராட்டியிருந்தார். "ஸ்பாட்டக்கஸ்" நாடகத்தை உருவாக்கிய திருமறை கலாமன்றத்தினர் அதனை இந்த மாதிரி மேடையில் படைக்க தவறிவிட்டார்களே என்பது கவலைதான். அண்மையில் மேடையேறிய விசாகா சந்திரசேகரனின் "தடைசெய்யப்பட்ட பூமி" (forlidden land) என்ற சிங்கள நாடகம் தமிழ் நாடகத்திற்கும் சிங்கள நாடகத்திற்கும் உள்ள நீண்ட இடைவெளியை மீண்டும் காட்டி நிற்கின்றது. இன்னும் றுவன் மலிக் பீறிசின் "தாச மல்லிகே பங்களாவ", ரஜித திசாநாயக்காவின் "வீரயா மரிலா", சரத் கொத்தரலாவலயின் "சூக்கிரயகே சமக", ஜெரோம் டீ சில்வாவின் "ஆயித் என்ன நா" போன்ற நாடகங்களைப் பார்த்தவர்கள் சிவத்தம்பி ஐயாவின் கூற்றையிட்டு ஆச்சரியப்படுவார்கள். பெருங்காட்சிப்படுத்தல் அரங்கைப் பொருத்தவரை வருடத்துக்கொருமுறை இடம்பெறும் திருமறைக் கலாமன்றத்தின் "திருப்பாடுகளின் காட்சி" (passion play) ஒன்றுதான் தெற்கிலும் பேசப்படும் ஆற்றுகையாக உள்ளது. இருப்பினும் 90 களின் முன்னர் பாதர் சவரி அடிகளாருடைய நெறியாள்கையில் கண்ட ஒழுங்கமைவு (perfection) மேடைச்சமநிலை (Stage balance) உணர்ச்சிப் பிரவாகம் (Empathy) போன்றவற்றை, ஏனையவர்களின் நெறியாள்கையில் இப்பொழுது காணமுடியவில்லை. எமது மண்ணின் சூழ்நிலையும் இதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். இருப்பினும் உண்மைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியவை. அப்பொழுதுதான் நாம்வளர முடியும். இதனை அறிஞர் எனப்பட்டோர் உணரவேண்டும். ஏனெனில் சங்ககாலத்திற்குப் பின்னர் கங்கை கொண்டான், கடாரம் வென்றான் என்று புழுகி புழுகியே பின்நோக்கிப்போன இனம் எமது இனம்.

ஒரு காலத்தில் ஆங்கில நாடக மோகத்தில் மொழிப்பெயர்ப்பு நாடகங்கள் மேடையேறியப்பொழுது அது காலனித்துவ ஆதிக்கத்தின் சாயல் என்று சாடினோம். இன்று அது வேறுவடிவத்தில் (நவீனம்) வந்து இங்கு புகுந்து ஐரோப்பிய மயமாக்கலுக்குள் நாடகஉலகை இழுத்துச் செல்லும் நவ காலனித்துவ (Neo colonialisim) செயற்பாடாகிவிட்டதோ என்று ஏங்குவாருமுள்ர். இதனால்தானோ என்னவோ நமது சிறுகதை ஆசிரியர்களில் ஒருவரான நந்தினி சேவியர் "எப்பொழுது பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக நாடகம் வைக்கப்பட்டதோ அப்பொழுதே நாடகம் என்பது செத்துப்போய் விட்டது" என்றார். (கலைமுகம் - தை - ஆனி இதழ் 2004) இது மிகைப்படக் கூறப்பட்டதாயினும் கூட

ஏன்? என்று ஆராய்ந்து ஆவன செய்யப்பட வேண்டியது அவசியம்.

பல்கலைக் கழக பாடவிதானத்திற்காக ஒரே வட்டத்திற்குள்ளேயே நாடகங்களை மாறி மாறி உருவாக்கிக் கொண்டிராமல் நாட்டுக்குள் தேடல் செய்து அங்கே அன்றும் இன்றும் நடந்த நாடகங்களை ஆய்வு செய்யின் நிச்சயமாக ப்றெக்றின் அன்னியப்படுத்தலும், ஆர்த்தோவின் உணர்ச்சியூட்டலும், கிரேக்க துன்பியலின் கதாசிகம், ஸ்தனிஸ் வெஸ்கியின் உணர்ச்சிப் பிரவாகமும் அவற்றில் தென்படுவதைக் கர்ணக்கூடியதாக இருக்கும். நாடக அரங்கியல் பட்டப்படிப்பை படித்தவர்கள் எல்லோரும் நாடகவியலாளர் ஆக முடியுமா என்பது சந்தேகமே. ஆனால் நிச்சயம் ஒரு நாடக சட்டம்பியாளராக (Drama and theatre teacher) முடியும். ஆனால் நாடக கலைஞனாக வந்து அரங்கியலை கற்றவனே ஒரு நல்ல நாடகவியலாளனாக (Drmatist) முடியும். அவன் தனியனே நாடக வரலாற்றில் மட்டுமல்ல பல்கலைத்தேடலுக்குள்ளும், அரசியல் தொட்டு சமூகவியல் வரையிலான பல்கலை சங்கம அறிவியலுக்குள்ளும் மூழ்கியவனாக இருப்பான். அவனே ஒரு நாடக படைப்பாளியாக முடியும். மகாத்மா காந்தி கூறினார் “சரித்திரத்தைப் பின்பற்றாதே, சரித்திரத்தைப் படை” என்று நம்மவருள் இருக்கும் ஒரு நல்ல நாடகாசிரியரையாவது உலகம் பேசவைக்க நாம் இதனையே செய்யவேண்டும்.

நெல்லை நடராஜா

# செம்மொழி-தகுதிப்பாடுகள்

ஒரு மொழி சிறந்த மொழியாகவும் உயர்ந்த மொழியாகவும் இருக்கலாம். அதிகமான எண்ணிக்கையினரால் பேசவும் எழுதவும் பயன்படுத்தப்பட்டு வரலாம். அது ஒரு சிறப்புமிகு மொழியாகக் கருதப்படுமேயன்றி, செம்மொழியாகக் கருதப்படாது.

செம்மொழியாக உலகினரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனில் அதற்கு மொழியியல் அடிப்படையில் பதினொரு (11) தகுதிப்பாடுகள் இருக்கவேண்டுமென மொழியியலாளர்கள் வரையறைசெய்துள்ளனர். இத்தகைய பதினொறு தகுதிப்பாடுகளும் உள்ள மொழிகள் மாத்திரமே செம்மொழியாக அங்கீகரிக்கத்தக்க தகுதிப்பாடுடைய மொழிகளாகும்.

உலகிலுள்ள செம்மொழிகளில் தமிழ் ஒன்று மட்டுமே இந்தத் தகுதிப்பாடுகள் அனைத்தையும் கொண்ட ஒரே மொழி என்பது நமக்கே தெரியாத மாபெரும் மொழியியல் உண்மையாகும்.

செம்மொழித்தகுதிக்கு மொழியியலாளர் வகுத்துள்ள பதினொருதகுதிப்பாடுகளாவன;

1. தொன்மை. **(ANTIQUITY)**
2. தனித்தன்மை. **(INDIVIDUALITY)**
3. பொதுமைப்பண்பு. **(COMMON CHARACTER)**
4. நடுவு நிலைமை. **(NEULRALITY)**
5. தாய்மைத்தன்மை. **(PARENTAL KINGSHIP)**
6. பண்பாடு,கலை,பட்டறிவு வெளிப்பாடு.
7. பிறமொழித்தாக்கமில்லா தனித்தன்மை.
8. இலக்கிய வளம் **(LITERARY PROWESS)**
9. உயர் சிந்தனை. **(NOBLE IDEAS AND IDEALS)**
10. கலை, இலக்கியத்தனித்தன்மை வெளிப்பாடு— பங்களிப்பு.
11. மொழிக்கோட்பாடு. **(LINGUISTIC PRINCIPLES)** — மணவை முஸ்தபா

சிறுகதை

# ஒரு தலையும் ஒன்பது முகங்களும்

'அவள் பிள்ளை என்ன செய்வாள்? சாகத்தான் வேணும். வேறைவழியில்லை' ரெலிபோன் மணியின் பின் வந்த அனுதாபம் அழுகிறது.

வீட்டுக் குசினிப்பாத்திரங்கள் உருளுகின்றன. கணீர் என்ற இரைச்சலுடன் கண்ணாடிப் பாத்திரங்கள் நொருங்குகின்றன. தளபாடங்கள் நடுங்குகின்றன. மதில்கள் அசையத் தொடங்கிவிட்டன. மரங்கள் வேர் பிளந்து அந்தரத்தில் பறந்து சரிகின்றன. கட்டிடங்கள் கூத்தாடி நொடிப் பொழுதில் குலைகின்றன.

நிலம் பிளக்கிறது. சிதறுகின்றது. நிலக் கருவறை வெடித்து நெருப்புக்குளம்பு இரத்த ஆறாகப் பாய்கிறது. எரிமலையின் புகை மூட்டம் முகில்களைத்தாக்கியழித்து வானத்தை தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிடுகிறது. எல்லாம் சிலகணப் பொழுதில் நிகழ்ந்துவிடுகின்றன.

எல்லாம் அமைதியாகிறது, இப்போது எங்கிருந்தோ மெல்லிதாக சிரிப்புச் சத்தம் கேட்கிறது. வெட்கத்தோடு கூடிய பெண்களின் சிரிப்பொலியாக வெளியெங்கும் ஒலிக்கிறது. அப்பெண்களின் சிரிப்பொலி வான வெளியெங்கும் அட்டகாசமான முழக்கம் போல் பெருத்துக் கொண்டு வருகின்றது.

அம்முழக்கம் மாறிமாறி கேட்கிறது. திருமணப்பந்தலில் தாலிகட்டும் போது முழங்கும் மேளதாள வாத்திய முழக்கமாக மாறுகிறது. அதே நேரம் கணவனின் மரணச் சடங்கில் மனைவி தாலியைக் கழட்டி வைக் கையில் அழுது முழங்கும் பறையொலி யெனப் பரவுகிறது.

மின்னல் ஒன்று வெடித்துச் சிதறி மேகவெளியில் மறையும் அக்கணத்தில் சிரிப்பொலியுடன் ஒரு தலையும் ஒன்பது முகங்களும் ஒட்டியவாறு பெண்களின் பெரிய தோற்றங்கள் வானவெளியெங்கும் நிறைந்து பரந்து பளிச்சிடுகின்றன. மிகப் பிரமாண்டமாகத் தோன்றும் தலைக்கும் முகங்களுக்குமுரிய உடலின் அங்கங்கள் தெரியவில்லை.

பூவிழந்து பொட்டிழந்து என்பார்களே அவ்வாறுதான் அம்முகங்களுக்குரியவர்கள் விதவைப் பெண்களாகவே தெரிகின்றனர். அப்பெண்களின் விரித்த தலையின் முடிமயிர் மேகம் முழுவதும் உடனேயே அலையலையாக கருமுகில் கூட்டங்களாகி விடுகின்றன. நடுவில் தெரியும் தலைக்குரிய பெண்ணின் வனப்பு மாலைச் சூரியனின் கடுஞ்சிவப்பு நிறமாகத் தோன்றுகிறது. ஒன்றாக அவை நவரச உணர்வுகளை வெளிக்காட்டித் தம்பாட்டில் ஒவ்வொன்றாக உரையாடத் தொடங்குகின்றன.

இடதுபக்கத்தில் தோன்றும் முதலாவது தலைக்குரிய செந்தாமரை பேசத் தொடங்குகிறாள்.

'என்மீது அனுதாபங் கொண்ட சமுதாயத்துக்கு நன்றி. என் அம்மா, அப்பா, சகோதரர், உறவினர், அயலவர், நண்பர் எல்லாரும் எனக்கு வழங்கிய அனுதாபமும் நான் சாகத்தான் வேணும் என வழங்கிய தீர்ப்புமே எனக்கு நிம்மதியைத் தந்தன. நான் விரும்பிய முடிவும் இது தான். என் போல எந்தப் பெண்ணும் வாழவே கூடாது.

வாழ்வா, அது என்ன? நினைக்கவே முடியாதிருக்கிறது. பண்பாட்டின் புகழ் பூத்த பாரத தேசத்தின் இராஜஸ்தானில் உடன்கட்டையேறும் விதவைப் பெண்ணின் நிலை சரியென்பதே என் கொள்கை. நிலத்தில், அதுவும் மனிசர் மத்தியில் எனக்கு சின்ன வயதிலிருந்து பட்ட சிறைவாழ்க்கையில் — சாப்பிடவே வழியற்றுத்திரிந்த எங்கள் குடும்பத்தில் எனக்குச் சிரிப்பையும் மகிழ்ச்சி என்பதையும் காட்டிய என்ரை ராசன் போனாப்பிறகு நான் எப்பிடி வாழ்வது? நானும் ஒரு மனுஷி என மற்றவர் முன் எப்பிடி நிற்பது?

நானும் ஒரு மனுஷி என நடக்க முடிந்ததே அவரால்தானே! பொருளால் அன்பால் ஆசையால் என்ன குறை எனக்கிருந்தது. எனது செத்த கணவனை மீளப்பெற நான் என்ன சாவித்திரியா? அதனால்தான் நானும் என் பிள்ளைகளுடன் சரியாக அவர் இறந்த ஒரு வருடத்தில் அதே தினத்தில் அவரைத் தேடி நிலத்தில் வாழ முடியாதென முடிவெடுத்து வாழ்வை முடித்துக் கொண்ட ஓர் அறுதலி நான்.

அவரைச் சந்திப்பதற்காகவே இப்போது ஆவியாக அலைகின்றேன். அவருடன் நான் இணைய வேண்டும் என்பதே என் ஆசை! வாழ்வில் ஆசை என்பதன் அர்த்தத்தை புரிய வைத்த என் புருஷனைத் தேடிய என் பயணம் புனிதமானதல்லவா? எனக்கும் மனநிறைவாகவுள்ளதே'

செந்தாமரை மிக நிதானமாகவே தனது பேச்சை நிறுத்துகிறாள். அண்ட வெளியெங்கும் ஒரே அமைதியாகிறது. நுளம்பின் சங்கீதம் கூட அங்கே கேட்கவில்லை. இப்படி ஒரு மௌனம் இப்பிரபஞ்சத்தில் உண்டா என்ற வியப்பு மேலிடுகிறது.

செந்தாமரையின் முகத்தோடு ஒட்டிய ஏனைய ஒன்பது முகத்துக் குரியவர்களும்கூட பூவும் பொட்டுமிழந்த தமது விதவைக் கோலங்களையே வெளிப்படுத்தினர். அவர்களின் வெண்துகிலாக வானம் முழுவதும் இப்போது வெண்முகிற் கூட்டங்கள் சுருள் சுருளாக படர்ந்து சடைத்துக் கிளைத்திருக்கின்றனவோ!

இரண்டாவது முகத்துக்குச் சொந்தமான சத்தியா தனது இமைகளை மூடித்திறக்கிறாள். உதடுகள் அசைகின்றன. முகத்தில் அப்படியொரு சாந்தமும் அமைதியும் வெளித்தெரிகிறது.

நான் எனது வாழ்வில் முப்பது வருடங்களாகவே பூவும் பொட்டும் வைத்த பூவையாகவே பொலிவாகத் திரிகின்றேன். என் கணவர் உயிரோடு இருக்கிறார். எனினும் நான் விதவையாகவே வாழ்கிறேன். புருஷன் உயிருடன் இருக்கிறார் என்பதால் தான் இந்தப்பூவும் பொட்டும் எனினும் சிறுவயதில் நான் எனது கிராமத்தில் எவ்வளவு பூரிப்புடன் திளைத்திருந்தேன்.

எனது அம்மாவின் அண்ணன்மார் — மாமாமார் ஊரில் பொடியள் என்னை சுத்திவருவதைக் கண்டு குதித்தனர். ஊரை வெறுத்தனர். பிறத்தில் எங்கேனும் உத்தியோக மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுக்க விரும்பினர். என் படிப்பு இடையில் நிறுத்தப்பட்டது.

இரவோடிரவாக நடையர் கடைக் காரில் நான் அலங்கரிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறேன். கார், கடையொன்றின் அருகில் நிறுத்தப் படுகிறது. மாமன்மார் தேனீர் பருக இறங்குகின்றனர். காரை ஓட்டி வந்த சபாரட்ணம் தன் மனதில் கொதித்துக் கொள்கிறான். 'பாவம் கிளி (எனது பட்டப்பெயர்) இப்பிடியே கிளியை வேறெங்கையெண்டாலும் கொண்டு போய் விட்டால் என்ன, மாட்டுப்பட்டு விட்டாள்'. அந்த நினைப்பு எனக்கெங்கே தெரியப்போகிறது. தெரிந்தாலும் எனக்கெனத் தனிவிருப்பம் இருக்க முடியுமா? குடும்ப கௌரவத்துக்கு நான் பணிவதுதானே பெண்ணின் பெருமை. நான் பேசாமலே செல்கிறேன்.

எனக்கும் மாப்பிள்ளை கனகரத்தினத் துக்கும் பொம்மைத் திருமணம் முடிகிறது. அப்போது எனக்கு நரகம் தொடங்குகிறது. முதல் நாளிலேயே 'உள்ளூரில் விலை போகாத மாடுதான் வெளியூர் சந்தைக்கு வரும்' என்ற அவரின் வரவேற்புரை என்னை பொம்மை நிலையிலிருந்து விழிக்கச் செய்தது. எதுவுமே நான் பேசவில்லை. நான்கு பிள்ளைகள் — வருடமொன்றாகப் பெற்றேன். சற்று அவருக்கு 'உழைப்பு' என்பதைப்பற்றிச் சொன்னேன். அவரோ மாமன்மார், எனது பெற்றோரின் சீதனத்தில் தன் குடும்பத்தின் சீவியத்தை முடிக்க விரும்பினர். எனவே பத்தினிப்பெண் நானும் சீதன வளவை விற்பதற்குக் கணவனின் மனங்கோணாமல் உறுதியில் ஒப்பமிட்டேன். நகைகளை விற்றேன்.

பிறகு என்ன செய்வது, முடியவில்லை. பிரிந்தோம். எனக்கும் பிள்ளைகளுக்கும் வயிறும் இருக்கிறதே! எனவே 'தாபரிப்பு' வழக்கை நீதிமன்றில் போட்டேன். என் புல்லானாலும் புருஷனோ, பொன்மொழி புகன்றார் 'மணி அடிச்சா சோறு, மயிரு வளர்ந்தாச் சேவு' என்று. விளக்க மறியலிலிருப்பதே தனக்கு வசதியென்றாராம். காசும் இல்லை. கணவனும் இல்லை.

ஏதோ என்ரை பிள்ளையளின்ரை காலம் மாறிச்சுது. முப்பது வருஷம் தனிச்சே இருந்து விட்டன். பிள்ளையள் கரைசேர்ந்திட்டுது. நான் இப்ப தனிச்சுப் போனன். ஐம்பது வயது இப்ப எனக்கு ஆம்பிளைத்துணை வேணும்.

இதை நான் சொல்ல ஏலுமா? நினைக்கத்தான் முடியுமா? இதை நான் ஆரிட்டைக் கேக்க ஏலும். தம்பிமார், தங்கைச்சிமாரிட்டை கதைக்க ஏலுமே? புரிசனைப்பிரிஞ்சு இருக்கிறனான். பூவோடையும் பொட்டோடையும் திரியிறதையே பார்த்து 'திமிரபிடிச்சவள்' எண்டு நினைக்கிறவையோட என்னண்டு பேச ஏலும்?

முந்த நாள் கிடைச்ச தகவலின்படி என்ரை அவர் — மாப்பிள்ளை கனகரத்தினம் உயிர் பிரிஞ்சிட்டார். இனித் தலேலை பூவும் வைக்க ஏலாது. நெத்தியிலை பொட்டும் வைக்கப்படாது. வெள்ளைச் சீலைதான் கட்டவும் வேணும். வெளியிலை கோவில் குளமெண்டு போறதெண்டாலும் இப்படியேதான் நான் போகவேணும். இப்பதான் எனக்கு 'கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்' எண்டது புரியுது.

புருஷன் இல்லாத பொம்பிளை எப்படி வெளியுலகத்திலை முழிக்கிறது. தாலியறுத்தவள் எண்ட முணுமுணுப்புக்கு முன்னாலை எப்படி நான் சீவியம் நடத்துறது? அப்பிடி ஒரு சீவியம் ஏன் எண்டு எனக்கு விளங்கேல்லை. எனது உடல் இப்போதும் சத்தியா என்ற பெயரில் ஒட்டிக்கொண்டு ஊரில உலகத்தில உலவுது. உயிராகிய நான் ஆவியாகி காற்றாகி பிரபஞ்ச வெளியெங்கும் அலைகிறன்

சத்தியா தன் கதையை முடித்து விடுகிறாள். மெல்லிய விம்மல் ஒலி கேட்கிறது. அந்த விம்மல் பிரபஞ்ச வெளியெங்கும் எதிரொலிக்கிறது. எனினும் பூமியின் ஈர்ப்பு விசைக்குள் அவ்விசும்பல் அகப்படவேயில்லை.

மிகுதி ஏழு முகங்களும் நடுவில் உள்ள தலையும் முண்டியடித்துக் கொள்கின்றன. தாங்களும் தங்கள் கதையை சொல்லவேண்டுமென்பதில் ஆர்வமாய் உள்ளன. இந்த எட்டுப்பேரும் கூட புவியோட்டில் தமது உடல்கூட்டுடன் உலாவுபவர்கள்தான். அங்கே அமைதி இல்லை என்பதால் தமது முகங்களைப் பறித்துக்கொண்டு பிரபஞ்ச வெளியெங்கும் கிரகங் கிரகமாக பயணப்பட்டுள்ளனர். எங்கெங்கு சென்றாலும் அவர்களின் முறைப்பாடுகள் கேட்பதற்கு இதுவரை எவருமே கிடைக்கவில்லை.

என்றாலும் எல்லோரும் தத்தமது பெயர்களோடுதான் வலம் வருகிறார்கள். மூன்றாவது முகத்துக்குரிய ஜெயகௌரி பேசத் தொடங்கினாள். பேச்சில் தெளிவில்லை. விக்கி விக்கிப் பேசுகிறாள். விக்கல் ஒலி பெரிதாகிறது.

"முப்பத்தெட்டு வயதுதான் எனக்கு. நான் ஒரு நல்ல பெண்ணாக பெற்றாரால் வளர்க்கப்பட்டள். ஐயா, அம்மாவுக்கு வயது போமிட்டுது. அவை வருத்தக்காரராய் விட்டினம். அவையின்ரை அலுவல்களைக் கவனிக்கவே எனக்கு நேரம் காணாது. சகோதரரும் கலியாணம் கட்டிக்கொண்டு போனதோடை தங்கடை குடும்பங்களைக் கவனிக்கிற சங்கடத்திலேயே அவை மாண்டுபோகினம். ஆரும் வீட்டுக்கு வாறநேரம் அல்லாட்டில் றோட்டிலை காணேக்கை அவையின்ரை பொழுதுபோக்குக்காயோ அல்லாட்டில் என்னிலை தங்களுக்கு அனுதாபமிருக்குதெண்டதை வெளிப்படுத்து றதுக்காகவோ கலியாணக் கதையை எடுப்பினம்.

ஆரைச் சொல்லி என்ன குறை. இருபத்தைஞ்சு வயதிலையே தங்கடை

புருஷன்மாரை போரிலை — ஷெல் தாக்குதலிலை பறிகொடுத்த சின்னப் பெட்டையளே வாழேல்லையே!' எண்டு எனக்கு நானே பதில் சொல்லிப் பாக்கிறன். ஆனால் அவைக்கு நினைக்கவெண்டாலும் ஒரு ஆசையான புருசன்ரை ஒரு பேரும் அந்த ஆம்பிளேன்ரை உருவப்படமாவதும் மிஞ்சி இருக்குது. நான் ஆரை நினைக்கிறது. எந்தப்பேரை உச்சரிக்கிறது. முதிர கன்னியாகவே என்ரை பிரச்சினை முடியட்டும், எண்டுபோட்டுப் பேசாமல் இருக்கிறன்."

ஜெயகௌரி பேசாமல்தான் இருக்கிறாள். எண்டாலும் அவளின் முகம் அவளை விட்டு அகன்று ஆகாயமெல்லாம் அலைவதை ஆர்தான் அவதானிக்கிறார்கள். அவதானிக்கத்தான் நேரம் ஏது? அவ்வாறு நேரந்தான் கிடைச்சாலும் என்னத்தைத்தான் எவராலையும் செய்ய ஏலும்?

நான்காவது முகத்துக்குரியவள் ஓர் ஆசிரியை. சாந்தி எண்டது அவர் பெயர். மிகவும் சாதாரணமாக தனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்பது போலவும், தனக்கு ஓழிச்சலற்ற வேலையும், எப்பவும் பிஸியாகவே இருப்பதாகவும் தன்னைக் காட்டிக்கொண்டு, தனது தங்கையின் குடும்பத்தினருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். தங்கையும் புருஷனை இளமையில் இழந்து எழுதுவினைஞராக வேலை செய்கிறாள். எனவே தங்கையுடன் சேர்ந்து அவரின் வீட்டிலிருப்பதில் எவ்வித தடங்கலுமில்லை.

தங்கையின் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்து அவர்களின் பிள்ளைகளைப் பார்ப்பதும், தங்கையின் மகளின் புருஷனுக்கு பணிவிடை செய்வதிலும் என பொழுது கரைகிறது. தனது ஆசிரியப்பணி ஒரு புறம். வீட்டு வேலை மறுபுறம். சாந்தி ஓர் பிஸியான ஆசிரியைதான். ஆனால் ஏன் அவருடைய முகமும் இங்கே வந்து ஒட்டிக்கொண்டது என்பதுதான் புரியவில்லை. சாந்தி தனக்குள்ளே ஒழித்து வைத்த முகம் அவளுக்குச் சொல்லாமலேயே அவளைவிட்டு வெளியேறி வந்துவிட்டது.

"உங்களுக்குச் சொன்னாலென்ன. படிக்கிற காலத்திலை ஒருவர் என்னை விரும்பினார். அவர் எனக்கு தேவையான எல்லாம் செய்தார். நானும் விரும்பினன். ஏன் விரும்பினன் எண்பது ஒண்டும் எனக்குத் தெளிவில்லை. அவர் ஒரு அதிகாரி. மரியாதை செலுத்தினார். நானும் மதிச்சன். பிறகுதான் தெரிஞ்சுது. அவர் கலியாணம் கட்டிப் பிள்ளைகளுள்ளவரெண்டு. எண்டாலும் அவற்றை உறவை என்னாலை பிரிய முடியேல்லை. அதாலை அவற்றை குடும்பத்திலையும் கரைச்சல் எங்கடை உறவு பிரிஞ்சுது.

அவரோடை களவாக வாழ்ந்த காலத்து நினைவுகள் மட்டுமே எனக்கு மிச்சம். தங்கச்சிக்கும் இப்பிடி நேர்ந்துவிட்டுது. அவவுக்கு உதவியாயிருப்பம் எண்டு அவவின்ரை பிள்ளைகளுக்கு உதவியாய் இருக்கிறன். நான் நடத்தைகெட்டவள் எண்டதாலையும் என்ரை இளமைக்கால அப்பத்தப் போக்காலையும் எனக்கு வேற கலியாணமே நடக்கேல்லை. எண்டாலும் கலியாணம் கட்டிப் பிள்ளையளோடை துன்பப்படுறவையைக் காட்டிலும் நான் சந்தோஷமாய்த்தான் இருக்கிறன்".

"சந்தோஷமாய்த்தான் இருக்கிறன்" எண்டு நாலைஞ்சு தடவை சொல்லிச் சொல்லிச் சிரித்த சாந்தி மீண்டும் மீண்டும் சொல்லி உரத்துச் சத்தமிடுகிறாள். அதே சொல்லை திரும்பத்திரும்ப சொல்லியபடியே சிரித்தவள் அழத்தொடங்கிவிட்டாள். சந்தோஷமாய்த்தான் இருக்கிறன் என்று உரத்து அழுகிறாள். அது ஒப்பாரியுமல்ல. உரத்த அழுகைச் சத்தத்தில் அமைதியாகச் சுழன்று கொண்டிருந்த பூமி உருண்டையில் ஒரு குலுக்கம் ஏற்பட்டு மீண்டும் சுழலகிறது.

மிகுதி ஐந்துமுகங்களுக்குரியவர்களும் அவை ஒட்டப்பட்டுள்ள நடுவில் உள்ள தலையும் அமைதி காக்கத் தயாரில்லை. அவர்கள் எல்லோரும் ஒன்றாகவே தத்தமது கதைகளை சத்தமிட்டுச் சொல்லுகின்றனர். அதனைப் புரிந்துகொள்வது சற்றுச் சிரமமாகத்தான் உள்ளது. என்றாலும் பொறுமையோடு அருகருகே சென்று உற்று அவதானிக்கிறேன். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குரல்கள் கேட்கின்றன. எனினும் கேட்கும் தகவல்களைப் பதிய முயற்சிக்கிறேன். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் குரல்கள் இணைந்து சத்தமிடுவதாலும் குளறுவதாலும் (ஒப்பாரி போலவும் இருக்கிறது) தெளிவில்லாத படியாலும் கூர்ந்து அவதானிக்கிறேன்.

ஐந்தாவது முகம் தன் பாட்டிலேயே பேசத் தொடங்கிவிட்டது. 'நான் தனிச்சனான். என்ரை புருஷன் செத்தாப்பிறகு என்ரை பொம்பிளைப் பிள்ளையள் எல்லாரும் கட்டி விட்டினம். கடைசி மகள் பானுவைத் தவிர. அவளை நான் இப்ப ஆருக்கும் அவசரப்பட்டு கட்டிக் குடுக்க மாட்டன். அவளுக்கு இருபத்தெட்டு வயதெண்டாலும் என்னோடை இருக்கட்டும். நல்ல இடமாப் பாத்துத்தான் செய்வன். அவள் ஆரையோ செல்லாக்காசுகளை விரும்புறாள் எண்டதுக்காக நான் பாழுங்கிணத்துக்கை விழுத்த அனுமதியன். என்ரை பிள்ளையவள். என்னிலைதான் பாசம். என்னோடை இருக்கட்டும்.

ஆறாவது முகம் தன் இமைகளை உயர்த்திக்குரலை அழுத்தி தெளிவாகத் தன் சிக்கலை முன்வைக்கிறது. 'நான் ஆர்? ஒரு லெக்சரர். முப்பத்தெட்டு வயதிலையே ஒரு பி.எச்டி. கோல்டர். என்ரை அப்பர் ஒரு றிற்ரையட் பிறின்சிபல். அவர் எனக்கு எல்லா உதவியளும் செய்வார். என்னைத் தன்ரை செல்லப்பிள்ளையோல இண்டைக்கும் என்ரை உடுப்புகளை தோய்க்கிறது முதல் என்னை எங்கையும் கூட்டிக்கொண்டுபோறது வாறது எல்லாத்துக்கும் ஒத்தாசையாய் இருக்கிறார். என்னை ஒரு குழந்தையாய் இப்பவும் கவனிக்கிறார். நான் ஒரு செல்லப்பிள்ளை.

ஆனால் ஒண்டு மட்டும் எனக்குப் பிடிக்கிறேல்லை. சும்மா, சும்மா பீஏ., பீஎஸ்சி, எண்டு வெறும் 'கிறாச்சுவெற்சை' மட்டும் கலியாண மாப்பிள்ளையாய்க்கொண்டு வாறார். அல்லது வெளிநாட்டு மாப்பிள்ளையளை — கறுத்த — முரட்டுத்தனமான போட்டோக்களைக் காட்டுகிறார். இதுதான் எனக்கவரிலை கோபம்

கடைசியா இப்ப சொல்லிப் போட்டன். 'எனக்கு கலியாணம் வேண்டாம் எண்டும் இளையவளுக்குப் பாருங்கோ எண்டும் இப்ப புறோக்கர் வீடுகளுக்கு ஏறி இறங்குறார் தங்கைச்சிக்காக. என்னாலை என்னை எப்பிடி இழக்க ஏலும். கண்ட நிண்ட படிப்புக் குறைஞ்சதுகளை எப்பிடி என்னாலை கலியாணம் கட்ட ஏலும்.

டிக்கிரியளுக்கும் வெடிங்குக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தமில்லாததுகளை சம்பந்தப்படுத்துகிறனே. ஐயோ! நான் ஆர். என்ன பேசுறன். எனக்கு கலியாணம் வேணும் எண்டு எப்பிடிச் சொல்ல ஏலும்."

ஏழாவது முகம். நான் தான் சந்தானமலர். என்ரை மனுஷனோடை இலண்டனிலை சீவிப்பம் எண்டு இலண்டனுக்குப் போனன். அவர் எங்கடை குடும்பத்துக்காக உழைக்கவெண்டு போனவர். கடைசியிலை பவுண்சிலை உழைக்கிறது போதாதெண்டு என்ரை தம்பிமாரிட்டை காசு வேண்டித்தான் பிள்ளைகளை கட்டிக்குடுத்தன். பதினைஞ்சு வரியப் பிரிவுக்குப் பிறகு நான் சேர்ந்து வாழவிரும்பினன். அங்கை போய் ஒரு மாதம் ஒண்டாய் சீவிச்சம். பிறகு ஒரே அடிதடி. அவரிட்டை பக்கத்து வீட்டு நீக்கிறோப் பொம்பிளை வந்து போறா. இது அவற்றை வழக்கமான விஷயம் எண்டு லண்டனிலை சீவிக்கிற என்ரை ஊரவை, உறவினர் சொல்லுகினம். பல பெண்களோடை சீவிக்க விரும்பினால் இலண்டனிலையும் பவுண்ஸ் காணாதுதானே!

ஒரு நாள் கேட்டுப் போட்டன். அவருக்கு கோபம் வந்து தும்புத்தடி யாலையும் கையாலையும் அடிச்சு நொருக்கிப் போட்டார். இப்ப நான் யாழ்ப்பாணத்துக்கே திரும்பி வந்துவிட்டன். எப்பிடிச் சனத்தின்ரை முகத்திலை முழிக்கிறதெண்டு தெரியேல்லை. வெளியிலை வெளிக்கிடாமல் — ஆருக்கும் என்ரை குடும்பம் — புருஷன் பற்றிச் சொல்ல ஏலாமல் அறேக்கை அழுது அழுது விசரே பிடிச்சிட்டுது. இப்ப 'ஷைகியாற்றிக் பேசன்ற்' ஆகிவிட்டன். ஆனால் வெளியிலை சாறி உடுத்து சிரிச்சுப் பேசித்திரிறன்.

என்ரை உடம்பை நான் கவனிச்சாலும் அவர் அப்ப அப்ப அடிச்ச அடியின்ரை நோக்கள் இன்னும் ஆறேல்லை. இப்ப இதுவரை இஞ்சை வந்தபிறகு அஞ்சு பல்லுப் பிடுங்கிப் போட்டன். இதைச் சொல்லியழ ஆருமில்லை. முள்ளெலும்பு விலகிப்போச்சு. அடி உதை எண்டால் அந்தளவு. உடன அவ்வளவாய் தெரியேல்லை. இப்பதான் ஒவ்வொரு வருத்தமாய் கூடிக்கொண்டு வருகுது. 'அவளுக்கென்ன, வெளிநாட்டுகாரி' எண்டு ஊரார் பெருமையாய் சொல்றதை தாங்க ஏலாமல் நான் நடைப்பிணமாய்த் திரியிறன். நானும் விதவைதான். இனிச்செத்தென்ன, சீவிச்சென்ன?"

எட்டாவது முகம் உருமாறி உருமாறி பேசுகிறது. ஷைரா இப்றாகிம் என்று பேர் சொல்கிறது. பின்னர் தயாவதி என்று சிங்களத்தில் பேசுகிறது. காமாட்சி என்று மலையகத் தமிழில் முழங்குகிறது.

கட்டுநாயக்க ஆடைத் தொழிற்சாலையில் அலங்கோலம் என்று, பின் இரைச்சலாய் தொடர்கிது.

சவுதி அரேபியாவில் பட்ட கொடுமையும் புருஷன்ரை ஆட்டம் ஊரிலையும்.... எண்டு சொல்வதும் முழிபிதுங்குதலும் பற்கள் நெருடுவதும் வசனங்கள் பிசுறுவதுமாக முகமே தெளிவில்லாமல் தொலைக்காட்சியில் மூன்று நான்கு ஷனல்ஸ் ஒன்றாக வந்து குழம்புவது போல் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

'கொழுந்து கொய்... கங்காணி... பிள்ளை பட்டினி, புருஷன் கிட்ட எப்பிடிப்பா நெருங்கி... வாழுறது? வயத்துல புள்ள குட்டிங்களோடை நானும் எனக்கு எனதான் இருக்கு... சிரிக்கக முடியுமா? உடம்பு நோவுன்னு சிணுங்கிக்கத்தான் முடியுமா?

வர்க்கத்திலை தொழிலாளியாபிட்டா காதலென்னையா, காதலும் கத்தரிக்காயும்? வயித்துப்பசி தீராதவனுங்களுக்கு வேறையென்ன வேணுமோ! உடற்பசி தான் வந்துடுமா?

"கதிரேசன் தன்ரை ஒடம்பை ஒடிச்சு ஒழைச்சும் என்னத்தைக் கண்டிச்சு... அது அந்தப்புறத்திலை. நானு இந்தப் புறத்திலை. அவரு பெண்டில் செத்த தபுதாரன்! நானு புருஷனை இழந்த விதவை! நாங்களும் மனுச ஜென்மங்கதான்! என்னத்தை பேசுறது, யாருகிட்டை பேசுறது"

இப்படியே ஒன்பதாவது முகத்துக்குரிய கமலம் முழுங்கித் தள்ளுகிறாள். முன்னுக்கு நிற்கவே நடுக்கம் ஏற்படுகிறது.

பத்தாவது முகமான நடுவில் உள்ள தலைக்குரியவளிடம் நெருங்குகிறேன். அந்த முகத்தில் தனியே ஒரு முகம் தெரியவில்லை. மிகத் தெளிவாக ஒவ்வொரு கணமும் ரீவி சனல் விளம்பரத்தில் காட்டுவது போல ஒவ்வொரு நாட்டவரின் பல்வேறு நிறத்தவரின் முகங்களாக மாறிமாறி முழங்கி மின்னலென மறைந்து மறைந்து தோன்றுகின்றன. உற்று உற்று கண்களைக் கசக்கியபடி பார்க்கிறேன்.

சீனப் பெண், ரஷ்யப் பெண், ஆபிரிக்கப் பெண், இந்தியப் பெண், யப்பானியப் பெண், இந்தோனேஷிய — மலேசியா என மூன்றாமுலக நாடுகளின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பெண்களின் முகங்களாக மாறிமாறி வந்து மறைகின்றன. அனைத்து முகங்களையும் தன்னுடன் ஒட்டி வைத்திருக்கின்ற நடுவில் தெரியும் தலையே இப்போது பல்லின முகத்துப் பெண்களின் சோகத்தை வானம் முழுதும் மாறிமாறிப் பரப்பிக் காட்டுகின்றது.

கணப்பொழுதில் திக்கெல்லாம் அத்தலைக்குரிய பெண்ணின் பல்லினத் தோற்றங் காட்டிய அத்தனை தலைகளும் பறந்து சிதறுகின்றன. அவ்வவ் மொழிகளில் தம் ஆற்றாமையை அவை ஆக்ரோசமாக வெளிப்படுத்துகின்றன.

தங்கள் முகங்களால் மேகம் முழுதும் சோகங்களை எழுதுகின்றன. தமிழில் எழுதிய சோகங்களை நான் பார்க்கிறேன்.

எந்தப் பெண்ணிடமும் கணவனின் பெயரைக் கேளாதேலு.

எந்தப் பிள்ளையிடமும் தந்தை யாரெனக் கேளாதே'

தாய்வழிச் சமூகத்தின் உண்மையினையே மீண்டும் உலகறியச் செய்வோம்.

எழுதிய சோகங்களைச் சுமந்தபடி உலகெங்கும் பெண்களின் ஊர்வலங்கள் பூமிப்பந்தெங்கனும் வேகங் கொண்டு விரைகின்றன. ஆண்களும் அவரோடு கூடியே ஆடிப்பாடி ஆர்ப்பரித்துச் செல்லுவதைக் காணமுடிகிறது.

ரெலிபோன்மணி மீண்டும் தொடர்ந்தும் அழுகிறது. அவள்தாய் அவள் சாகத்தான் வேணும்

அவள் உயிர் வாழ்ந்தபடி எப்பிடி உத்தரிக்கிறது. தன்ரை பிள்ளையளையும் தன்னையும் புரிஷன் செத்த கவலையிலை புருஷனிட்டைப் போக வெண்டு முடிவெடுத்து மருந்து போட்டுத் தானும் பிள்ளைகளும் ஒண்டாச் சாக முயற்சித்தவள். பாவம், பிள்ளையள் சாக, அவள் தப்பிவிட்டாள். மறியல்லை இருந்து மீண்டாலும் பிள்ளையளைச் சாக்கொண்டவள். முப்பது வயதெண்டாலும் எப்பிடித்தான் உயிர் வாழுறது. அவள் இருந்து உத்தரிக்கிறதை விடச் சாகிறதுதான் நல்லது. அவள் ஒரு புனிதவதி. கற்புக்கரசி. புருஷனோடை உடன்கட்டை ஏறுறதுதான் நல்லது. சமுதாயம் தீர்ப்பு வழங்கிவிட்டது.

எனது நண்பன் சந்தை வாசலில் தனது கைகளை நீட்டி எனது கைகளைப்பற்றிக் குலுக்குகிறான்.

அவள் உங்கடை குடும்பத்துக்கே பெருமை தேடித்தந்து விட்டாள். இப்பிடிப்பட்ட பொம்பிளையளை இந்த உலகத்திலை இந்த நாளிலை கண்டதே பெரிய அதிசயந்தான்! அவளுக்கு ஊரிலை சிலை வைக்க வேணும்" என்று பிரமிக்கின்றான்.

பூமி உருண்டை, தன்பாட்டில் சுழன்று கொண்டிருக்கிறது.

**-இனியவள்-**

---

# போரில்லா வாழ்வொன்றுக்காக...



புல்வெளிகளில்
காய்ந்துபோன
பனித்துளிகளின் மிச்சங்களாய்
கால்களில் மிதிப்படும் ஈரத்துளிகள்...

கொய்யாமரக் கிளைகளில்
சொண்டமுத்தி
சிறகடித்துப் பறக்கிறது
ஒற்றைக் காகம்.

தபால்காரனின் வரவுக்காக
வீட்டில் தனித்து
காத்திருக்கும் ஒரு தாய்
ஒற்றையாய் தனிமையில்.

புலம்பெயர்ந்த தேசமொன்றில்
தனித்து வாழும் மகனின்
இயக்கால வாழ்வுமட்டும்
மிஞ்சிக் கிடக்கும் அந்த வீட்டில்.

போரில்லா வாழ்வெனினும்
ஓடித்திரியும்
வாகனங்களுள்ளும்
பறந்துச் செல்லும்
மோட்டார் சைக்கிள்களிலும்
கைத்துப்பாக்கி மறைத்து
காலம் கடத்தும் நாள்கள்
எதற்காகவென்று
எவருக்கும் புரிவதில்லை.

அழிவதற்கு
இன்னுமென்னதானிருக்கிறது
தயவுசெய்து எவரும்
கேள்விகள் கேட்காதிருங்கள்.

வாழ்வின் பொய்மைகளில்
இன்னமும் வாழ்வோம்
கொல்லவும்
கொல்லப்படுவதற்கும்
குரூரம் கொண்டலைவோம்.

போரில்லா வாழ்வும்
புன்னகை கொண்டுத்திரியும் மனிதர்களும்
வீட்டு முற்றங்களில்
குண்டுமல்லிப் பூவின் வாசமும்
குழந்தைகளின் சத்தமும்
கேட்கும் காலமொன்றுக்காக
என்னையும் கொல்லுங்கள்.

-பி.ரவிவர்மன்.

## சங்கீத ஆசிரியை

# பத்மலோஜினி துரைராசசிங்கம்



## ஒரு நேர்காணல்

— இனியவள் —

● பாடுதல் என்பது சுகமானதொரு அனுபவம். இது சம்பந்தமாக உங்களது நோக்கு?

உண்மை பாடுதல் எமது உள்ளத்தை மென்மைப்படுத்தி இலகுவாக்குகிறது. கடினமான உணர்வுகளை இல்லாதுப்போகச்செய்கிறது.

● ஒருவர் தான் பாடும் ராகத்தின் ஸ்வரபிரத்தி யோகங்கள், ராகஅமைப்பு போன்ற நுண்ணறிவைத் தெரிந்து கொள்வது மட்டுமே, அந்த ராகத்தை சிறப்பாகப்பாட ஏதுவாக அமையுமா ?

வெறுமனே அறிவுமட்டும் பாடற்சிறப்பைத்தராது. சுய அனுபவம் வேண்டும் அதற்குப் பயிற்சி அவசியம்.

● திருகோணமலையைப் பொறுத்தவரை இசைக் கச்சேரியாளர்கள் மிகமிகக் குறைவாகக் காணப்படுகினறார்களே, இதன் காரணம் என்ன?

இது பற்றி எனக்குச் சரியாக தெரியவில்லை. ஆனால் சிறந்தப்பாடகர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு கச்சேரிக்கான சந்தர்ப்பம் அமைவதில்லை என்பது உண்மை.

● அண்மைக்காலங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிலான இசைக்கச்சேரியாளர்களாக எவர்களைக் கருதுகிறீர்கள் ?

திரு.பத்மலிங்கம் அவர்கள்,சண்முகராகவன் அவர்கள், திரு.யேசுதாஸ் சங்கரநாராயனன், நித்யஸ்ரீ, கலா ரகுநாதன் அவர்கள், இப்படி நிறையப்பேர்.

● கொழும்பு வரை உங்கள் குரல் ஒலித்திருக்கின்றது. வெளிநாட்டைப் பொருத்தவரை நாட்டிய இசைக்காக "சுவிஸ் நாட்டிற்குச் சென்றிருக்கின்றீர்கள் அங்கெல்லாம் உங்கள் இசைவளங்கள் எவ்வாறு இருந்தது?

அந்தச் சந்தர்ப்பத்தை திரு, வேல் ஆனந்தன் (நாட்டியக்கலைஞர்) அவர்கள் வழங்கியிருந்தார். எனது குருவினருளினாலும், திருவருளினாலும் நன்றாகவே அமைந்ததாகச் சொல்லலாம்.

● உங்கள் குருவைப்பற்றி ?

ஆரம்பத்தில் திருமதி, பஞ்சாச்சரம் அவர்களிடம் பயின்றேன்.

தொடர்ந்து வயலின் வித்துவான் திரு.வே சங்கரலிங்கம் அவர்களிடம் கற்றேன். தற்போதும் கற்றுக்கொண்டு வருகின்றேன். இசையின் நுற்பங்களையும் பாடலை அல்லது உருப்படியை இராகபூர்வமாக எப்படி வெளிக்கொணர்வது என்பதையும் எனக்கு உணர்த்திக் கற்றுத்தந்தவர் சங்கரலிங்கம் அவர்களே. எனக்குள் இருக்கும் இசை அவருடையதே. தெய்வம் எனக்குத்தந்த கொடை அவருடைய சிஷ்யையாக என்னை ஏற்றுக்கொண்டது. அவருக்கு எனது பணிவான வணக்கங்கள்!

● நீங்கள் நடன நிகழ்ச்சியொன்றிற்காக கொழும்புக்குப்பாடச் சென்றிருந்தபோது அவை தொடர்பாக நீங்கள் பாடிக்கொண்டிருந்தபோதே தொடங்குமுன்னரே உங்கள் குரலின் ஆட்சி சம்பந்தமான இனிய அனுபவத்தைக் கேள்வியுற்றோம். அது பற்றிக் குறிப்பிடுங்களேன்?

குரல்வளம் என்பது இறைவன் தரும் கொடை. அதனால் ஏற்படும் புகழும் அவருக்கே சமர்ப்பணம்.

● ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது திருகோண மலையின் இசைவளர்ச்சி எப்படியிருக்கின்றது?

பாடுதல் மட்டுமே இசைவளர்ச்சிக்குப் பயன்படுமென்று நான் கருதவில்லை. அதன் வளர்ச்சிக்காக பாடுபடுதல் நானும் இன்னும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

பொதுவாக எல்லா இடமும் நிலைமை இப்படித்தான். என்றாலும் திருகோணமலை கலை தவழும் மண், அங்கு கலை, வளர்ந்துக்கொண்டேயிருக்கும்.

- பத்மஸ்ரீ K.J. யேசுதாஸ் அவர்கள் சிறந்த சங்கீதமும் தருகிறார். சினிமா பாடல்களும் பாடுகிறார். இதுபற்றி ?

அவரது சினிமாப்பாடல்களும் சிறந்தவையே. தெய்வீகம் இழையோடும் குரல் அவருக்கு எனவே அவரது சினிமாப்பாடல்களிலும் அது பிரதிபலிக்கும்.

- அவரது பாடல்களை சிறப்பித்துச்சொல்லாதவர்களும் இருப்பார்கள் அல்லவா

இருக்கலாம் என்னைப் பொறுத்தவரையிலும் அவரது குரல் மெய்மறக்க வைக்கும் தன்மை கொண்டது. அது தெய்வீக சங்கீதம்.

- சினிமாப் பாடல்களுக்குள்ளும் சங்கீதம் வாழ்கின்றது இது பற்றிய உங்கள் கருத்து?

சினிமாப்பாடல்களை முற்றுமுழுதாக ஏற்றுரசிக்கும் மனோநிலை என்னிடம் இல்லை. ஆனால் சினிமா அற்புதமான ராகங்களை நமக்குள் காட்டியிருக்கிறது. நல்ல சங்கீதத்தை தந்திருக்கின்றது என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

- அண்மையில் வெளிவந்தப்பாடல்களில் உங்களுக்குப்பிடித்தமான பாடல்?

கண்ணாமூச்சி ஏனடா? சின்ன சின்ன கனவுகளே, ஆலம், என்று தொடங்கும் பாடல் இப்படிச்சில.

- இசை, இறைவனை அடைவதற்கான சுலபமான வழி என்பதாக காஞ்சிப் பெரியவர் மலர்ந்தருளியுள்ளார். அந்த வழி தொடர்ந்தும் நிலைத்து நிற்க சினிமா இடம் கொடுக்குமா?

இறைவன் தன்னுடைய பக்தர்களின் பாதையை என்றுமே மூடிவிட மாட்டார். எந்த இசையும் ராகங்களை .இசை அடிப்படையை மறந்துவிட்டு நிலைத்து வாழ முடியாது எனவே சினிமா நிலைத்து நிற்கவே முடியாதாயின் அதற்கு ஆதாரமான கர்நாடக இசையையோ, வேறெந்த இசை மூலத்தையோ அது வாழவைத்தாக வேண்டும்.

- நடனத்திற்குப் பாடவதற்குகும் தனிக்கச்சேரி செய்வதற்கும் இடையே ஏதாவது வேறுபாடுண்டா?

ஆம், தனிக்கச்சேரிக்கு மனோதர்மத்திற்கான இடம் அதிகம், நடனத்திற்குப் பாடும்போது ஆடலைஅனுசரித்துப் பாடவேண்டும். ஆடலோடுபாடல் ஒருங்கிணைய வேண்டும். அது அனுபவத்தில் தானாக வரும்.

- பாடும் இராகம் மாறாமல் பாடுவதனாலும் குரல்வளம் இருப்பதனாலும் மட்டுமே ஒருவரை சிறந்தபாடகராகக் கருதலாமா?

பாடலில் உயிர் இருக்க வேண்டும் சொற்களின் பொருளை உள்ளத்தில் உணர்ந்த நிலையில் பாடலின் பொருள் பாடலில் வரவேண்டும். அதுவே சிறப்பு.

- உங்கள் இசைக்கும் உங்களது துணைவருக்குமான உறவு எப்படி?

அவரது பூரண ஒத்துழைப்பினாலேயே என்னால் இத்துறையில் தொடர முடிகிறது.

- இளையவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

குருபக்தியைப் பேணுங்கள், பணிவுடன் பயிலுங்கள்.

- நீங்கள் குருபக்திபற்றி குறிப்பிடுவதால் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. சிலர் இங்கு ஒரு குருவிடம் கற்றுவிட்டு, பின்பு, இந்தியா சென்று கலையை தொடர்ந்துக்கற்றுவிட்டு, மீண்டும் இங்குவந்த பின்பு தங்கள் குருவுக்கு ஒன்றும் தெரியாது என்பதுபோல பேசுகிறார்கள் குறிப்பாக நடனம் பயிலச் செல்பவர்கள் பின்பு வந்து தனது குருவை விடுத்து வேறு யார்யாரையோ நட்டுவாங்கத்திற்காகத் தேடுகிறார்களே நாம் காணும் இந்நிலை ஆரோக்கியமானதா?

இது வேதனைக்குறியது. இப்படிப்பட்டவர்கள் ஒன்றை உணர வேண்டும். உங்களுக்கும் நாளை சீடர்கள் வரத்தான் செய்வார்கள். அது மட்டுமன்றி கலைகள் ஒவ்வொன்றும் எல்லையில்லாத பெருங்கடல். அதை முற்றும் பருகியவர் யாருமில்லை மனதில் பணிவு வேண்டும். இல்லையெனில் இப்படியான அருவருப்பான நடத்தைகள் தோன்றவே செய்யும். தெய்வத்தின் சொத்தை கொடுக்கின்றோம் எடுக்கின்றோம். என்ற எண்ணத்தில் கலை வாழ்வை ஆரம்பிக்க வேண்டும். அதுவே மனதைச் சிறப்பாக்கும்.



● நீங்கள் ஒரு நல்ல பாடகர் என்பதாய் நாம் உணர்கின்றோம். இதுவே உங்களுக்கு உங்களைச் சுற்றிஉள்ளவர்களிடமிருந்து. எதிர்ப்பை, பொறுமையுணர்வைத் தோற்றுவித்திருக்கிறதா?

மனித மனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தீவு அவற்றை முற்றுமுழுதாக யாரால் அறிய முடியும். நான் என்னைச்சுற்றி நல்லவர்களையே காணுகின்றேன் என்னை வழிநடத்துபவர்கள், எனது பிழையைத்திருத்துபவர்கள், எனது வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்குபவர்கள், உயர்வுக்காக பாதையைக் காட்டுபவர்கள், இப்படி நிறைய மனங்கள் என்னை சுற்றியுள்ளன. இது தெய்வம் எனக்குத்தந்த வரமாகும்.

● உங்களது எதிர்கால சாதிப்புகள் பற்றி ?

நிறையக்கற்க வேண்டியிருக்கிறது. தெய்வத்தின் ஆசியுடன் இன்னும் சிறப்பாக பாடவேண்டும். ஆண்டவன் அதற்கான அருளைத்தர வேண்டும். எனக்குத்தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும் . அதற்கு பெரியோர்களின் ஆசிர்வேண்டும்.

# போரும் வாழ்வும்


ஒற்றுமையால் வருவதுதான்
பலமெனக் கண்டோம் — நாம்
கற்றுணர்ந்த அனுபவமே
மனதினில் கொள்வோம்
தனித்தனியாய் இருப்பதனால்
தளைகள் நீங்குமா — நாம்
இனியேனும் ஒற்றுமையாய்
மாற்றம் காணுவோம்.

உழைப்பவர்கள் ஆளுகின்ற
காலமும் வரட்டும் — இங்கு
உழவர்கள் துயரங்கள்
போயொழியட்டும்
கலங்குவதால் பசிபிணிகள்
நீங்கிப்போகுமா — எழு
காலம் விதி என்பதால்
வாழ்வு மலருமா?

குட்டக் குட்டக் குனிந்துவிட்டோம்
மடையர்களாக — இனி
குட்டுவோரைக் குட்டிடுவோம்
படையணியாக
கட்டையிலும் வெந்திடினும்
சுதந்திர உணர்வே — நாம்
கெட்டியாகச்சேர்த்திடுவோம்
வாழ்வு நமக்கே.

**செண்பகன்.**

# தேசிய பிரச்சனையும் குறியீடும்



ராஜேஸ்வரன்

சென்ற தொடரில் அடையாளத்தையும் அதன் சமூகப் பெறுமானத்தையும் பார்த்தோம். அத்தோடு குறியீட்டின் அடிப்படையையும் பார்த்தோம். குறியீடு அல்லது அடையாளவியல், பார்க்கப்படாத மற்றும் பார்க்கவியலாத ஒன்றின் பார்வைக்குரிய கருத்தளவியலான உருவக, உவமையே என்று பார்த்தோம்.

இங்கு தேசிய இனப்பிரச்சனையில் குறியீட்டை எவ்வாறு பயன்படுத்துவது, எவ்வாறு விளங்கிக்கொள்வது, வரலாற்று நிகழ்வுப்போக்கில் அது எவ்வாறு ஆராயப்பட்டுள்ளது என்பதையும் பார்ப்போம். உலக இலக்கியத்தில் தொன்மங்கள் என்றவகையில் விவிலியத்தையும் உள்ளடக்கலாம். தொன்மங்கள், இலக்கியங்கள், குறியீடுகளின் சுரங்கம் என்பதால் குறியீடுபற்றிய தேடலுக்கு விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளேன்.

இங்கு கிறிஸ்துவை மதம் சார்ந்த தளத்தில், கடவுள் அவதாரமாக, கடவுள் மகனாகப் பார்க்காமல், ஒரு வரலாற்று மனிதன் என்று பார்ப்பதே அறிவியலுக்குப் பொருத்தமானதாகும். அப்போதுதான் சமுதாயம் பற்றிய, அவரது நோக்கை, கருத்தியலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அத்துடன், சமுதாயத்தில் அவரது பாத்திரமும் பணியும் எத்தன்மையது என்பதையும் பார்க்கமுடியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், கிறிஸ்துவின் காலத்தில் நிலமானிய சமூக அமைப்பு முறை நிலவியது. விவசாயத்துடன் கூடவே, மந்தைமேய்த்தலும் நடைபெற்றது. கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனத்தில் அரசியல் நெருக்கடி மிகவும் மேலோங்கியிருந்தது. உரோமை ஆக்கிரமிப்பாளர்கள் இஸ்ரயேலை அடிமைப்படுத்தித் தமது சாம்ராச்சியத்தை நிறுவியிருந்தனர். மக்கள் தேசியஒடுக்குமுறைக்கும், வர்க்கஒடுக்கு முறைக்கும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். உரோமை ஆக்கிரமிப்பாளரும், யூதஇன அதிகாரவர்க்கமும் மக்களைக் கசக்கிப் பிழிந்தனர். அன்று மதமும் அரசியலும் ஒன்றாக இருந்ததினால், சமூகம் சார்ந்த தளத்திலும், மதம்சார்ந்த தளத்திலும் மக்கள் நசுக்கப்பட்டனர். அவர்களை விடுதலை செய்ய ஒரு நல்ல தலைமைத்துவம் இருக்கவில்லை.

இத்தகைய சமூக, அரசியல் பொருளாதார பண்பாட்டுச் சூழலில்தான் கிறிஸ்து, தமது பணியைத் தொடங்கினார். ஒருபுறம் உரோமானிய ஆக்கிரமிப்பாளர்களையும் மறுபுறம் யூத அதிகாரவர்க்கத்தினரையும் கருத்தில் கொண்டு கிறிஸ்து தமது பணியை ஆரம்பித்தார். தந்திரோபாயத்தைக் கருத்தில் கொண்டோ என்னவோ, கிறிஸ்து உரோமானிய ஆக்கிரமிப்பாளர்களை நேரடியாக எதிர்க்கவில்லை. ஆனால் யூத அதிகாரவர்க்கத்தினரை மிகவும் கடுமையான தொனியில் கண்டனம் செய்தார். சாதாரண மக்களை அடிமை நுகத்தடியிலிருந்தும், சுரண்டல் கொடுமையிலிருந்தும் மீட்டெடுக்கும் மக்கள் இயக்கத்தை நோக்கியதாக அவர்பணி இருந்தது. இந்தச்சூழலில் அரசியல் தலைமைத்துவம் பற்றிய தமது கருத்தை மக்களுக்கு முன்வைத்தார். தேசிய விடுதலை என்பதை, வெறுமனே உரோமானிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரானதாகமட்டும் அவர் பார்க்கவில்லை. பதிலாக அத்தேசிய இனத்திற்குள் இருக்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், குழுமங்களின் ஒட்டுமொத்த விடுதலையாகவே பார்த்தார். அவர் யூத உயர்வர்க்கத்தினரின் நலன்களிலிருந்து தேசியப் பிரச்சனையை அணுகவில்லை. சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களை அவர்களின் துன்பங்களிலிருந்து விடுதலையாக்கும் அரசியலையும், அத்தகைய ஒரு அரசியல் தலைமைத்துவத்தையும் நோக்கியதாகவே அவர் பார்வை இருந்தது. இந்த இலட்சியம் குறித்த போராட்டத்தில் அவர் தோற்றுப்போயிருக்கலாம். ஆனால் அந்த இலட்சியத்தை எதிர்கால சந்ததிக்கு, மனித சமூகத்திற்கு விட்டுச்சென்றார். தமது பணிகுறித்தும் தமது சமூகபாத்திரம் குறித்தும், அவர் மக்களுக்கு முன்வைத்த போதனையில், அவர் அதைத் தெளிவாக்கினார். குறியீட்டின் மூலம் அதை அவர் மக்களுக்கு முன்மொழிந்தார்.

குறியீடு, ஆழ்ந்த கருத்தியல் தளத்தை நோக்கிப் பல்பரிமாணங்களில் விரிந்து செல்வதில்லை. இதன் அர்த்தம் குறியீட்டிற்கு ஓர் ஆழ்ந்த கருத்தியல் புலப்பாடு இல்லை என்பதல்ல. அதற்கு ஓர் ஆழ்ந்த கருத்தியல் புலப்பாடு உண்டு. ஆனால் அது பல்பரிமாணங்களில் விரிந்து செல்வதால் ஏற்படக்கூடிய கருத்துக் குழப்பங்கள் தவிர்க்கப்படவேண்டும். ஏனெனில் இரட்டைத்தன்மை அதாவது இருண்மை (Ambiquity) என்ற கருத்தமைப்புத் தோன்ற குறியீடு பாவிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய கருத்துக் குழப்பங்களைத் தவிர்ப்பதற்குக் குறியீட்டை ஒரு வழிபோக்காகப் பயன்படுத்துவது அவசியமானது. "லெனின் குறியீட்டை ஒரு வழிபோக்காகப் பயன்படுத்துவதையும், அதையே பூதாகரமாகக் காட்டுவதையும் எதிர்த்தார்" என்று காவனமாமலை தனது 'மார்க்சிய அழகியல்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறியீட்டின் மதிப்பானது ஒரு பொருளைத் தெளிவுப் படுத்தலில் தங்கியுள்ளதால், குறியீட்டை ஒரு வழிபோக்காகப் பயன்படுத்துவதில் தவறில்லை என்பது என் தாழ்மையான கருத்தாகும். குறியீட்டின் இரட்டைத் தன்மை அதாவது இருண்மை பற்றிப் பிறிதோரிடத்தில் குறிப்பிடப்படவுள்ளதால், அரசியல் தலைமைத்துவம் பற்றி, அதுவும் தேசியத் தலைமைத்துவம் பற்றிக் கிறிஸ்து எடுத்தாண்ட குறியீட்டை இங்கு ஆராய்வோம்.

"நல்ல ஆயன் நானே
நல்ல ஆயர் ஆடுகளுக்காகத்
தம் உயிரைக் கொடுப்பார்"

(யோவான் 10:11)

யோவான் என்ற நற்செய்தி நூலில், கிறிஸ்து எடுத்தாண்டிருக்கும் இந்தக் குறியீடு, பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன நூல்களிலிருந்து பெறப்பட்டதாகும் ஆயன் என்ற இந்தக்குறியீடு அரசனையும், அரசியல் தலைமைத்துவத்தையும் குறிக்கிறது. நல்ல ஆயன் என்பது நல்ல அரசனையும், அரசையும், அரசியல் தலைமைத்துவத்தையும் குறிக்கும். அது மட்டுமல்ல ஒரு நல்ல அரசனுக்கு மக்கள்மேலுள்ள கடமைகளையும் சுட்டிநிற்கிறது.

இது பற்றி விளக்கமாகப் பார்க்கமுன் "ஆடுகள்" என்ற குறியீடு, மக்களை சுட்டி நிற்கிறது என்பதோடு, அது வெள்ளாட்டைச் சுட்டி நிற்காமல் செம்மறியாடுகளைச் சுட்டி நிற்கிறது என்பதை முதலில் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும். செம்மறி என்பது பராமிக்கப்பட வேண்டிய, பாதுகாக்கப்பட வேண்டிய ஏழை-எளிய மக்களை, அன்றாட வாழ்வுக்காக மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் மக்களைக் குறித்துநிற்கிறது.

1. செம்மறி பிறரைச்சார்ந்து வாழ்வது, உதவியற்றது.
2. அதற்குத் தொடர்ந்த பராமிப்பு, வழிகாட்டல் பாதுகாப்பு வேண்டும்.
3. குரல் மூலம் அது வழிநடத்தப்படுகிறது.
4. வழிகாட்டல் இல்லாவிட்டால் அலைந்துதிரிந்து

காட்டு விலங்குகளுக்கு இரையாகிவிடும்.

5. அது கூட்டமாக வாழ்வது, ஒன்றின் பின் ஒன்று செல்வது.

கூட்டமாக, கூட்டுறவாக வாழும் செம்மறிகளுக்கு ஒரு நல்ல ஆயன் அவசியப்படுவது போல், மக்களுக்கும் ஒரு நல்ல அரசியல் தலைமை வேண்டும். அவர்களை வலிமை மிக்க ஒரு சக்தியாகத்திரட்டி, அறிவுபுகட்டி, அறியாமை இருளகற்றி எழுச்சிகொள்ளச் செய்யவும், அவர்களுக்கு ஒரு புதிய வளமான வாழ்வை உத்தரவாதம் செய்வதற்குமான ஒரு தலைமைவேண்டும். அத்தகைய தலைமை தானே என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார். இது பற்றி விரிவாக ஆராய்வோம். இது குறித்து விவிலியத்தில், எசேக்கியல் என்ற நூலில், ஓர் அரசனுக்கு மக்கள் மேலுள்ள கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

"எனவே, தலைவராகிய ஆண்டவர் கூறுகிறார். நானே என்மந்தைகளைத் தேடிச் சென்றுகாப்பேன். ஓர் ஆயன் தனது மந்தையினின்று சிதறுண்டுபோனதைத் தேடிச் செல்வதுபோல, நான் எனது மந்தைகளை (மக்களை)த் தேடிச் செல்வேன். மப்பும் மந்தாரமுமான நாளில், எல்லா நாடுகளின்று மீட்டுவருவேன். மக்களினங்களினின்று அவற்றை வெளிக்கொணர்ந்து, நாடுகளின்று கூட்டிச் சேர்ந்து அவற்றின் சொந்த நாட்டிற்கு அழைத்து வருவேன். அவற்றை இஸ்ரயேலின் மலைகளிலும், ஓடை ஓரங்களிலும், நாட்டின் எல்லாக் குடியிருப்புக்களிலும் மேய்ப்பேன். இஸ்ரயேலின் மலை உச்சியில் அவற்றின் மேய்ச்சல் நிலம் இருக்கும். அங்கே வளமான மேய்ச்சல் நிலத்தில் அவை இளைப்பாறும். இஸ்ரயேலின் மலைகளின் மேல் செழிப்பான மேய்ச்சல் நிலத்தில் அவைமேயும் நானே என் மந்தையை மேய்த்து இளைப்பாற்றுவேன். காணாமல் போனவற்றைத் தேடுவேன். அலைந்துதிரிவதைத் திருப்பிக் கொண்டுவருவேன். நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன். ஆனால் கொழுத்ததையும், வலிமையுற்றதையும் அழிப்பேன். இவ்வாறு நீதியுடன் அவற்றை மேய்ப்பேன்."

(எசேக் 24: 11 – 16)

இந்த வாசகங்கள், இஸ்ரயேல் மக்கள் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலங்களில், பல்வேறு நாடுகளிலும் அடிமைகளாக நாடு கடத்தப்பட்டுச் சொல்லொனாத் துன்பங்களுக்கு உட்பட்டிருந்த வரலாற்றுக்காலகட்டத்தில் சொல்லப்பட்டது. அரசன் தெய்வத்திற்கு இணையானவன். அரசு தெய்வீகத் தன்மையுடையது என்ற தெய்வீகக் கோட்பாட்டின் அடிப்படையில் இது சொல்லப்பட்டது. எனவேதான் எசேக்கியல் என்ற தீர்க்க முனிவர் ஓர் அரசனுக் குரிய கடமைகளை இறைவன் மேல் செலுத்திக் கூறுகிறார். அரசனுக்குரிய இந்தக் கடமைகள், எசேக்கியேலின் ஆழ்ந்த தீவிர சிந்தனையின் புலப்பாடு என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். உயர்ந்த உன்னதமான சிந்தனைகள் கடவுளுடைய கூற்றுக்கு நிகரானவை என்பதை இந்தவாசகங்கள் வலியுறுத்துகின்றன.

இந்த ஆயன் அல்லது மேய்ப்பன் என்ற குறியீட்டில் ஓர் அரசனுக்கு, தன் குடிமக்கள் மேல் இருக்கவேண்டிய கிசனை, பற்றுறுதி விளக்கப்பட்டிருக்கிறது. இங்கு "மப்பும் மந்தாரமுமானநாளில்" என்ற சொற்றொடர்க்குறியீடு, இஸ்ரயேல் மக்கள் அன்னிய நாடுகளில் சிதறிக்கிடந்த காலகட்டத்தைக் குறிக்கிறது. மேலும் "ஓடைஓரங்கள், வளமான மேய்ச்சல் நிலம்-செழிப்பான மேய்ச்சல் நிலம்" என்பன மக்கள் நலமுடன் வாழ்வதற்கான, வளமான வாழ்வாதாரங்களைக் குறிக்கின்றன. ஓர் அரசன், தனது தனிப்பட்ட சுகபோகத்திற்காக, அல்லது தனது வர்க்கத் தினின் குழு நலன்களுக்காக அடுத்தவின் உழைப்பை, வியர்வையை, இரத்தத்தை, தியாகத்தைப் பலியாக்கும் அற்பத்தனமான, அயோக்கியத்தனமான போக்கிற்கு எதிரான ஒரு வன்மையான கண்டனமுமாக இது இருக்கிறது. உண்மையான அரசனுக்கு இருக்கவேண்டிய தகைமை

பற்றி எசாயா 11: 1-5 இல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கட்டுரையின் விரிவைத்தவிர்ப்பதற்கு அது பற்றிக் குறிப்பிடாது விட்டுவிடுகிறேன்.

இதுவரை, ஓர் அரசன் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களின் அடிமைத்தனத்திலிருந்து, தனது மக்களை மீட்டுவருவதாகக் கூறிய எசேக்கியேல், திடீரென்று தனது தேசிய இனத்திற்குள் நிலவும் உள்முரண்பாடுகளுக்குள் புகுந்து விடுகிறார். ஒருதேசியத்தலைமை என்பது அந்தத் தேசியத்தின் உயர்வர்க்கத்தினருக்குச் சாதகமாக இருக்கக் கூடாது. அந்த இனத்திற்குள் நிலவும் வர்க்கரீதியான, ஏற்றத்தாழ்வான முரண்பாடுகளையும், பண்பாட்டு ரீதியான

பாரபட்சங்களையும் நீக்கி, அனைவரும் சுதந்திரமாக, சமத்துவமாக, சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கான அதிகாரத்தை, அந்தத் தலைமை கொண்டிருக்க வேண்டும். எந்தவகையிலும் மனிதரை மனிதர் சுரண்டிப்பிழைக்கும், வருத்தி வாழும் சமூகச் சூழலை, அந்தச் தேசியத்தின் நல்ல அரசன், நல்ல அரசு, நல்லதலைமைத்துவம் அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார் எசேக்கியேல் "கொழுத்ததையும் வலியதையும் அழிப்பேன்" என்று உறுதிபட வலியுறுத்தி, நீதி என்பது மனிதரை மனிதர் வருத்திவாழாத, சுரண்டிப்பிழைக்காத வாழ்க்கை முறை என்று உத்தரவாதம் செய்கிறார்.

இந்த வர்க்க வேறுபாட்டின் தன்மையை அவர் மிகவும் தெளிவான முறையில் விளக்குகிறார்.

"என்மந்தையையேநான்ஆட்டுக்கும்

ஆட்டுக்கும் இடையேயும், ஆட்டுக்கிடாய்களுக்கும், வெள்ளாட்டுக்கிடாய்களுக்கும் இடையேயும் நீதி

வழங்குவேன். நானே கொழுத்த ஆட்டுக்கும், நலிந்த ஆட்டுக்குமிடையே நீதிவழங்குவேன். ஆடுகளை விலாவினாலும் முன்னந்தொடையினாலும்

இடித்துத்தள்ளி, உங்கள் கொம்புகளால் முட்டி, அவற்றை வெளியே விரட்டியடிக்கிறீர்கள். எனவே,

நான் என் மந்தையை மீட்பேன். அவை இனிமேல் கொள்ளையிடப்படா"

(எசேக் 34: 17, 20—22)

நலிந்த செம்மறி ஆடுகளை, சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களுக்கும், கொழுத்த வெள்ளாடுகளை ஒடுக்குவோர்களுக்கும் குறியீடாகக்காட்டுகின்றார் எசேக்கியேல். இதன் மூலம் தனது இனத்தவர் மத்தியிலுள்ள வலியவர், நலிந்தவர் வேறுபாட்டை மிக இலகுவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதன் மூலம், ஓர் ஆயன், அரசன் தனது சமூகத்தில் ஒடுக்குமுறையும், சுரண்டலும், கொடுமைகளும் இடம் பெறாத வண்ணம், ஏற்றத்தாழ்வற்ற வாழ்க்கைமுறையை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

வளமான வாழ்வின் தன்மையைப்பற்றி அவர் தீட்டியிருக்கும் ஓவியத்தைப் பார்ப்போம்.

"காட்டு விலங்குகளை நாட்டினின்று வெளியேற்றுவேன். எனவே, என் மந்தை திறந்தவெளியில் பாதுகாப்பாய் வாழ்ந்து, காடுகளில் உறங்கும். அவர்களுக்குக் குன்றினைச்சுற்றிய இடங்களை ஆசியாகக்கொடுப்பேன். ஏற்றகாலத்தில் மழைபெய்யச் செய்வேன். அவர்கள் ஆசிமழையாய் இருப்பர். வயல் வெளி மரங்கள் கனிகள் கொடுக்கும். நிலமோ விளைச்சலை நல்கும். அவர்கள் தங்கள் நாட்டில் பாதுகாப்பாய் இருப்பர். நான் அவர்களின் தளைகளைத் தகர்த்து, அடிமைப்படுத்தியவர் கையினின்று அவர்களை விடுவிக்கையில் நாம் ஆண்டவர் (அரசன்) என்பதை அறிந்து கொள்வர். இனிமேல் அவர்கள் மக்களுக்கு (வேற்றினத்தார் மற்றும் உயர்வர்க்கத்தினர்) கொள்ளைப் பொருளாய் இரார். நாட்டின் கொடிய விலங்குகளும் அவர்களை விழுங்கமாட்டா, (மக்களை கொடுமைப்படுத்தும் அதிகாரவர்க் கங்களும் அவர்களை விழுங்கமாட்டா.) அவர்கள் எத்தகைய அச்சுறுத்தலுமின்றிப் பாதுகாப்பாய் வாழ்வர். **சிறப்பு மிகு பண்ணை ஒன்று அவர்களுக்கு எழும்பச் செய்வேன். அவர்கள் இனி நாட்டில் பஞ்சத்தால் வாட மாட்டார்கள்"**

(எசேக் 34: 25—29)

சிறப்பு மிகு பண்ணை என்பது கூட்டுறவு வாழ்க்கை முறையாகும். அரசனின் அதிகாரம் என்பது, மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்துவதல்ல, பதிலாக மக்களுக்கான கூட்டுவாழ்க்கையை, ஒருவன் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவனுக்காகவும் வாழும் பண்பாட்டைக் கட்டிகாக்கும் அதிகாரம் என்பதையும் இது குறிக்கிறது.

ஆயன் என்ற குறியீட்டானது, ஓர் அரசன் தனது குடிமக்கள் அச்சமின்றி இன்புற்றுவாழும் சமூக சூழலை உருவாக்கக் கடமைப் பட்டவன் என்று ஆணித்தரமாகச் சொல்கிறது. பசியும் பிணியும், பகையும் போரும், அச்சமும் அவலமும், பஞ்சமும், பட்டினிச் சாவுமற்ற வாழ்வை மக்களுக்கு உத்தரவாதம்செய்பவனே நல்ல அரசனின் கடமை.

இத்தகைய ஆட்சியில் மக்கள் எப்படி இருப்பார்கள் என்பதை சொப்பனியா என்ற தீர்க்க முனிவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

" அச்சுறுத்துவார் யாருமின்றி

அவர்கள் மந்தைகள் போல் மேய்ந்து

இளைப்பாறுவார்கள்."

( சொப் 3:13)

" சீதமதிக் குடைகீழ்ச் செம்மை யறங்கிடப்ப

தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான் — மாதர்

அரு கூட்டும் பைங்கிளியும் மாடல் பருந்தும்

ஒரு கூட்டில் வாழும் உலகு."

(நளவெண்பா)

இந்தப்பாடல் வலியவரையும் நலிந்தவரையும் சுட்டிக் காட்டுகிறது. அதாவது சமுதாயத்தில் மனிதர்களுக்குள் இருக்கிற இயல்பான, இயற்கையான குணவேறு பாடுகளைச் சுட்டிக் காட்டுகிறது. பேராசை இயல் புள்ளவர்கள் அநீதியான வழிகளில் தமது வாழ்நிலையைக் கட்டிஎழுப்புகிறார்கள். கபடில்லாதவர்களும், தீங்கற்றவர்களும் தமது இயல்புக்கேற்ப வாழ்க்கையை நடத்துகிறார்கள். தீயவர்களால், வலிமையானவர்களால் மற்றவர்களுக்கு எப்பொழுதும் ஆபத்துத்தான். ஆனால்,

னானின் நல்லாட்சியில், வல்லாட்சியில் மனிதரை மனிதர் வருத்திவாழும் சமூக அநீதிக்கு இடமளிக்கப்படவில்லை. ஆதலால், அவன் நாட்டில் தீயவர்களும் — வலியவர்களும் நல்லவர்களும் அப்பாவிகளும் ஒன்றாக வாழ்ந்தார்கள். மக்கள் மத்தியில் நிலவும் பகை முரண்பாடுகளின் கொடுக்குகள் முறிக்கப்படுவதால், அங்கு அமைதி சமாதானம் நிலவுகிறது.

"அந்நாளில் ( நல்லாட்சியின் காலத்தில்) ஓநாய் செம்மறி ஆட்டுக்குட்டியோடு தங்கியிருக்கும்.கன்றும் சிங்கக்குட்டியும் கொழுத்தகாளையும் கூடிவாழும். பச்சிளம் குழந்தை அவற்றை வழி நடத்திச் செல்லும். பசுவும் கரடியும்ஒன்றாய் மேயும். அவற்றின் குட்டிகள் சேர்ந்துபடுத்துக்கிடக்கும் சிங்கமும் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால்குடிக்கும். குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும். பால்குடி மறந்தபிள்ளை, கட்டுவிரியன் வளையில் தன் கையைவிடும். என் திருமலை (இஸ்ரயேல்) முழுவதிலும் தீங்கு செய்பவர் எவரும் இல்லை. கேடு விளைவிப்போர்யாரும் இல்லை."

(எசா 11: 6—9)

எசாயாமுனிவின் உருவக ஓவியங்கள், மனிதருடைய பல்வேறு குண இயல்புகளை, விலங்குகள் மூலம் விளக்குகின்றன. நல்லவர்கள், தீயவர்கள், சுயநலமிகள், வலியவர், நலிந்தவர், வஞ்சகர், வஞ்சகமற்றவர், பாதகம் அறியாதவர்கள் போன்றவர்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்த குண இயல்புகளை கொண்ட மனிதர்கள் ஒன்றாக வாழ்வதாகவும் காட்டப்படுகின்றது. தீய இயல்புடையவர்கள், நல்லாட்சியில் அடக்கப்படுவதால் அடக்கப்பட முடியாதவிடத்து அழிக்கப்படுவதால், தீமைசெய்ய நினைத்தாலும் அதைச் சாதிக்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுவதால், அந்த ஆட்சியில் தீமைகள் இடம் பெறுவதில்லை. அதாவது மனிதரை மனிதர் வஞ்சித்து, வருத்தி, ஒடுக்கி, சுரண்டி, கொன்று வாழும் தீமை இடம் பெறுவதில்லை, அத்தகைய நல்லாட்சியை நிலைநாட்டும் அரசன் தான் நல்ல ஆயன்.

நலன்கொழிவல்லாட்சியால், (Dictatorship of Benevolent) மட்டுமே இந்த நல்லாட்சியை நிறுவமுடியும். நீதியை, சமநிலையை நீங்கிவிட்டால், இந்த நலன்கொழி வல்லாட்சி (சர்வதிகாரம்) கொடும் கோண்மை என்றாகிவிடும். அதாவது தீய இயல்புள்ளவர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்திவிடுவதே முதன்மையானது. நெற்பயிர்களை அழிக்கும் களைகளை மட்டும் பிடுங்குதலே இதன் சாரம். அதனால்தான் நல்ல ஆயன் கூறுகிறான்:

"ஆனால் கொழுத்ததையும், வல்லமை உள்ளதையும்
அழிப்பேன். இவ்வாறு நீதியுடன் அவற்றை மேய்ப்பேன்"

(எசேக் 11:16)

இந்த வன்முறையை விவிலியம் ஆத்மீக செயற்பாட்டின் புனித கடமையாகவே கொள்கிறது. தீமை செய்ய முடியாது என்ற அச்சம் நிலவும் போதுதான் தீமைகள், அநீதிகள் நசுக்கப்படுகின்றன. அச்சத்தின் காரணமாகவே தீய இயல்புள்ளவர்கள், தீமையைத் தவிர்த்துக் கொள்ளுகிறார்கள். தவறு செய்வதற்கு அஞ்சுகின்ற சூழல், சமுதாய அமைப்பு மாற்றத்தினாலும், சட்டத்தினாலும், தண்டனையினாலும், பண்பாட்டினாலும் உருவாக்கப் படவேண்டும்.

"ஏற்கனவே மரங்களின் வேரருகே
கோடாரி வைத்தாயிற்று.
நற்கனி கொடாத மரங்களெல்லாம்
வெட்டுண்டு தீயிலே போடப்படும்"

(லூாக் 3:9)

கிறிஸ்து இப்படிக் குறிப்பிடுகிறார். வன்முறை, உடல்சார்ந்த, உள்ளம் சார்ந்த, சித்தாந்தம் சார்ந்த உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. சுயநலத்திற்காகவும், பொதுநலத்திற்காகவும் வன்முறை பயனட்படுத்தப்படுகின்றது. பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காக வன்முறை பாவிக்கப்படினும், அது நன்முறையே.

சொல்லப்போனால் சட்டமும் ஒருவகையில் வன்முறை தான். சட்டம் சரியானதா, தவறானதா என்பதல்ல பிரச்சனை; அதை மீறக்கூடாது என்பதுதான். மீறினால் தண்டனை. சட்டத்தை யாரும் வன்முறையாகக் கருதுவதில்லை. உண்மையில் சட்டத்திற்குப் பின்னாலுள்ள வன்முறையே, தண்டனையே சட்டத்தைப் பாதுகாக்கிறது.

வீதிகளின் நாற்சந்திகளில் சமிக்கை விளக்குகளின் சமிக்கைளுக்காக வாகனங்கள் காத்து நிற்கின்றன. சிவப்பு விளக்குச் சமிக்கை செய்தால், வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். மஞ்சள் விளக்குச் சமிக்கை செய்தால், வாகனங்கள் நகரத்தயாராக வேண்டும். பச்சை விளக்குச் சமிக்கை செய்தால், வாகனம் நகர வேண்டும். இதுதான் வீதி ஒழுங்குமுறை. எந்த உயிராபத்தான சூழலிலும் இந்த ஒழுங்குவிதியை மீற முடியாது. மீறுவதால் அனர்த்தங்கள், விபத்துக்கள் ஏற்படும். மீறுபவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

நல்ல ஆயன் எப்பொழுதும் நலன் கொழிவல்லாளியாகவே இருக்கவேண்டும். அவன் நீதியின் அதிகாரத்தில் ஆட்சியை நிறுவ வேண்டும். நல்லவனாக மட்டுமல்ல, எல்லாம் வல்லவனாகவும், தனது குடிமக்களுக்காகத் தன்னுடைய உயிரையும் கொடுக்கத் தயாராகவேண்டும். ஆனால் பெரும்பாலும் ஆட்சியாளர்கள் சுயநலமிகளாகவே இருக்கிறார்கள். இத்தகைய ஆட்சியார்களைக் கண்டித்து எசேக்கியேல் குரல் கொடுக்கிறார்.

" தாங்களே மேய்ந்து கொள்ளும் ஆயர்களுக்கு (அரசர்களுக்கு) ஐயோ கேடு! அவர்கள் மந்தையை (மக்களை) அன்றோ மேய்க்கவேண்டும். (பராமரிக்கவேண்டும்) நீங்கள் (அரசபரம்பரையினர்) கொழுத்ததை உண்டு, ஆட்டு மயிர் ஆடைகளை உடுத்தி, மந்தையில் சிறந்தவற்றை அடிக்கிறீர்கள். மந்தையையோ மேய்க்கவில்லை. நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை. பிணியுற்றவற்றிற்குக் குணமளிக்கவில்லை. வழிதவறியவற்றை மீண்டும் கூட்டி வரவில்லை. காணாமற்போனதைத் தேடவில்லை. ஆனால் அவற்றை (மக்களை)க் கொடுமையுடனும், வன்முறையுடனும் நடத்தினீர்கள் ஆயன் இல்லாமையால் அவைகள் அலைந்து திரிந்தன. அப்போது எல்லா நாட்டு விலங்குகளுக்கும் (அன்னிய ஆக்கிரமிப்பாளருக்கும்) அவை இரையாகின. என் ஆடுகள் எல்லா மலைகளிலும், குன்றுகளிலும் (எல்லா நாடுகளிலும்) அலைந்து திரிந்தன. பூவுலகின் எல்லா இடங்களிலும் சிதறுண்டுபோனது. அதை தேடவோ, கூட்டிச் சேர்க்கவோ எவருமில்லை. அதனால், மந்தை மேய்ப்பினின்றும் அவர்களை (ஆட்சியாளர்களை) நீக்கிவிடுவேன். ஆதலால், மந்தைகளை அவர்கள் இனிமேய்க்கமாட்டார்கள். என் மந்தையை மேய்த்துக் கொள்ளும் அவர்கள் வாயினின்று, என் மந்தைகளை மீட்பேன் (விடுதலை செய்வேன்). அவை இனி, அவர்களுக்கு உணவாகா"

(எசேக் 34: 2—10)

ஆளும் வர்க்கத்தினரால், மக்கள் எவ்வாறு கசக்கிப் பிழியப்படுகிறார்கள், ஆளும் வர்க்கத்தின் சுகபோகத்திற்காக மக்கள் எப்படியெல்லாம் துன்பப்படுத்தப்படுகிறார்கள் என்பதை மேற்கூறிய வாசகங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

இன்று, எரியும் இந்த எழில்மிகு இலங்கையின் அரசியல் சூழலையும், அரசியல் அடாவடித்தனங்களையும், தேசிய ஒடுக்கு முறையினால் மக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிதறுண்டு சிறுமைப்பட்டு வாழ்வதையும் "இந்த ஆயன்-ஆடுகள் என்ற குறியீடுகளோடு ஒப்பிட்டுப்பார்ப்பீர்களாயின் இங்குள்ள உண்மை நிலையை உங்களால் புரிந்து கொள்ளமுடியும்.

மேற்கூறிய விவிலியத்தின் பழைய தீர்க்கதரிசனங்களின் பின்னணியில் " நல்ல ஆயன் நானே" என்று கிறிஸ்து தம்மைப்பற்றி எடுத்தாண்ட குறியீடும், மந்தைகள் என்ற குறியீடும் ஒரு தேசியத்தலைமைத்துவத்தின் உண்மையான தாற்பரியங்களையும், கிறிஸ்துவின் சமூகவியல் நோக்கையும் புலப்படுத்துகின்றன.

# லயம்

மனித குமாரனின் பிறப்பு எப்போதும்
மாட்டுத்தொழுவில் நிகழவேண்டு
மென்பதில்லை
பரிசுத்த ஆவியின் வழியாக பெண்கள்
பிரசவிக்கும் காலம் இனி இல்லை
கிழக்கே நட்சத்திரம் உதிக்கக்கண்டு
புறப்படுபவர்கள் இன்று
அதிஷ்டமில்லாதவர்கள்
உண்மையைச்சொல்ல போனால்
சிலுவையேறுவதெல்லாம்
நாடகங்களில் கூட வேடிக்கையாகிவிட்டது
சிபார்சுகள் மூலம்
சொர்க்கம் போன
கள்ளனின் பரம்பரையே எதார்த்தம்.

கிடைத்த வெள்ளி நாணயங்களை வீசிவிட்டு
ஒருவன் சுடலையில் தவமிருக்கிறான்
தலை குனிந்தபடி ஒருவன் அடிக்கடி
சுகந்த நன்னீரில் முகம்கழுவுகிறான்
பசியில் காதல் மறந்து ஒருவன்
மக்தலேனாமேரியின் முலைகுடிக்கிறான்
மேதைகள் டி.வி திரைகதையுடன்
எலிகளைப் – போல அலைகிறார்கள்
பிரளயம் வந்து எவரும் சாகவில்லை
உப்புதூண்களாக மாறவில்லை.

வெறியில் நாக்கைக் கடித்துத்துப்பி என்
பகைமூர்க்கம் சொல்லுக்குயாசித்துத்
தோற்கும்போது
மரணம் நிகர்த்த நிம்மதியில்
அனைவரும் அடங்கிவிட்ட பிறகு
இருபது வரி – அதைவிட அதிகமாக நீளும்
ஒரு கவிதையையும் இன்று
கோர்க்கமுடியவில்லை.

**கே.ஆர் டோனி**

# தோம்புத்துரை



வி. கௌரிபாலன்.

வெண்நிறச்சுடலை காலை நிலத்தில் குத்தி கால்மாறிமால்மாறி மண்ணை கிளறி விட்டப்படி மூக்கணாங்கயிறு இறுக்க கழுத்தை நீட்டி முழிப்பிதுங்க அடித்தொண்டையால் கமறியது. வெண்மையும் கறுப்பும் கலந்த மாடன் முதிர்ந்த ஒரு சிந்தனையாளனைப் போல் கண்இமைகள் படபடக்க அசைபோட்டப்படி எதுவித அல்லாட்டமும் இன்றி நின்று கொண்டிருந்தது. சுடலையின் ஆர்ப்பாட்டத்தால் வண்டில் முன்னும் பின்னும் அசைந்து கொண்டிருந்தது. சக்கரங்களின் அசைவால் சிறிய கிரிச்சிடல் ஒலி எழுந்துக்கொண்டிருந்தது. சுடலை நகர முனைந்தாலும் மாடனின் பக்குவத்தன்மைக்கும் அதன் பலத்துக்கும் அஞ்சி இடுப்பை றோட் பக்கம் கொண்டு வருவதும் பின் வண்டிலுடன் அணைவதுமாக நின்றிருந்தது. தோம்புத்துறை இன்னும் பொன்னம்மாவின் தாழ்ந்த ஓலைத்தாழ்வாரத்திண்ணையில் இருந்து எழுந்திருக்கவில்லை. பொன்னம்மாவின் குடிலின் பின்புறமிருந்து வாயைச் சப்பியபடி இருவர் எழுந்து வந்தனர் பொன்னம்மாவின் தகரக்கோட்டைக்குள் இருந்து கதவைத்திறந்துக் கொண்டு, நெஞ்சு நிமிர்த்தி, தெருவுக்கு வந்தனர். இருவரது உடலிலும் வெண்மை படிந்து கிடந்தது. அவர்கள் சீமெந்து வேலை செய்துவிட்டு வந்தவர்கள் என்பது புலனாகும். தெருவில் இன்னமும் சுடலை ரகளை பண்ணி கொண்டே நின்றது. வண்டிலின் அசைவில் கிரிச்சிடல் ஒலி கேட்டப்படி இருந்தது.

"தோப்பர்ற வண்டில் போலக்கிடக்கு"

"ஓம் அடிக்கிறது ஒரு "ராம்" அதுக்கு முக்கா மணித்தியாலம்"

"பொன்னம்மாட தொஞ்சுப்போன தோல்ல இன்னமும் கிரங்கிக்கிடக்கார் போல"

"தோம்பர்ற பொட்டையை பெடியள் கொண்டே விசாரிச்சதாம் எண்டு கேள்வி"

"ஓ பெட்ட காக்கிச் சட்டக்காரனுக்குப் பின்னால திரியுதாம் "பெட்டையை போட்டுருவாங்களோடா"

"சா—கொண்டே வோன் பண்ணிப் போட்டு விட்டிட்டாங்கள்"

"ஏண்டா பொட்டக்கு தமிழ் பெடியங்களின்ற சரிவராதாமோ"

"காக்கி சட்டைக்காரன் இரவுபகல் எண்டு இல்லாம தோம்பர்ற வீட்டுல இருக்கானாம்"

"இதென்ன அறுப்பிடா"

"இதவிட ஒரு விசயம் அவனுக்கு அவன்ட இடத்தில கலியாணம் கட்டி மூண்டு பிள்ளையளும் இருக்காம்"

"அவனுகள் ஜொலி பண்ணுற டைப்பான ஆக்கள் போற போற இடத்தில இப்படி வைச்சிக்கொள்றது அவங்களுக்கு சகயம் தோம்பர்ற பெட்டையிட கதை அவ்வளவுதான்.

"அண்ண தோம்பு வருது"

"நட போவம்"

தோம்புத்துரை ஒவ்வொரு அடிக்கும் நின்று நிதானமாக அடிஎடுத்து வைத்துலந்தார். அவர் கால்கள் இடறின என்பதைவிட அவரது இயல்பான நடையே இடறல்தான். நின்று நிதானமாக வந்தார். சின்னன் மேசனும் அவன்ட கூலியும் தூரத்தில் நடந்துபோவதைப் பார்த்து நின்றார். பின் சுடலையைத் தாண்டி மாடனிடம் வந்தார். சுடலை தனது ரகளையை அதிகமாக்கியது. தோம்புத்துரை சுடலையை அதட்டி அடக்கினார். மாடனின் வாயில் போத்தலை வைத்து அதேநேரம் அதி விசேசத்தை வாயில் ஊற்றினார். போத்தலை உயர்த்தி நிறுத்தி அரை றேம் சரியாக இருக்கிறதா எனப்பார்த்த பின் திரும்பிச் சுடலையிடம் வந்தார். சுடலையின் வாயில் போத்தலை வைத்து அதி விசேசத்தின் கடைசிச் சொட்டியும் ஊற்றிய பின் போத்தலை பன் பேக்கிற்குள் வைத்து வண்டில் தட்டியில் கொழுவினார். சுடலையின் ரகளை அடங்கி இருந்தாலும் புறப்படுவதற்கு எத்தனிப்பதிலேயே இருந்தது. ஏதோ ஒரு சைகையை தோம்புதுரையிடம் இருந்து எதிர்பார்த்துக் காத்து நின்றது மாடன். தோம்புதுரையார் மடியில் இருந்து ஒரு பீடியையும் தீப்பெட்டியையும் வெளியில் எடுத்தார். ஆறுதலாக பீடியை வாயில் வைத்து தீக்குச்சியை உரசி இரண்டு கைகளையும் பீடியை மூடிக் குவித்துப் பற்றவைத்தார். பின் பீடியை ஒரு இழுப்பு இழுத்து புகையை ஆகாயத்தைப் பார்த்து ஊதினார். "நட" சிக்னல் கிடைத்ததும் மாடன் நடக்கத்

தொடங்கியது. அது எதையும் கவனியாது ரகளைபண்ணி கொண்டுநின்ற சுடலை கழுத்து மடியத் திணறி பின், நிலைமையை உணர்ந்து மாடனுக்கு இனையாக நடக்கத் தொடங்கியது. தோம்புத்துரையார் இன்னுமொரு இழுப்பை இழுத்து வானத்தை நோக்கி ஊதிவிட்டு வண்டிலின் பின்னால் நடக்கத்தொடங்கினார். தோம்புத்துரையர் எப்போதும் இரண்டு "றேம்" அதி விசேசம் வாங்குவார். ஒரு "றேம்," தனக்கு மற்றைய ஒரு "றேம்பில்" சுடலைக்கு அரை, மாடனுக்கு அரை, இது கிட்டதட்டப் பத்துப் பன்னிரண்டு வருசமாக அவர் ஏற்படுத்திக் கொண்ட வழக்கம். அதற்கு குறைவில்லாதப்படி களி ஏத்தவோ, பொசிமட்டை ஏத்தவோ தோட்டத்துக்கு சாணம் ஏத்தவோ வண்டிலுக்கு வேலை வந்தவண்ணமிருக்கும்.

தோம்புத்துரையருக்கு வீட்டுக்குப் போகும் எண்ணமில்லாது இருந்தார். கூத்தில் கூட துச்சாதனன் துகிலுரியும் காட்சியை ரசிக்க விருப்பம் இல்லாதவர். இப்போது தானே தெருச்சந்தியில் வைத்து அம்மணமாக்கப்பட்டது போன்ற துயரில் இருந்தார். கால்கள் மேலும் இடறின. ஆனாலும் அவர் வீட்டுக்குப் போய்தான் ஆக வேண்டும் அவருக்காக சிவபாக்கியம் காத்துக்கிடப்பாள். சுடலையைப்போல் தோம்புதுரையர் ரகளை பண்ணினாலும், மாடனைப்போல் சிவபாக்கியம் முதிர்ந்த அனுபவத்துடன் வாழ்கை வண்டிலை இழுத்துவந்துவிட்டாள். இனி என்ன காடுதான். சுடுகாட்டுக்குப்போய் சேரக்கிடையில் எவ்வளவு அவமானத்தை, சுமக்கவேண்டிவருமே, என்று விசனப்பட்டார். நேற்று இரவும் தோம்புத்துரையர் ரகளைப்பண்ணி மகளை ஆத்திரத்தில் தும்புதடியால் விளாசியும் விட்டார். சிவபாக்கியம் எதிலும் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கி இருக்கிறாள். அவளுக்கு இந்தப் பிரச்சனையைக் கையாளும் திறன் இல்லாமல் போய்விட்டது. அவளது வயதும் காலமும் இப்படியான பிரச்சனைகளைச் சந்திக்காது போயிருக்கலாம் அவன் இப்போது காக்கி சட்டையுடனேயே வருகிறான். தாலி கட்டாமல் அதிகாரம் பண்ணுகிறான். தோம்புத்துரையை தொம்பலுக்குள் புதைத்துவிடுவதாக மோட்டார் சைக்கிளில் வந்து வண்டிலை மறித்து மிரட்டுகிறான்.

வண்டிலின் கடகடப்பு நின்றுவிட்டது. தோம்புத்தரையர் திடுக்கிட்டார். இவ்வளவு கெதியாக வீடு வந்து விட்டதோ? இல்லை தீத்தக்குளம் தாண்டி வண்டில் இடுகாட்டின் எல்லையில் நின்றிருந்தது. சுடலை வைகோலுக்கும் புண்ணாக்குக்கும் வீடுப்போய் சேர அந்தரப்பட்டுச் சண்டித்தனப் பட்டுக்கொண்டிருந்தது. மாடன் ஒரு சிறு அசைவுமற்று நின்றிருந்தது. தோம்புதுரையர் இடுகாட்டை நோக்கினார். நிலைக்குத்தாக நாட்டப்பட்ட நான்கு ரயில் தண்டவாளங்களுக்கு இடையில் விறகின்மீது தீ கொழுந்துவிட்டு எரிந்துக் கொண்டிருந்தது. மாடன் தனக்கென்று சில விதிகளை வகுத்து வைத்திருந்தது. பிணம் இடுகாட்டில் எரிந்தால் அது சுடுகாட்டை கடந்து எப்போதும் போவதில்லை. அதற்கு உடல் கருகிவரும் மணம் பிடிப்பதில்லை. குறுக்காக மணல் வெட்டையில் வண்டிலை இழுத்து ஊர்ந்து போகும் தோம்புத்துரையர் வண்டிலை நெருங்கி வரும்வரை மாடன் காத்து நின்றது தோம்பர் தனது இழுப்புநடை நடந்து வண்டிலை நெருங்கி வந்து "நட" என்றார். மாடன் சுடலையையும் இணைத்து இழுத்துக்கொண்டு வீதியில் இருந்து இறங்கி மணல் வெட்டையால் நடக்கத்தொடங்கியது சுடலை இந்த பயணத்தை விரும்புவதில்லை. வண்டியை மணல் வெட்டையில் மூச்சு திணற இழுக்கப் பிரியப்படுவதில்லை. ஆனாலும் மாடனின் தீர்மானத்திற்கும் உறுதிக்கும் முன்னால் சுடலையின் ரகளைகள் பயனளிப்பதும் இல்லை. மாடனுக்குக் கட்டுப்பட்டவர்போல் தோம்புத்துரையனும் வீதியில் இருந்து இறங்கி மணல் வெட்டையில் வண்டிலுக்குப் பின்னால் போனார். மாடனும் சுடலையும் மூச்சிறைக்க வண்டிலை மண்ணுக்குள்ளால் இழுத்துப் போயின. தோம்பர் கால் இடற இழுப்பட்டு நடந்து வந்தார். சவுக்குப்புதர் தாண்டி வண்டில் வண்ணான் தெரு முடக்கு ஆலமரத்தடியில் வந்து ஏறி வீட்டிற்குக் பின்புறமாகச் சுற்றி வளைத்து வண்டில் போனது. எப்போதும் தோம்புத்துரையரின் வேலி மரங்களில் ஏதாவது ஒரு மூலையில் ஒரு பட்சியின் குரல் கேட்டபடி இருக்கும். களைப்பு மிகுந்து வீடு திரும்பும்போது இனிமையான குரலில் கானம் பாடும் ஓசையுடன் வரவேற்கும் இயல்பாய் மன அழுத்தம் போய் குளுமை மனதைக்கவ்வும். வீட்டை விட்டு வெளிக்கிளம்பும்போது கூட அவற்றின் பேச்சொலி வழி அனுப்பி வைக்கும். இவை எல்லாம் இப்போது தோம்புத்துரையார் நனவிடை தோய்கின்றபோது எப்பவாவது மனதில் தோன்றி சலனப்படுத்தும் காட்சிப்படிமங்களாகிப் போனது. இப்போது தோம்புதுரையாரின் வீட்டை சுற்றி மதில் கட்டியாபிற்று வேலியில் நின்ற மரங்களின் அடிக்கட்டைகள் தாம் இருந்ததை நினைப்பூட்டுவதுபோல் அரந்துபோய் கிடக்கின்றன. கோடை வெயில் தகித்தெடுக்கும்போது வீட்டினுள் புழுக்கம் தாங்க முடிவதில்லை. காற்றாட வெளியில்வந்து குந்த நிழல் மரம் இல்லை எங்கு திரும்பினாலும் மதிலோரம் காணல் நீர் தளம்புகிறது. மதிலின் மேல் குந்திவிருக்கும் வீதுருகளின் ஒளிபட்டு நான்கு திசைகளிலும் தெறிக்கிறது. ஒரு பட்சிகூட மறந்தும் இந்த மதிலில் குந்தி விடுவதில்லை. இவை எல்லாம் காக்கிச்சட்டைக்காரன் தனது பாதுகாப்பிற்கு ஏற்படுத்திஇருக்கும் நாகரிகங்கள். இவை எதுவும் தனது மகளுக்குப் பாதுகாப்பானவை இல்லை என்பதைத் தோம்புத்துரையர் நன்கு உணர்ந்திருந்தார். மீண்டும் மீண்டும் ரகளை பண்ணுவதைவிட ஒதுங்கி இருந்து மகளின் நல்வாழ்வுக்குப் பிரா்த்திக்க அவர் எண்ணினார்.

மீண்டும் வண்டிலின் கடகடப்பு நின்று போனது. தோம்புத்துரையர் வியந்தார். பத்து பன்னிரண்டு வருடமாக அவரது வீட்டுப் படலையை அண்டித்தான் மாடன் வந்து நிற்கும். தேவை இல்லாமல் மாடன் இடை நடுவில் நிற்கப் பிரியப்படுவதில்லை. தோம்புத்துரையர் வேகமாகக் காலை இழுத்து விசிறி வண்டியை நெருங்கி வந்தார். வீட்டுக்கு இன்னும் ஒரு வளவு தாண்ட வேண்டியிருந்தது. "நட" மாடன் அசைய மறுத்தது. சுடலை வைக்கோலுக்கும் புண்ணாக்குக்கும் வீடு போகப் பரபரத்தது தோம்புத்துரையார் வண்டியை விட்டு முன்னே நகர்ந்தார். தோம்புதுரையரின் குரல் கேட்டுப் பக்கத்து வீட்டு, கனகம், பருத்த அவளது உடல், அலங்கோலமாக அசையத் தலையில் அடித்து அலறி வந்தாள்.

"அப்புச்சி பொட்ட மண்ணெண்ணையை ஊத்தி கொளுத்திட்டாள். அப்புச்சி பின்னேரம் விசாரிக்கோணும் ஒருக்கா வரச்சொல்லி இரண்டு பெடியன் சைக்கிள்ல வந்து சொல்லி போட்டுப் போனவளுகள்... அவசரப்பட்டுப்பெட்ட தன்னக் கொழுத்திட்டது அப்புச்சி..."

தோம்புத்துரை வீட்டை நோக்கினார். சுண்ணாம்பு கலந்த மதிலில் குந்தி இருக்கும் வீதுறுத் துண்டுகளுக்கு மேலால் மெல் இருளில் சிவபாக்கியதத்தின் சுருங்கிப் போன முகம் தெரிந்தது. திரும்பி வண்டிலுக்கு வந்தார் தோம்புதுரையர். சுடலை கடும் நகளை பண்ணி கொண்டு நின்றது. சுடலையை பிணையலில் இருந்து அவிழ்த்து விட்டார் தோம்புதுரையர். சுடலை வைக்கோலுக்கும் புண்ணாக்குக்கும் அவசரப்பட்டு வீட்டை நோக்கி ஓடியது. மாடனையும் அவிழ்த்து வண்டிலை நிலத்தில் சாய்த்தார் தோம்புத்துரையர் மாடன் மூக்குப்புடைக்க நாசியில் எதையோ நுகர்ந்துவிட்டு திரும்பிநடக்க தொடங்கியது. மாடன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றார் தோம்புத்துரையர். இடது கையால் வலது தோள்பட்டையை தடவிபார்த்தார். வெத்திலைக் கொடிக்குத் தண்ணீர் சுமந்து காய்ந்துப் போன தோல் சொர சொரப்பாக இருந்தது. மெல்லிய பிஞ்சி விரல்கள் அந்த சொர சொரப்பில் அலைந்த ஸ்பரிசம் அவரை நெஞ்சுருக வைத்தது. கண்கள் கசிந்தன. மாடன் திரும்பிப் பாராது நடந்தது. தோம்புதுரையர் எதுவும் சிந்திக்கும் திக்கற்று மாடனை பின் தொடர்ந்து நடந்தார்.

தேசிய பத்திரிக்கை செய்தி ஒன்று;-

தலைப்பு – தீக்காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் மரணம்.

தீக்காயங்களுடன் மட்டகளப்புப் பொது மருத்துவமனையில் ஞாயிற்றுக் கிழமை சேர்க்கப்பட்ட இளம் பெண் செவ்வாய்க்கிழமை மரணமானார்.

அரசாங்க விடுதி வீதியில் வசித்து வந்த செல்வி தம்பிதுறை கனகேஸ்வரி (வயது – 28) என்பரே இவ்வாறு மரணத்தை தழுவியுள்ளார்.

தம்பிதுறை கனகேஸ்வரி ஞாயிற்றுக்கிழமை மண்ணெண்ணை அடுப்பைத் துப்புரவு செய்துள்ளார். அப்போது அவரது சேலையில் மண்ணெண்ணை சிந்தியுள்ளது. இதை அவர் கவனிக்காது இருந்துள்ளார். இதையடுத்து அவர் கேஸ் அடுப்பினை இயக்கியுள்ளார். அச்சமயம் அவரது சேலையில் திடீரெனத் தீப்பற்றியுள்ளது. பின்னர் இவர் தீக்காயங்களுடன் மட்டகளப்பு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். செவ்வாய்க்கிழமை காலைவரை டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பயனின்றி இவர் பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

மட்டகளப்பு நகர் திடீர் மரண விசாரணை அதிகாரி ஜேபி கொர்ணபெர்ணந்து மரண விசாரணை நடத்தினார். கனகேஸ்வரியின் தாயார் சிவபாக்கியம் சாட்சியம் அளித்தார்.

சட்ட வைத்திய அதிகாரி எம். ஏ காதர் மருத்துவ அறிக்கை சமர்ப்பித்தார்.

மரண விசாரனையின் முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## கடந்த காலத்தை ஏன் ஆராய்ச்சி செய்ய வேண்டும்?

*கடந்த காலத்தின் மேல் அன்பு செலுத்துவதோ அல்லது கடந்த காலத்திலிருந்து தன்னை விடுவித்து கொள்வதோ ஒரு வரலாற்றாசிரியனின் பணி அல்ல ஆனால் கடந்த காலத்தை நன்கு பயின்று தேர்ச்சி பெற்று அவர் புரிந்து கொள்ளும் விதமே நிகழ்காலத்தைப்பற்றி அறியும் திறவுகோலாக விளங்கவேண்டும். ஒரு வரலாற்றாசிரியனின் கடந்த காலத்தைப்பற்றிய தீர்க்கமான பார்வை நிகழ்காலப் பிரச்சனைகளுள் ஊடுருவி நுண்ணறிவால் ஒளியிடும்போது ஒருபெரிய வரலாறு நுட்பமாக எழுதப்படுகிறது. வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடியவை ஒருபோதும் ஒருவழிப் பாதையின் தயாரிப்பு அல்ல. நிகழ்காலத்தைப் பற்றிக் கடந்தகாலத்தின் தெளிவுடன் அறிவது கடந்தகாலத்தை நிகழ்காலத் தெளிவுடன் அறிந்துக் கொள்வதற்கும் சேர்த்து ஒப்பாகும். நிகழ்காலம் கடந்தகாலம் ஆகிய இரண்டிற்கும் உள்ள உறவுகளின் வாயிலாக ஆழ்ந்த அறிவுபூர்வமான தெளிவுநிலையை விளக்குவதே வரலாற்றின் பண்பு ஆகும்."*

அறிஞர். டி.டி. கோசாம்பி.

மகாபாரதத்தில், அபலையான அம்பை என்ற அரசிளங்குமாரியின் கதை சொல்லப் பட்டிருக்கிறது. அவளுக்கு அரசவம்சத்தினரால், ஆணாதிக்கத்தினால் இளைக்கப்பட்ட அவமானத்தை, கொடுமைகளைப்பற்றி எவரும் வாய்திறந்து பேசவில்லை. அவளுடைய வாழ்வும் வரலாறும் கருத்தில் எடுக்கப்படாமல் ஆணதிக்க இரும்புத்திரையினால் மறைக்கப்பட்டது. ஏதோ ஒரு சாதாரண நிகழ்வுபோல அவளுக்கு இளைக்கப்பட்ட கொடுமைகள் மௌனமாகவே மறைக்கப்பட்டன. அவளுக்கு ஆணாதிக் கத்தினால் இளைக்கப்பட்ட அநீதிகளின் தார்ப்பரியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து ஆணாதிகத்தின் குரூரத்தை அம்பலமாக்குவதே இந்நக் கட்டுரையின் நோக்கம்.

கங்காதேவியால் பிறந்த உடனேயே கொல்லப்பட்டார்கள்.

பீஷ்மர் ஒரு வெல்லப்படமுடியாத வில்லாளி. வேத, வேதாந்தங்களில் துறை போந்தவர். சாஸ்திரங்களில் கரைகண்டவர். ராஜ நீதியில்

ஒப்பற்றவர். வயதில் மிகவும் முதிர்ந்தவர். தனது தந்தையின் இரண்டாவது திருமணத்திற்காகத் தனது பட்டாபிஷே கத்தைத் துறந்தவர். தனது தந்தையின் இரண்டாவது மனைவியின் இரண்டாவது புத்திரனுக்காக, இல்லறவாழ்வைத் துறந்து ஆயுள்காலப் பிரம்மச்சாரியாக வாழ்ந்த சத்திய விரதர். அப்படிப்பட்டவர் சுயம்வரத்திற்குப் பெண்ணெடுக்கத் துணிந்திருப்பார் என்று எவரும் கற்பனை செய்திருக்கமாட்டார்கள்.

அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டார். ஆனால் சௌபல தேசத்து அரசிளங்குமாரன் சால்வன் மட்டும், அவரை விடாது துரத்திச் சென்று தடுத்தான். பீஷ்மருக்கும் அவனுக்கு மிடையில் கடுஞ்சண்டை மூண்டது. அப்போது அம்பை சால்வனின் வீரத்தினால் அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்து, அவனைத் தன் கணவனாக நெஞ்சுள் வரிந்துகொண்டாள். இந்தச் சண்டையில் சால்வன் தோற்கடிக் கப்பட்டான். ஆனால் அரசிளங்குமாரிகளின் வேண்டுதலின்பேரில் பீஷ்மர் சால்வனை உயிருடன் தப்பிப்போகவிட்டார்.

ஆஸ்தினாபுரத்தில் மூன்று கன்னியர்களையும் விசித்திர வீசியனுக்குத் திருமணம் செய்துவைக்க பீஷ்மர் ஏற்பாடு செய்திருந்தார். கலியாண மண்டபத்தில்

# அம்பைகள் சிகண்டிகளாக வேண்டும்

## பீஷ்மர்களை வீழ்த்த அல்ல

— விகர்னன்



காசிராஜாவுக்கு, அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற மூன்று புதல்வியர்கள் இருந்தார்கள். அவர்கள் கன்னிப்பருவம் அடைந்தும், அவர்களுக்குத் திருமணம் செய்துவைக்கச் சுயம்வரம் நடத்தப்பட்டது. அந்தச் சுயம்வரத்திற்கு பல தேசத்து அரசகுமாரர்களும் வந்திருந்தார்கள். முதியவரான பீஷ்மரும் இந்தச் சுயம்வரத்திற்கு வந்திருந்தார்.

ஏதோ, பீஷ்மர் சுயம்வரத்தைப் பார்க்கவே வந்திருக்கிறார் என்று எல்லா அரசர்களும் நினைத்தார்கள்.

பீஷ்மர் கங்கா தேவிக்கும் சந்தனுராயாவுக்கும் பிறந்த எட்டாவது மகன். கடைசிமகனும் ஒரே ஒரு மகனும் பீஷ்மரே. மற்றய ஏழு புதல்வர்களும் இறந்துபோனார்கள். அதாவது தாய்

ஆனால், சுயம்வரத்திற்கு வந்தவர்கள் தங்கள் பெயர்களைக் கொடுத்தபோது, பீஷ்மரும் தனது பெயரைக் கொடுத்தார். இதைக்கண்ட மற்றைய அரசர்கள் கொதிப்படைந்தார்கள். இகழ்ந்து பேசினார்கள். மலைபோன்ற அவரது பராக்கிரமம் மண்ணில் சிந்துவிட்டதைப் போன்று ஏளனமாகப் பேசினர். சுயம் வரமேடைக்கு வந்திருந்த காசிராஜாவின் மூன்று புதல்வியர்களும், கிழவரைப் பார்த்துவிட்டு நிற்காமல் விலகிப்போனார்கள்.

பீஷ்மருக்கும் ஏனைய அரசிளங்குமாரர் களுக்கும் நடந்த வாக்குவாதம் சண்டையில் முடிந்தது. பீஷ்மர் அவர்களை ஒவ்வொருவராகத் துரத்தியடித்தார். அந்த மூன்று அரசிளங் குமாரிகளையும், பலாத்காரமாகத் தேரில் ஏற்றிக்கொண்டு

அரசகுலத்தவர்கள், பெரியவர்கள் குழுமியிருந்தார்கள். அம்பையின் மற்றைய இரண்டு சகோதரர்களும் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அம்பைமட்டும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. கலியாணப்பந்தலிலிருந்த அத்தனை பேர்களுக்கும் முன்னால் அவள் மௌனம் கலைத்து. அவள் பீஷ்மரை நோக்கி மெள்ள நகைத்தாள்.

"கங்கை புத்திரரே! நான் சௌபலதேசத்து அரசிளங்கு மாரனான சால்வனை என் மனதில் கணவனாக ஏற்றுக் கொண்டுவிட்டேன். நீர் பலாத்காரமாக என்னைக் கொண்டுவந்தீர். சாஸ்திரம் உணர்ந்த நீர் எவ்வண்ணம் செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்யலாம்."

அம்பையின் இந்த எதிர்வாத த்தைப் பீஷ்மர் எதிர்பார்க்கவில்லை. அவளுடைய எதிர்வாதம் அவரது ஆளுமைகுச்சவாலாக இருந்தது.வேறுவழியின்றி அவர் அம்பையை சால்வனிடம் அனுப்பிவைத்தார்.

சால்வனிடம் சென்ற அம்பை நடத்தவற்றையும் தன்கருத்தையும் அவனிடம் தெரிவித்தாள். ஆனால் சால்வன் அவளை ஏற்கவில்லை. "பீஷ்மரால் வெற்றி கொள்ளப்பட்ட நான் உன்னை மனைவியாக ஏற்கமுடியாது. நீ அவரிடமே திருப்பிப்போய், அவர் ஆணைப்படியே செய்" என்றான்.

மனமுடைந்த அம்பை திரும்பிச் சென்று, பீஷ்மரிடம் சால்வன் கூறியவற்றை எடுத்துரைத்தாள். உடனே பீஷ்மர் விசித்திர வீரியனை, அம்பையை ஏற்கும்படி கூறினார். ஆனால் வேறு புருஷன்மேல் மனம் செலுத்திய ஒரு கன்னியைத் தான் மனைவியாக ஏற்கமுடியாது என்று மறுத்தான். நிலைமை தனக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்த அம்பை, பீஷ்மர் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினாள். தனது ஆயுள்காலப் பிரம்மச்சாரிய பிரதிக்ஞையைக் கருத்தில்கொண்டு, பீஷ்மரும் அவளை ஏற்க மறுத்தார். அம்பை சில ஆண்டுகள் பீஷ்மரின் அரண்மனையிலே தங்கியிருந்தாள். இருந்தும் பீஷ்மர் தான் விவாகம் செய்வதில்லை என்ற தனது பிரதிக்ஞையின்மேல் பிடிவாதமாகவே இருந்தார்.

செய்வதறியாது தடுமாறிய அம்பை மீண்டும் சால்வனிடம் சென்று தனது நிர்க்கதியான நிலைமையை விளக்கித் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி இரந்தாள். ஆனால் சால்வன் முன்பு கூறியவற்றையே கூறி அவளைத்திருப்பி அனுப்பி விட்டான். இவ்வாறு கண்ணீரும் கம்பலையுமாக பீஷ்மரிடமும், சால்வனிடமும் மாறி மாறிச் சென்று அல்லலுற்றாள்.

பூப்போன்ற அவளது நெஞ்சுள் கோபம், வெறுப்பு, வன்மம் பழிக்குப்பழிவாங்கும் உணர்வு பிரவாகித்தது. எப்படியும் பீஷ்மரைக் கொன்றுவிட வேண்டும் என்ற வெஞ்சினம் விஸ்வரூபம் எடுத்தது. எல்லா அரசர்களிடமும் சென்று தனக்குப் பீஷ்மரால் இழைக்கப்பட்ட அவமானத்தையும் துன்பத்தையும் எடுத்துரைத்து, அவரைக் கொல்லும்படி வேண்டினாள். பீஷ்மரை விரோதித்துக் கொள்ள விரும்பாத அரசர்கள் அவள் வேண்டுகோளை நிராகரித்தனர். இதனால் மனங்குமுறிய அம்பை சண்முகப் பெருமானைக் குறித்துக் கடுந்தவமிருந்தாள். முருகன் அவளுக்குப்



பிரசன்னமாகி, ஒரு மாலையைக் கொடுத்து "இந்த மாலையை எவன் தரித்துக் கொள்கிறானோ, அவன் பீஷ்மருக்குச் சதுரு ஆவான்" என்று அருளி மறைந்தார்.

அம்பை அந்த மாலையை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு அரசனிடமும் சென்று நடந்தவற்றைக் கூறி மாலையை அணிந்துகொண்டு பீஷ்மரைக் கொல்லும்படி கோரினாள். எல்லா அரசர்களும் பீஷ்மருக்கு அஞ்சி, அவள் கோரிக்கையை நிராகரித்தனர். மன்னன் துருபதனும் அவள் வேண்டுகோளை நிராகரித்தார். அதனால் அம்பை அந்த மாலையை துருபதனுடைய அரண்மனை வாயிலில் தொங்கவிட்டுவிட்டு வனம் சென்றாள். வனத்தில் சில தபோதனர்களைக்கண்டு தன் துன்பியல் நாடகத்தை எடுத்துரைத்தாள். அவர்களது ஆலோசனையின் பேரில் பரசுராமனைச் சந்தித்தாள். தனது சோகக்கதையைச் சொல்லிப் பீஷ்மரைக் கொல்லவேண்டும் என்று வேண்டினாள். பரசுராமன் தான் சால்வனிடம் பேசினால் அவளை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும் என்று சொன்னார். ஆனால் அம்பை அதை மறுத்தாள். தனக்குத் தேவை கலியாணமல்ல, பீஷ்மரின் மரணமே என்று நாண்டுகொண்டாள். பரசுராமனும் பீஷ்மரைச் சண்டைக்கு அழைத்தார். இருவரும் சமபலமானவர்கள். இதனால் சண்டை பலநாள்கள் வெற்றிதோல்வியின்றி நடந்தது. சண்டை பயனற்றது என்று கருதிப் பரசுராமன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். அம்பையைப் பீஷ்மரிடம் சரணடையும்படி சொன்னார்.

பரசுராமனும் தன்னைக் கைவிட்டதனால், அடங்காச் சினங்கொண்ட அம்பை, இமயமலைக்குச் சென்று, சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்தாள். சிவனும் அவளுக்குத் தரிசனமாகி "நீ இன்னுமொரு பிறவியடைவாய். உன்னால் பீஷ்மர் மரணம் அடைவார்" என்று வரங்கொடுத்து மறைந்தார். பீஷ்மரைக்கொல்ல வேண்டும் என்ற வேட்கையால் தாமதமின்றிச் சிதையில் தீமூட்டி தீயுடன் சங்கமமானாள். சிவனுடைய வரத்தின்படி அவள் மீண்டும் துருபத மன்னனின் மகளாகப் பிறந்தாள். சில ஆண்டுகளுக்குப்பின் அரண்மனை வாயில், யாரும் தீண்டுவதற்குப்பயந்து, இன்னும் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பூமாலையைப்பார்த்து, அதை எடுத்துத் தன் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

மாலையும் கழுத்துமாய் நின்ற தன் மகளைக்கண்டு அச்சமடைந்த துருபதமன்னன் மகளை (அம்பையை)த் தன் வீட்டிலிருந்து அப்புறப்படுத்திக் காட்டிற்கு அனுப்பிவைத்தான். தன்னைப் பீஷ்மரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவே துருபதன் அப்படிச் செய்தான். அம்பை அனைத்தையும் உணர்ந்து சகித்துக்கொண்டு பீஷ்மரைக் கொல்லும் வேட்கையில் கானகம் சென்று கடுந்தவம்

புரிந்து ஆண்தன்மை அடைந்து சிகண்டி என்ற வீரனாகினாள்.

இதன்பின் பாரதப்போரில், பத்தாவது நாள் பீஷ்மரைக் கொல்ல, அர்ச்சுனனுக்குத் துணையாக வருகிறான் சிகண்டி. போரின்போது சிகண்டி சரமாரிபொழிந்து பீஷ்மரை வீழ்த்துகிறான். பீஷ்மரின் மரணத்திற்கு மூலகாரணமாக இருந்தவன் சிகண்டிதான். இதுதான் அம்பையின் கதை.

இனி விடயத்திற்குப் வருவோம். ஆணாதிக்கம் என்பது ஒரு தனிமனிதன் சார்ந்த விடயமல்ல. அது சமூக, அரசில், பொரளாதார பண்பாட்டுத் தளங்களை அடிப்படையாகக்கொண்ட தனி உடைமைச் சமூகத்தின் ஆண்வழி அதிகாரம். நிலவுடைமைச் சமூதாயத்தின் முன்பின்னாகவே, ஆண்கள் சொத்தைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தோடு பெண்அடிமைத்தனத்திற்கான கலாச்சாரக் கட்டுமானமும் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. இச்சமூகத்தில் பெண் ஒரு பண்டமாகவே மதிக்கப்பட்டாள். கருவறை தொடக்கம் கல்லறைவரை தாய், தந்தை சகோதரன்கள், கணவன், மாமன், மைத்துனன், மகன் என்ற உறவுமுறைக்குள் கட்டுண்டு கிடந்தாள். நிலவுடைமைச் சமூகத்தில் பெண் ஒரு பேசும், வேலைசெய்யும் இன்பமூட்டும், பிள்ளைப்பெறும் கருவியாகவே இருந்தாள். அவளுக்கென்று சுயமான, சுதந்திரமான சிந்தனை மறுக்கப்பட்டது. அதற்கு அம்பை ஓர் உதாரணம்.

அம்பை தனக்கான உரிமைக்குரலை எழுப்பத்தொடங்கியவுடனேயே அவளுக்குப் பிரச்சனை ஏற்படுகிறது. சால்வனை உள்ளத்தால் கணவனாக வரிந்து கொண்டது, விசித்திர வீரியனை தனது தங்கைகள்போல் கணவனாக ஏற்கமறுத்தது இவை அன்றைய சமூகத்தில் பெண்ணுக்கான பண்பாடாக இருக்கவில்லை. சால்வனை மனதார விரும்பியகுற்றத்திற்காகவே அவள் ஆணாதிக்க அதிகாரவர்க்கத்தால் தண்டிக்கப்பட்டாள். சுயம்வரத்தின்போது ஏனைய அரசகுமாரர்கள் பீஷ்மரால் தோற்கடிக்கப் பட்டபோது, சால்வன்மட்டும் அவரை விடாது துரத்திச்சென்று சண்டையிட்டான். அவனது தன்மானம், வீரத்தின்மேல் அம்பைகொண்ட மதிப்பு, அவனைத் தன் உள்ளத்தில் கணவனாக வரிந்து கொண்டதற்கான பிரதான காரணமாக இருந்தது. பீஷ்மரால் தோற்கடிக்கப்பட்ட சால்வன் அதை ஒரு கௌரவக்குறைவாகக் கருதியே தன்னை விரும்பிய அம்பையை ஏற்கமறுக்கிறான். கௌரவத்திற்காகவே வாழ்கையைப் பலியாக்கும் நிலப்பிரபுத்துவ பண்பாட்டுக்குப் பலியானதும் அம்பையே. அம்பைமீது சால்வனுக்கு ஏற்பட்ட உள்ளார்ந்த விருப்பமே, பீஷ்மருடன் அவனைப் போராடவைத்தது. அந்த உண்மையைக் கூடச் சால்வனுடைய கௌரவம் ஏற்கமறுத்தது.

வாழ்க்கைப்பற்றிய இனிமையான கற்பனை கனவுகளில் மூழ்கிக்கிடந்த இளவரசியான அம்பை, பீஷ்மரின் அதிரடி நடவடிக்கையால் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டாள். அவளது ஆற்றாமை, கிழடுதட்டிப்போன பீஷ்மரையும் தன் கணவனாக வரிந்துகொள்ளத் தூண்டியது. அது கூட அவளுக்குக் கைக்கெட்ட வில்லை. பீஷ்மருடைய மறுப்புக்குக் காரணம் அவரது ஆயுள்காலப் பிரமச்சாரிய பிரதிக்ஞை என்று நியாயப்படுத்தப்பட்டது. அதுதான் காரணமாக இல்லாதிருந்தால், தனது விழுத்தாப்பியத்தையும் பொருட் படுத்தாது அம்பையை ஏற்றிருப்பாரா என்பது ஒரு விவாதத்திற்குரிய விடயந்தான். ஏனெனில் அவரது சகோதரன் விசித்திரவீரியனே, இன்னொருவனைத் தன் உள்ளத்தில் இச்சித்தவளைத் தான் மனைவியாக ஏற்க முடியாது என்று மறுத்தபோது, பீஷ்மர்மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்திப்பாரா என்பது கேள்விக்குரிய விடயமே.

சால்வனால் நிராகரிக்கப்பட்ட அம்பை, விசித்திர விரியன் அவளை ஏற்க ஒப்புக்கொண்டிருந்தால், அவள் அவனுக்கு மனைவியாகியிருப்பாள். விரும்பாதது விசித்திர விரியனே அன்றி அம்பை அல்ல. பீஷ்மரையும் வரிந்திருப்பாள். அவ்வளவிற்கு அவள் நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தபோதிலும் அவள் அதை ஒரு பிழையான ஒழுக்கக்கேடான ஆண்களின் மொழியில் சொன்னால் கற்புக்கேடானதாகக் கருதவில்லை என்பதே உண்மை.

மனத்தினால், வாக்கினால், உடலினால் ஒரு பெண் ஒருவனையே, அதுவும் தன் கணவனையே நினைந்து இணைந்து பிணைந்து கட்டுண்டு வாழுதல் என்ற நிலப்பிர புத்துவ கருத்தியல் பண்பாட்டு அழுத்தத்திற்கு அம்பை விலக்காகவே இருந்தாள். அது அம்பைக்கும் மட்டுமான விடயம் அல்ல. எந்தப் பெண்ணும் அம்பை போன்றவளே. ஏனெனில் திருமணத்திற்கு முன் ஒரு கன்னிக்கு மனத்தினால், வாக்கினால் உடலினால் என்ற நிபந்தனைகளைப் பொருத்திப் பார்க்க முடியுமா? ஏனெனில் ஓர் ஆடவன் திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்கு பின்பும் இன்னொரு பெண்ணுடன் அல்லது பெண்களுடன் கனவிலும் கற்பனையிலும் கூடிமுயங்கிக் சோரம் போகிறவனாகவே இருக்கிறான். பெண் என்ன விதிவிலக்கா? அப்படி இல்லை என்று யாராவது கருதினால், அது ஓர் அப்பாவித்தனம் மட்டுமல்ல கோழைத்தனமுமாகும். மனித இயல்புக்கு அப்பாலான பண்பாட்டு புனைவுகள் மனிதர்மேல் சுமையாகப் படிந்திருக்கிறது. கண்ணதாசன் மொழியில் சொன்னால் ஆணோ பெண்ணோ திருமணத்திற்கு முன்பும் திருமணத்திற்கும் பின்பும் கனவில், கற்பனையில் பெண்ணுடனோ, ஆணுடனோ இரவில் கூடி முயங்கிச் சோரம்போய் விடியக்குளித் திருப்பவர்களே. இந்த அர்த்தத்தில் கற்பு என்ற கருத்தியல் கண்ணாடிவார்ப்பு காமம் என்ற கருங்கல்லில்மோதி துகள்களாகச் சிதறிப்போகும் ஒரு பொய்யான புனைவு என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். இதற்கு ஆண்பெண் விதிவிலக்கல்ல ஏங்கலின்

வார்த்தைகளில் சொன்னால் உண்மையான கற்பை அனுசரிப்பதற்காக மண்புழுவுக்குத்தான் நாம் கோவில் கட்டிக்கும்பிடவேண்டும். ஏனெனில் மண்புழு மட்டுமே தன்னிலுள்ள யோனித்துவாரங்களில் தானே புணர்ந்து மண்புழுக்களைப் பிரசவிக்கிறது.

இந்த ஆளும்வர்க்கம் ஆணாதிக்கத் தன்மை கொண்டது. அது பெண்ணைச் சுதந்திரமாக விடுவதில்லை. அம்பை, பீஷ்மரால் தனக்கு இளைக்கப்பட்ட அவமானத்தை, அநீதியை எல்லா அரசர்களிடமும் எடுத்துரைத்துப் பீஷ்மரைக் கொல்லும்படி கோரினாள். ஆனால் அவள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அவளுக்கு முருகனால் வழங்கப்பட்ட மாலையைச் சூடிக் கொண்டு பீஷ்மரைக் கொல்வதையும் அவர்கள் ஏற்கவில்லை. சத்திரியர்களின் ஜென்ம விரோதியான பரசுராமன் மட்டும் அவள் கோரிக்கையை ஏற்றார். அதுவும் வெற்றி பெறவில்லை. வல்லான் வகுத்ததுவே சட்டம், நீதி, ஒழுக்கம், பண்பாடு என்றாகிவிடுகிறது. இது ஒரு தனி நபர் சம்பந்தப் பட்ட விடயம் அல்ல. ஆணாதிக்க அரசமைப்பின் விளைவே பெண் அடிமைத்தனமாகும்.

இதிகாசநாயகிகளில் அம்பை வித்தியாசமானவள். துணிச்சல் உள்ளவள். வைராக்கியம் மிக்கவள். ஒடுக்கு முறைக்குத் தலைசாய்க்காதவள். திரௌபதிபோல ஆணிடம் சரணரைய வில்லை. கடுந்தவத்தால் சிகண்டி என்ற ஆணுருப்பெற்றாள். திருமணமறுப்பு, பீஷ்மரின் மரணத்தின்மேல் விருப்பு இரண்டினதும் பிம்பமாகவே அவள் திகழ்ந்தாள். பெண்மீதான வன்புணர்ச்சி எவ்வளவு கொடுமையானதோ, அதைவிடக் கொடுமை யானது அவளது பால் வாழ்வை மறுப்பது. அம்பைக்குப் பால்வாழ்வு மறுக்கப்பட்டது. அதன் விளைவு அவளை வன்மமும், பகைமையும், குரோதமும் கொண்டவர்களாக மாற்றியது. பீஷ்மரைப் பழிவாங்கவேண்டும் என்ற வேட்கை அவளுக்குள் கொதித்துக்கொண்டிருந்தது. அதற்கான கடும் பயிற்சியே அவளின் பெண்தன்மையின் இடத்தில் சிகண்டி என்ற ஆண்மையை நிறுத்தியது. பீஷ்மரின் மரணத்தில் அவள் வெற்றிக் கொண்டாள். அவ்வளவில் அவள் திருப்திப்பட்டுக் கொண்டாள். ஆனால், பீஷ்மர்களை உருவாக்கும் இந்தச் சமூகாயத்தைப்பற்றி அவள் சிந்திக்கவில்லை. அவளால் அப்படிச் சிந்தித்திருக்கமுடியாது.

பீஷ்மரைப் பொறுத்தவரையில் அவரது ராஜநீதி காசிராஜா நடத்திய சுயம்வரத்தில் முறைகெட்டு நடந்ததில் அம்பலமானது. சுயம்வரத்திற்குச் சென்றிருக்க வேண்டியவன் விசித்திரவீரியனே, பீஷ்மர் அல்ல. அம்பையாகிய சிகண்டிதான் தன்மேல் அம்புதொடுத்தான் என்பதை அவர் அறிந்தே இருந்தார். அவர், தான் அம்பைக்கும் அவள் சகோதரிகளுக்கும் செய்தவறை உணர்ந்தவராகவும் தெரியவில்லை. அதை அவர் தவறாகவும் கருதவில்லை. இதுதான் ஆணாதிக்கவாதத்தின் தன்மை.

ஆனால், இன்றைய பெண்களின் நிலை எவ்வளவோ வளர்ச்சியடைந்திருக்கிறது. பல்துறைகளில் அவர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். உரிமைகள், சலுகைகள், சீர்திருத்தங்களுக்காகவும் போராடுகிறார்கள். நாட்டிற்காகவும், தேசியத்திற்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள். உயிரைப் பலியாக்கு கிறார்கள். ஆனாலும் பெண் ஒடுக்குமுறை ஆணாதிக்கம் ஒழிந்த பாடாயில்லை. நாடு, இனம், வர்க்கம், மதம், சாதி இவற்றின் பேரால், அதிகாரவர்க்கதின் முதன்மையான நலன்களுக்காகவே போராடி மடிக்கிறார்கள். அத்தகைய போராட்டங்களில் பெண்களின் எதிர்கால நலன்கள்பற்றி, பெண் அடிமைத்தனத்தைப் பேணிக்காக்கும் தனியுடைமைச் சமுதாய அமைப்பை மாற்ற வேண்டும் என்பதுபற்றி அவர்கள் சிந்தித்துச் செயற்படுவதில்லை. சமூகமாற்றத்தில், அதைமாற்றும் அரசியல் போராட்டத்தில், அது ஒரு பரிணாமத்தன்மைகொண்டதாக இருந்தாலும் பெண்களின் தீவிரமான பங்களிப்பு அவசியம் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும். அல்லது ஆணாதிக்க நுகத்தடியை முறித்துப்போட முடியாது. எனவே அம்பைகள் சிகண்டிகளாகவேண்டும் பீஷ்மர்களை வீழ்த்த அல்ல, பீஷ்மர்களைப் பிரசவிக்கும் சமுதாயத்தைத் தகர்த்துப் போடவே. ◆

## மனிதம் வாழ..

அமைதியிழந்து போயுள்ள
மண்ணில்
வாழத்துடிக்கிறான்
மனிதன்.

ஒளியின்றி இருளுக்குள்
தடுமாறும் அவன்
விடியலுக்காய்
ஏங்குகின்றான்.


போதி மாதவனின்
அன்பு, கருணை
போதனைகள்
அவனிடமே திரும்பி ?

பைபிள், குர்ஆன், கீதை
மேடைகளை மட்டுமே
அலங்கரிக்கின்றன.

"மானுட நேயம்"
அழகான வார்த்தை
அர்த்தமற்றும் போய்
மூலையில் முடங்கி
ஈனக்குரல் எழுப்புகின்றது

மனிதம் வாழ
மனிதன் மாறவேண்டும்.

ஈழத்து நூன்



# முகத்தைத் தொலைத்தவன்

"என்னோட வேலை செய்த அத்தனை பேர்களோடயும் இப்பவும் தொடர்பு வெச்சுக் கொண்டுதான் இருக்கிறன்."

ஒருவித பந்தாதனத்துடன் செல்வநாதன் கூறிய இந்த வரிகள்தான் தருமராஜின் மனதுக்குள் எண்ணவோ செய்தது. யாரோ.. நெஞ்சுக்குள்புகுந்து கண்ணாடித்துண்டால் சட்டென்றுகீறி விட்டதைப் போன்றதொருவலி.

பொதுவாக... வெளிநாடு சென்றதுமே... தங்கள் பழைய வாழ்க்கைகளை உறவுகளை நட்புகளை, மற்றவர் செய்த உதவிகளையெல்லாம் மறந்து விடுகின்ற பல நபும்ஸகங்களைத் தன் அனுபவத்திலேயே சந்தித்த வன்தான் தருமராஜ்.

அந்த நாடுகளின் வாழ்கை முறைகள் தரும் வேலைப்பளுக்களைத்தான் தங்கள் தவறுகளின் காரணங்களாகக் கூறித் தப்பித்துக் கொள்வதையும் தெரிந்தவன்தான். ஆனால் இவைகளுக்கெல்லாம் மேலானது அல்லவா நட்பு...?

ஒரே பள்ளியில் படித்த போதும்... ஒரே வகுப்பில் படித்து வளர்ந்த நட்பு அல்ல அது.

செல்வநாதனை விட மூன்று, நான்கு வயதால் மூத்தவன் தருமராஜ்.

தற்செயலான சந்திப்பொன்றில்... இருவருக்குள்ளும் இணைந்திருந்த இலக்கிய தாகமும் அறிவுத்தேடல்கள் கொண்ட ஆழமான சிந்தனைகளும் பரஸ்பரம் அடையாளம் காணப்பட்டபொழுது... அதுவே அவர்களது ஆழமான நட்புக்கு அத்திவாரமாக அமைந்தது.

தருமராஜ் அப்பொழுதே நன்றாகக் கவிதைகள் எழுதுவான். அவற்றை ரசிக்க... சரி பிழைகளை விமர்சிக்கக்கூடிய ஆற்றல் செல்வநாதனுக்கு இருந்தது.

வெறும்... புத்தகப்பூச்சியாய் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்த அவனைப் புற உலகுக்குள் இழுத்துவந்தவன் தருமராஜ் தான்.

மாலை ஐந்தரை ஆகிவிட்டால்.... தன் வேலைகளையெல்லாம் தூக்கித் தூரவைத்துவிட்டு செல்வநாதனைச் சந்திக்கப் புறப்பட்டுவிடுவான் தருமராஜ்.

தவறினால் அவன் இவனைத்தேடி வந்துவிடுவான்.

இப்படி இலக்கியத்தேடலும் நட்பும் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் நீடித்தன. ஆனால் இந்த நெருக்கத்தில் விரிசல் ஏற்படும் என அவன் கனவுகூடக் கண்டதில்லை.

செல்வநாதனைப்பற்றிய தனது கணிப்பில் முதல் முறையாக கீறல்விழுந்த அந்தச் சம்பவம் தருமராஜின் மனதில் நிழலாடியது..

செல்வநாதனின் அண்ணன் நவநீதன்தான்... வீடு வளவு பணம் நகையென்று கொடுத்த சீதனங்களோடு செல்வாவிற்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்டிருப்பதைத் தற்செயலாகக் கூறினான்.

இதுநாள்வரையில் செல்வா இதுபற்றி ஒருவார்த்தை கூறவில்லையே என்று எண்ணிய போது... சங்கடமாகத்தான் இருந்தது

தருமராஜிற்கு சாதிக்கொடுமைகள், சீதனக் கொடுமைகள் பற்றி இருவரும் நிறையவேபேசி ஆதங்கப் பட்டிருக்கிறார்கள் என்பதைவிட, சீதனம் வாங்குவதில்லை என்றும் கதைத்திருக்கிறார்கள்.

தருமராஜிற்கு திருமணம் பேசப்பட்டபோது பெண்ணின் தகப்பனிடம் 'அது வேண்டும் இது வேண்டும் என்று எதையும் கேட்டு வருத்தக்கூடாது' என்பதுதான் தரகருக்கு நிபந்தனையாகச் சொல்லப்பட்டது. அப்படித்தான் நடந்தது.

ஒருநாள் நேரடியாகவே கேட்டுவிட்டான் தருமராஜ்.

'அந்த விசயங்களில்... நான் தலைபோடயில்ல. எல்லாத்தையும் அண்ணனோடயே விட்டிட்டன்'

தான் சீதனம் வாங்கிய குற்ற உணர்ச்சியையும், தனக்குக் கூறாமல் மறைத்த தவறையும் அந்த ஒத்தவரி பதிலிலேயே மறைத்து நழுவிக்கொண்டான் செல்வநாதன். தருமராஜ் தனக்குள் சிரித்துக்கொண்டு மௌனமானான்.

பிரான்சிற்கு போவதற்கு ஓரிரு நாட்களுக்குப் முன்னர்தான் அதுவும்... தற்செயலாகச் சந்தித்தபொழுதுதான் கூறினான் செல்வநாதன்.

தருமராஜிற்கு அவனைப்பற்றி ஓரளவு புரிந்தது. காலமேகம் வேகமாக நகர்ந்து கரைந்து போனது. இருபது வருடங்கள்.... எத்தனை நீண்ட இடைவெளிகள்....

பேசி இலக்கத்தை வாங்கி ஒருமுறையாவது தொடர்பு கொண்டிருக்கமுடியும்.

"எத்தனை வருடகால இனிமையான நட்பு... இவன் எப்படி மறந்தான்" நினைக்கும் போதெல்லாம் நெஞ்சுக்குழிக்குள் பலதடவை வலித்திருக்கிறது தருமராஜிற்கு.

இந்த இடைவேளைக்குள்... பொருளாதாரத்தில் மட்டுமல்ல... இலக்கிய உலகிலும் கூடத் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்து நிலைத்திருந்தான் தருமராஜ். ஏழு நூல்கள் வெளியிட்டு வெற்றி கண்டத்தோடு சாகித்திய விருதையும் சேர்த்து.

"இஞ்சருங்கோ.... உங்களுக்குத்தான் போன்..."

மனைவியின் குரல் கேட்டு... விழிகளில் கேள்வி குறியோடு ரிசீவரைக் காதில் பொருத்தியபோது

"என்னை யாரெண்டு விளங்குதோ...?" ஒரு சகடைச்சிரிப்போடு அந்தக்குரல். தருமராஜிற்கு உண்மையாகவே விளங்கவில்லைதான்.

'இல்ல எனக்கு விளங்கயில்ல... நீங்கள்...' என்று இழுத்தப்போது....

'நான்தான் செல்வநாதன்'

'எந்த செல்வநாதன்...?

என்ன? செல்வநாதனெண்டால் நான்தானே... வேறயார்...? என்ன... மறந்திட்டீரோ...?

நினைவுகளைக் கொஞ்சம் தூர ஓடவிட்டு... சட்டென்று குரல் புரிந்தது.

மறந்திட்டீரோ...? என்று கேட்பதற்கே தகுதியில்லாத அதே செல்வா தனக்குள் சிரித்துக்கொண்டே யார்? செல்வாவா...? கேட்டான் தருமராஜ்.

"பிடிச்சிட்டீர் போல... நான்தான் பேசுறன்... வந்து மூன்று கிழமையாகுது... இப்ப யாழ்பாணத்தில 'டூர்' அடிச்சிக் கொண்டிருக்கிறோம். வாரகிழமை நீர் கொழும்புக்கு வருவன்... உம்மையும் சந்திக்கவேண்டும்... வீட்டில இருப்பீரானே...?"

"ஓ..., இருப்பன் எதுக்கும்... வாறதுக்கு முன்னால ஒரு கோல் தந்திட்டு வாரும்" ஒரு சில குசலங்களோடு முடித்தான் தருமராஜ்ஒரு வாரம் கழித்து... இரவு ஒரு மணியளவில் மீண்டும் அவன்.

ஹலோ... தருமா..., இப்ப வரலாமா...?"

வீட்டு இலக்கம் வரவேண்டிய அடையாளம் அனைத்தும் கூறி விட்டு... எதிர்கொள்ளத் தயாரானான் தருமராஜ் ஆனாலும்...அவனது உள்ளத்துள் ஏதோவொரு வெறுமை.

வெளியே கேட்டைத்தட்டும் சத்தம் கேட்டது. 'எப்படி... சுகமா இருக்கிறீரோ...'? அதே... அவுட்டச் சிரிப்போடு நின்றான் செல்வநாதன். ஒரு வீட்டுக்குச் செல்லும்போதுகூட கையில் ஏதாவது வாங்கிக் கொண்டுசெல்வதுதான் பொதுவான நாகரீகம்... வழக்கம். அந்த வழக்கத்தில் தருமராஜ் என்றுமே தவறியதில்லை.

இருபது வருடங்கள் கழித்து... பிரான்சிலிருந்து வந்திருக்கும் நண்பன்... ஒரு ஐம்பது ரூபாய் பிஸ்கட் பெட்டியோடாவது வந்திருக்கலாம். வெறுங்கையை விசிறிக்கொண்டுவந்து ஆலாவர்ணங்கள் காட்டி அமர்ந்தபோது... தன் மனைவி மக்களைப் பார்ப்பதற்குக் கூட வெட்கமாயிருந்தது தர்மராஜிற்கு

தங்கள் நீண்டகால நட்பைப்பற்றிப் பல தடவைகள் அவர்களுக்குக் கூறியிருக்கிறான் தருமராஜ். பிரான்சிற்குப் போனதன்பின் ஒரு கடிதம்கூடப் போடாத குறையையும் சேர்த்து

'வாங்கோ... இருங்கோ... தருமராஜின்மனைவியும், மக்களும் சேர்ந்தே இனிய முகத்தோடு வரவேற்றார்கள்.

குடும்ப நலன்கள்... குசலங்கலெல்லாம் கேட்டு நீர்கொழும்பு பிரான்ஸ் பற்றிய புதினங்களெல்லாம் கதைத்து தேநீர் குடித்து மகிழ்ந்து...நீண்ட நேரமாகியபின் 'சரி வாரும் சாப்பிடுவம்... உமக்காகதான் சாப்பிடாமல் பார்த்துக் கொண்டிருந்தனான்... என்றான் தருமராஜ் உண்மையும் அதுதான்

'ஐயோ... போன இடத்தில் புல் டைட் போட்டிட்டன். குறை நினைக்காதீர்... நீர் சாப்பிடும்'

செல்வநாதன் கூறிய தொனியில் அது பொய்யல்ல என்பது புரிந்ததுடன்... இரவு உணவு அதிகமானால் எவ்வளவு தொல்லை தரும் என்பதுவும் தருமராஜற்கு அனுபவம். ஆதலால்... மேலும் வற்புறுத்தாமல்

"உமக்காகதான் காத்துக்கொண்டிருந்தனான். பரவாயில்ல... நான் சாப்பிடுறன்."

சாப்பிட்டுக்கொண்டே கேட்டான். 'அதுசரி... இவ்வளவு காலத்துக்குப் பிறகு வந்திருக்கிறீர்... உம்மட குடும்பத்தையும் ஒருக்காக் கூட்டி வந்திருக்கலாமே...'

பாமிலியோடதான் வந்தனான். வானொன்டு ஹயர் பண்ணி...காலையில் கொழும்புக்குப் போயிட்டு... அப்படியே அவையள ஹோட்டலில் கொண்டு போய் இறக்கிப்போட்டு... அப்பிடியே உமக்கும் கோல் அடிச்சனான்" நீட்டி அளந்து முடித்தான் செல்வநாதன்.

தருமராஜிக்கு என்னவோ போலிருந்து. இவ்வளவு நேரமும் குடும்பத்தோடு வந்ததுபற்றி ஒருவார்த்தை கூடக் கூறாமல்... தான் கேட்டதன் பின்னரே கூறிய அவனது குணத்தை நினைத்த பொழுது கொஞ்சம் கோபமாகத்தான் வந்தது.

சிலவேளை குடும்பத்தோடு வந்தால் ஏதாவது கொண்டு வர வேண்டியிருக்கும் என்பதாலோ...?, மனத்துக்குள் சிரித்துக் கொண்டே தருமராஜ் கேட்டான்.

"அது சரி... இலக்கிய ரசனையெல்லாம் இப்பவும் இருக்கு தானே?

“ இலக்கியமோ? அதெல்லாம் இலங்கையோட விட்டாச்சு. வாய்மட்டுமல்ல, சொற்களே சுளிக்கும் படியாகச் செல்வநாதனிடம் தொனித்த அந்த அலட்சியம் தருமராஜிக்கு ஆச்சரியமாக இருந்தது.

சமூகத்தில் மிகப் பிரபலமான தொழில்கள் அந்தஸ்த்துகளில் வாழ்கின்ற பல பிரமுகர்வரிசை மனிதர்கள் கூட, தமது இளமைக்கால இலக்கிய ரசனைகளை, அதன் சுகங்களை இழக்காதவர்களாக, இன்னும் சரியாகச் கூறினால் அந்த ரசனைகளைத் தங்களுக்குப் பெருமையாகவும் கொண்ட பலரை பல விழாக்களில் சந்தித்திருக்கிறான். இவன் அப்படி எந்தக் தகுதியும் இல்லாத சாதாரணம்.

இலக்கியமோ என்று எடுத்தெறிந்து பேசியது கொஞ்சமும் எதிர்பார்க்காது மட்டுமல்ல, கொஞ்சம் அதிகப்பிரசங்கித் தனமாகக்கூட இருந்தது.

தருமராஜ் கூறினான் “எனக்கென்டால் இப்பவும் இலக்கியம்தான் ஆத்மாவுக்குச் சாப்பாடு. நான் எழுதின மூன்று ஊஞ்சல் பாட்டுக்கள், ஊஞ்சல் திருவிழா நாள்களில் வருசாவருசம் அந்தந்தக் கோயில்களில் பாடப்படுகுது. அதுதான் எனக்குப் பெரிய சந்தோசம்.

கொஞ்சம் பொறும், ஊஞ்சல் திருவிழாவென்டால் என்ன?

தருமராஜிற்கு சகல இடமும் எரிந்தது. போயில் கோயிலாகக் சுற்றி வந்திருக்கிறான். நிச்சயமாக அவனது மனைவி கோயில் சமாச்சாரங்கள் தெரிந்தவளாகத் தான் இருப்பாள். அதையும் விட பிரான்ஸ் உட்படப் பல வெளிநாடுகளில் மூலைக்கு மூலை கோயில்கள் கட்டி ஒரு திருவிழாவைக்கூட விடாமல் செய்து, அதனையே ஒரு சிறந்த வியாபாரமாக ஆக்கிக் கொண்டு பல தமிழர்கள் சம்பாதிக்கிறார்கள் என்று மிக நன்றாகவே தெரிந்துவைத்திருந்த தருமராஜிற்கு செல்வநாதனின் அந்தக் கேள்வி படு பொய்மையாகப்பட்டது.

நான் இப்பொழுது இலங்கையன் அல்ல. முழுக்க முழுக்கப் பிரான்ஸ்காரன். எனக்கு இவையெல்லம் தெரியாது என்பதுபோல் வந்தநேரம்தொட்டு காட்டிக்கொள்ள முனையும் அவனது பொய்முகமும் செயற்கைத் தனமும் ஒருவித எரிச்சலைத் தந்தது.

வெள்ளைக்காரனின் மனித நேயம் காட்டிய அனுதாபத்தினால் கிடைத்த இந்த வாழ்கையை வைத்துக் கொண்டு, இந்த இரண்டாந்தரங்கள் எப்படியெல்லாம் அலட்டிக் கொள்கின்றன. அற்பனுக்குப் பவிசு வந்தால் என்பது இதுதான்.

தன் உணர்வுகளை மறைத்துக்கொள்ள தருமராஜால் முடியவில்லை.

“நீர் உண்மையாகவே தெரியாமல் கேட்கிறீரா, இல்லாடி, தெரியாத மாதிரிக் காட்டிக் கொள்ளுகிறீரா?”

நெத்தியில் அடித்தாற்போன்ற தருமராஜின் அந்த கேள்விகளின் தொனி செல்வநாதனுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

“ இந்த தேர் தீர்த்தம் மஞ்சம் இதுகளுக்குப் பிறகு வறாதுதானே ஊஞ்சல் திருவிழா என்ன?” செல்வநாதன் சமாளிக்க முயன்றான். தருமராஜிக்கும் அது புரிந்தது. நிலைமையைச் சமூகமாக்க நினைத்து....

“நாங்கள் ரெண்டுபேரும் நிண்டெடுத்த படங்கள் இப்பவும் அல்பத்திலே இருக்கு.”

“ஹா, படம் எடுத்தநாங்களா.. எப்ப..?”

“அதுகூட உமக்கு நினைப்பில்லையா..?” கேட்டுக் கொண்டே அல்பத்தைத் கொண்டுவந்து கொடுத்தான் தருமராஜ். அதில் அவனுடைய புத்தக வெளியீட்டுப் படங்களும் நிறைந்திருந்தன.

அதைப்பற்றி ஏதாவது கேட்பான் என்று எதிர்பார்த்தான் தருமராஜ். அவன் கேட்கவில்லை.

குறைந்தபட்சம் எங்க, உமது புத்தகங்களை கொண்டு வாரும் பார்ப்பம் என்றாவது சொல்லுவான் என எதிர்பார்த்தான். சொல்லவில்லை. தர்மராஜிக்கு ‘ஊஞ்சல் பாட்டுக்கள்’ நூலுக்கான ‘சாகித்திய விருது’ கிடைத்ததைச் செல்வநாதன் தெரிந்திருந்தும் அதுபற்றி அவனிடம் ஒரு வார்த்தைகூடப்பேசவில்லை. தனது வாழ்த்தையும் தெரிவிக்கவில்லை. தர்மராஜ் சாகித்திய விருதுக்காக மற்றவர்கள் தன்னை, மெச்சவேண்டும், வாழ்த்தவேண்டும் என்று கருதாவிட்டாலும் அதை ஒரு பெரியவிசயமாகச் காட்டிக்கொள்ளக்கூடாது என்பதுபோல் அமர்ந்திருந்த செல்வநாதனைப் பார்த்தபோது, தவிர்க்கமுடியாமல் முருகபதி நினைவிற்குள் நின்றான்.

செல்வநாதன்அளவு ஒட்டித்திரியாத நட்புத்தான் முருகபதியினுடைய நட்பு. எனினும்... விருது கிடைத்ததை அறிந்து அவுஸ்ரேலியாவிலிருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தான். அவனுடன் ஒப்பிட்டுப்பார்த்த பொழுது உருவத்தால் மட்டுமல்ல.. உள்ளத்தாலும் இவன் மிகமிகச் சின்னவன் என்பது தெரிந்தது தருமராஜிற்கு.

பேச்சு இப்பொழுது அரசியலுக்குள் நுழைந்தது. இலங்கையின் அரசியல் நிலைமைகளைத் தாங்கள் மட்டுமே அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்திருப்பதுபோலவும், பொதுவாக புலம்பெயர்ந்து வாழும் நம் தமிழர்களின் இன்றைய இலங்கையின் யதார்த்தத்திற்குப் பொருந்தாத கற்பனைத் தளங்களாகவே அவிழ்த்துக் கொண்டிருந்தான் செல்வநாதன்.

தன் மறுப்புக்களைச் சரியான ஆதாரங்களுடன் தருமராஜ் கூறியபோதுதான் செல்வநாதன் சொன்னான். “ நான் பிரான்சில் ஒரு இணையத்தளம் செய்யிறன்.அதுக்காக இஞ்ச பேப்பரில என்னோட வேலை செய்த அத்தனை பேரோடையும் இப்பவரையில தொடர்பு வச்சிகொண்டுதான் இருக்கிறன். உண்மையான நியூஸ் உடனுக்குடன் எங்களுக்கு வந்திடும். “இந்த விசர்கள்தான் தருமராஜீக்குள் ‘சீர்’

என்றது". செல்வநாதனின் மிகுதி அலட்டல்களை உள்வாங்கிக் கொள்ளமனம் மறுத்தது.


மிஞ்சி மிஞ்சிப் போனால்... ஒரு இரண்டு வருடங்கள் மட்டுமே வேலை செய்த இடத்து நண்பர்களோடு தனது இணையத்தளம் என்று சுயநலத்துக்காக இன்றுவரை தொடர்பு வைத்திருக்கும் இவன் தான் பிரான்ஸில் நிலைத்து விட்டால் எங்கள் இருவருக்கும் இடையிலான அத்தனை வருடகால நட்புக்கு இனி எந்த அவசியமும் இல்லை என்றுதானே இந்த இருபது வருடகாலத்தில் ஒருமுறைகூட என்னோடு தொடர்புகொள்ள எண்ண வில்லை...? சீ... என்ன மனிதன் இவன்? நேரம் நடுநிசி பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. செல்வநாதன் விடைபெற்றுப் புறப்பட்டான்.

செத்து நாறிகிடந்த ஒரு எலியைத் தூக்கி எறியும் அருவெறுப்புடன் அவனை – அவனது நினைவுகளை அவனுடனான அந்த நட்பின் அடையாளங்களையெல்லாம் தன் உள்ளத்தின் உள்ளேயிருந்து இழுத்தெடுத்துச் சுழற்றித்தூர எறிந்தான் தருமராஜ்.

அதோ... தனக்கு முன்னாலேயே விழுந்து சிதறிக்கிடந்த தன் நினைவுகளின் மேலேயே மிதித்துக்கொண்டு கேட்டைக் கடக்கிறான் செல்வநாதன்.

முகத்தைத் தொலைத்துவிட்டு வெறும் முகவரியைத் தேடிவந்த அவனது பொய்மையை எண்ணித் தனக்குள் சிரித்தவாறே கதவை இழுத்து இறுக்கிச் சாத்தித் தாளிட்டான் தருமராஜ்.◆

**ந.தருமலிங்கம்**





# புதுவருடம்

புது வருடம் முதல் புகைபிடிப்பதில்லை
மதுவையும் தொடுவதில்லை சத்தியம்
பணம் வைத்துச் சீட்டாடுவதில்லை
அன்னியப் பெண் உறவு இல்லை
கோள் சொல்ல வாய் திறப்பதில்லை.

முழுமையான சுயக்கட்டுப்பாடு
இறைச்சி சுத்தமாகக் கூடாது
பொரித்த மீன் தின்பதில்லை
நாக்கு ருசிக்காகப் பறந்தாலும்
ஊறுகாய் தொடுவதேயில்லை.


கணக்குப்பார்த்து காய்நகர்த்துவேன்
கடன் கொடுப்பதில்லை யாருக்கும்
யாரிடமும் சண்டையும் சல்லாபமும்இல்லை
மனத்தொந்தரவுகளை வெல்ல
யோகம் பயில்வது உசிதம்.

அதிக வாசிப்பு ஆபத்து
சரியான நேரத்தில் தூங்கவேண்டும்
மேலும் தூங்குவதற்கு முன்பு ஒருவாழைப்பழம்
விடியற்காலையில் விழித்தெழுந்து
பாயிலமர்ந்து பிராத்தனை செய்து
குனிந்தெழுந்து பயிற்சி செய்யவேண்டும்
முழ ஒழுங்குடன் வாழ வேண்டும்
ஜென்மம் ஓர் அனுஷ்டானமெனக்கருதினால் போதும்.


கக்கூசில், அடித்த ஆப்புப்போலிருந்து
தறிகெட்ட எண்ணங்களுக்கு உயிர்தராமல்
நல்லபடியாக மலம் கழித்தெழுவதற்கு
வைத்தியன் சொன்ன பத்தியங்கள்
எத்தனை பயங்கரமானவை.

**கே.ஆர். டோனி**

# வந்தேன் பார்த்தேன் தோற்றேன்




பறந்தேன்
பீரசுக்கு
பார்த்தேன்
எக்வெல் கோபுரம்
இதயத்தை வென்றது
இந்தியாவின்
தாஜ்மகால்
பிரித்தேன்
பிரமிட்டின்
அதிசயத்தில்
பக்கிங்காம் மாளிகை
பறித்தது
மனதை
வந்தேன்
என் தாய்நாடு
பறந்தேன்
பலாலிக்கு
பிறந்து
தவழ்ந்து
வளர்ந்த
என் வீடு
பார்ப்பதற்கு
முடியாதாம்
பாரிய பாதுகாப்பாம்
வலயமாம்
இடிந்து போனேன்
திரும்பிய வழியில்
தேடினேன்
வீடிருந்த இடத்தில்
வெள்ளெருக்கு
பட்ட மரமாய்
முற்றத்து வேம்பு
காடடர்ந்த
தேசமாய்
என் சொந்தமண்
தோல்வியோடு
மீண்டும் விமானத்தில் . . .



"அல்வி"





**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், இலங்கை
தொலைபேசி : 021-2222393
E-mail: cpajaffna@eureka.lk